# உதயன்

சுடர் 30 கதிர் 295 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 31, வியாழக்கிழமை 17.09.2015







# சர்வதேச நீதிபதிகள் அடங்கிய கலப்பு சிறப்பு நீதிமன்றம்

## இலங்கையின் போர்க்குற்ற விசாரணை அறிக்கையை வெளியிட்டு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பரிந்துரை

ஜெனிவா, செப்ரெம்பர் 17

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நீதிபதிகள் - வழக்குத் தொடுப்பவர்கள் - சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றம் (hybrid special court) அமைக்கப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் பரிந்துரைத்துள்ளார்.



இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மீறல்கள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடத்திய விசாரணை அறிக்கையின் கண்டறிவுகள், பரிந்துரைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. அறிக்கை இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் பகுதி அறிக்கை 19 பக்கங்களைக் கொண்டது. இரண்டாவது பகுதி 261 பக்கங்களைக் கொண்டது.

இலங்கையில் 2001ஆம் ஆண்டுக்கும், 2009ஆம் ஆண்டுக்கும் இடையில் மோசமான போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்துள்ளமை ஐ.நா. விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் படைகள், அவர்களுடன் சேர்ந்தியங்கிய துணை ஆயுதக் குழுக்கள் மற்றும் விடுதலைப் புலிகளால் இந்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மீதான ஷெல் தாக்குதல், நீதிக்குப் புறம்பான படுகொலைகள், படைகளில் சிறுவர் சேர்ப்பு, சித்திரவதைகள், பாலியல் ரீதியான குற்றங்கள், பலவந்தமா

பக்கம் 24.....

## இனப்படுகொலை இடம்பெற்றதாக கருதவில்லை

ஜெனிவா, செப்.17

இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றதாக தற்போதைக்கு நாங்கள் கருதவில்லை என ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் தெரிவித்துள்ளார். நேற்றைய ஊடகவியலாளர்

பக்கம் 24.....

## இலங்கையின் படுகொலைகள் போர்க் குற்றமே

### ஐ.நா விசாரணை அறிக்கையில் விவரிப்பு

ஜெனிவா, செப்.17

போர்க் குற்றங்கள் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் எனக் கருதப்படக்கூடிய படுகொலைகளையே இலங்கையில் மோதலில் ஈடுபட்டவர்கள் மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பக்கம் 24.....

## இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை

### தமிழகச் சட்ட சபையில் நேற்று ஜெயலலிதா அதிரடித் தீர்மானம்

சென்னை, செப். 17



இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தும் வலுவான தீர்மானத்தை இந்தியாவே, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் செல்வி ஜெயலலிதாவினால் கொண்டு வரப்

பக்கம் 24.....

## நீதி நிலைநாட்டப்படும்

### இலங்கை உறுதி

கொழும்பு, செப் 17

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசேட கலப்பு நீதிமன்றம் அமைக்கப் பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதைத் தொடர்ந்து இலங்கை அரசு நீதி நிலைநாட்டப்படும்

பக்கம் 24.....

## நம்பகரமான நீதிச் செயன்முறை இலங்கையில் அவசியம் தேவை

### ஜெனிவாவில் அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, செப். 17

இலங்கையில் நம்பகரமான நீதிச் செயன்முறை அவசியம் தேவை என்று அமெரிக்கா, ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில், உண்மை - நீதி - இழப்பீடு, மீண்டும் நிகழாது

பக்கம் 24.....

## ஐ.நாவின் அறிக்கையை வரவேற்கிறது பிரிட்டன்



ஜெனிவா, செப்.17

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையை வரவேற்றுள்ள பிரிட்டன், இந்த அறிக்கையின் பரிந்துரைகளை உன்னிப்பாக ஆராயப் போவதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பிரிட்டன் வெளி விவகார அமைச்சர் ஹூகோ சுவையர், இந்த அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கையுடனும், ஐ.நா மனித உரிமைகள் சபையின் ஏனைய

பக்கம் 24.....

## தமிழருக்கு நேற்று சந்தோசமான நாள்

### விசாரணை அறிக்கை குறித்து வடக்கு முதலமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ் மக்களுக்கு நேற்றைய நாள் 'சந்தோசமான நாள்' என்று குறிப்பிட்டுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் ஐ.நா. மனித உரி மைகள் ஆணையாளர் அலு

பக்கம் 24.....

ஐ.நா. விசாரணை அறிக்கையின் தொகுப்பு 12 ஆம், 13 ஆம் பக்கங்களில்

## தமிழ் மக்களுக்கு நீதி - தீர்வு கிடைக்கச் சிறந்த சந்தர்ப்பம்

### அறிக்கையை வரவேற்கிறது கூட்டமைப்பு

ஜெனிவா, செப் 17



இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள விசாரணை அறிக்கையை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இது போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவும் நல்லதொரு சந்தர்ப்பம் என்றும் சுட்டிக்காட்டி யுள்ளது.

பக்கம் 24.....

## சர்வதேச விசாரணை ஏற்கவே மாட்டோம்

### உள்நாட்டு விசாரணையே எமது நிலைப்பாடு
### ஐ.நா அறிக்கைக்கு இலங்கை அரசு உடனடிப் பதில்

கொழும்பு, செப் 17

போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படுவதை ஏற்க முடியாது என்றும் சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளக்கூடிய உள்நாட்டு விசாரணை நடத்துவது என்பதுதான் தங்களுடைய நிலைப்பாடு என்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போரின் இறு

பக்கம் 24.....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 5 பில்லியன் டொலர் செலவில் தலைமன்னாருக்குப் பாலம்

## இந்தியப் போக்குவரத்து அமைச்சர் இலங்கைப் பிரதமருடன் பேச்சு

கொழும்பு, செப். 17

5 பில்லியன் டொலர் செலவில், தலைமன்னாரையும் – இராமேஸ்வரத்தையும் இணைக்கும் பாலத்தை அமைப்பது தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தியாவின் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி நேற்று முன்தினம் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தியாவுக்கு மூன்று நாள் பயணமாக சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



5.19 பில்லியன் டொலர் செலவில், தலை மன்னாரையும் இராமேஸ்வரத்தையும் இணைக்கும் தரைவழிப் பாலத்தை அமைக்கும் திட்டத்தை இந்திய மத்திய அரசு முன்மொழிந்துள்ளது. 22 கிலோ மீற்றர் நீளமுடையதாக இந்த இணைப்புப் பாலத்தை கடலுக்கு மேலாகவும், கடலடி சுரங்கமாகவும் அமைப்பது தொடர்பாக இந்திய மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கலந்துரையாடியுள்ளார்.

ஏற்கனவே, பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளைத் தரைவழிப் பாதைகளால் இணைக்கும் 8 பில்லியன் டொலர் திட்டத்துக்கு உதவ முன்வந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி, 5.19 பில்லியன் டொலர் செலவிலான இந்திய – இலங்கை தரைவழிப்பாதை இணைப்புத் திட்டத்துக்கு உதவ ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கது. (த–வ–5)

# இன நல்லிணக்கத்துக்கு ஐ.நா. தொழில்நுட்ப உதவி

## ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் வதிவிடப் பிரதிநிதி

புதுடில்லி, செப்.17

நீண்டகால இன மனக் குறைகளுக்கு ஒரு நிலையான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான உரையாடலின் ஊடாக நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கு ஐக்கிய நாடுகள் சபையின் தொழில்நுட்ப உதவியையும் பங்களிப்பையும் இலங்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் வழங்குவதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் உறுதியளித்துள்ளதாக ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போதே ஐ.நா. வைதிவடப் பிரதிநிதி இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

2015 செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெற உள்ள ஐ.நா பொதுச்சபையின் 70 ஆவது கூட்டத்தொடரின் பொது விவாதத்தில் தான் கலந்துகொள்ளவுள்ளதாக ஜனாதிபதி தெரி வித்தார். சகல சர்வதேச கடப்பாடுகளையும் தொடர்ந்தும் பேணுவதற்கான இலங்கையின் அர்ப்பணத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.



யு.என்.டி.பி.யினால் வெளியிடப்பட்ட இலங்கை தேசிய மானிட அபிவிருத்தி அறிக்கை உள்ளிட்ட இலங்கையில் ஐ.நா. அலுவலகத் தினால் வெளியிடப்பட்ட பல நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நண்டி ஜனாதிபதியிடம் கையளித்தார். (த–வ)

# இலங்கைத் துணைத் தூதரகம் சென்னையில் நேற்று முற்றுகை

## போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை கோரி

இலங்கையில் இறுதிப் போரில் நடந்தேறிய போர்க் குற்றங்களுக்கு, சர்வதேச விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தி, சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது. திராவிட விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்த் தேசிய விடுதலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று இந்தத் திடீர் முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர்.

இலங்கையின் இறுதிப் போரில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலான, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை நேற்றைய தினம் வெளியிடப்பட்டது. அமெரிக்க அரசு, ஆரம்பத்தில் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றி உள்ளக விசாரணை போதும் என்ற நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டுள்ளது.

உள்நாட்டு விசாரணையின் ஊடாக பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்காது போய்விடும். எனவே சர்வதேச விசாரணையே வேண்டும் என வலியுறுத்தி மாணவர் அமைப்புக்கள், தமிழகக் கட்சிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க துணைத் தூதரகத்துக்கு முன்பாக, அமெரிக்க கொடியினை எரித்துப் போராட்டங்கள் நடத்தியிருந்தன.



இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் திடீரென, திராவிட விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்த் தேசிய விடுதலைக் கழகத்தை சேர்ந்தவர்கள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டனர். இந்த முற்றுகைப் போராட்டத்தை நடத்திய நூற்றுக்கணக்கானவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (5)

# பெண் தலைமைத்துவ சம்பூர் குடும்பங்களுக்கு வீடமைக்க நடைபயணத்தின் மூலம் கனடாவில் திரட்டப்பட்டது நிதி

## எதிர்பார்த்த வெற்றி கிட்டியுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிப்பு









யாழ்ப்பாணம், செப். 17

சம்பூரில் மீள்க்குடியமர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிரந்தர வீடமைப்பதற்குரிய நிதி, கனடாவில் மேற்கொள்ளப் பட்ட நடை பயணம் மூலம் திரட்டப்பட்டுள்ளது. குறித்த நடை பயணம் எதிர்பார்த்த வெற்றியைத் தந்துள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பூரில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களில் 41 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வீடு மற்றும் கிணறு – கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கனேடிய தமிழர் பேரவையும் – திருகோணமலை நலன்புரி சங்கத்தின் கனேடிய கிளையும் இணைந்து நடை பயணத்தை ஏற்பாடு செய்திருந்தன. இந்த நடை பயணம், கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. இதில் சிறப்பு அதிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டிருந்தார்.

நடை பயணத்தின் முடிவில் ஈ.சரவணபவன் இது குறித்துத் தெரிவித்ததாவது:–

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வீடமைப்பு நிதிக்காக கனேடிய தமிழ் மக்கள் வாரி வழங்கியது, புலம்பெயர்ந்து ஏனைய நாடுகளில் வாழும் எம் உறவுகளுக்கு ஒரு நல்ல முன்மாதிரி. சகல நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழர்களும் இவ்வாறான வேலைத் திட்டங்களில் இணைந்து பணியாற்ற முன் வரவேண்டும்.

தமிழர் தாயகத்தில் ஏறக்குறைய ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருக்கின்றன. அதில் பெரும்பாலானோர் முன்னாள் போராளிகள் மற்றும் போரினாற் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் அதிகமானோர் வறு மைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற னர். நாம் அனைவரும் இணைந்து இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டியது தலையாய கடமையாக இருக்க வேண்டும். – என்றார்

நிதிசேர் நடையின் இணைத் தலைவர் குலவராஜம் தெரிவித்ததாவது:–

தாயக மக்களின் இடர்களைப் போக்கிட கனேடியத் தமிழ் மக்கள் என்றுமே பின் வாங்குபவர்கள் அல்ல. இவ்வாறான தேவைகள் எழும் போதெல்லாம் தாமாக முன்வந்து உதவிடும் பண்பு என்றுமே மாறாத ஒன்றாகும். இந்தத் திட்டத்துக்கு நிதிவழங்க மக்கள் தொடர்ந்தும் ஆர்வம் காட்டுவதாலும் மீள்குடியேற்றத்திற்கான மேலும் பல தேவைகள் தீர்க்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதாலும் இம் மாதம் 30 ஆம் திகதி வரை நிதிசேகரிப்பு நீடிக்கப்பட்டுள்ளது – என்றார்.

அண்மையில் சம்பூர்க் கிராமத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்த, திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ச. குகதாசன் கூறியதாவது:–

மழைக் காலம் அண்மிப்பதால் அதற்கு முன்னதாகக் குடியிருப்புகளை அமைக்க வேண்டியுள்ளது. குடி தண்ணீர் மற்றும் கழிவறை வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப் பட வேண்டி உள்ளன. கல்வி மற்றும் பிற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியுள்ளன – என்றார்.

இந்த நிகழ்வுக்கு கனடியத் தமிழ் மருத்துவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரிக் கனடா கிளை, ஹாட்லிக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கம், ஒன்றாரியோ முது தமிழர் மன்றம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கனடாக்கிளை, மாதகல் நலன்புரிச் சங்கம் கனடா உட்பட பல்வேறு அமைப்புகள் தம் பதாகைகள் தாங்கித் தோழமையுடன் நிதிசேர் நடை நிகழ்வில் பங்கேற்றனர். (ற–5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வதேசக் குறுந்திரைப்பட விழா யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது

## விழாவின் சின்னமாக யாழ் இசைக்கருவியும் அறிமுகம்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக சர்வதேச திரைப்பட விழா நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலை அரங்கில் வெகு கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன் போது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா வினுடைய சின்னமாக யாழ். இசைக்கருவி அறிமுகம் செய்யப்பட்டது. தென்னிந்திய திரைப்பட தொகுப்பாளர் லெனின் உட்பட பல திரை முகங்கள் சின்னத்தை வெளியிட்டு வைத்தனர்.

அத்தோடு யூரோப்பியன் பனோராமவின் 'போனிக்ஸ்' என்னும் ஜேர்மனிய குறுந்திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் 7 நாள்கள் இடம் பெறும் இந்த சர்வதேச திரைப்பட விழாவில் சுமார் 80 குறும் திரைப் படங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்தவிழாவுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்கினேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், யாழ்ப்பாண பல்ககலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம், வடக்கை சேர்ந்த குறும்பட இயக்குநர்கள், நடிகர்கள், திரைப்பட குழுவினர், தென்னிலங்கை சினிமா நட்சத்திரங்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)



## பிணை நிபந்தனையை மீறிய நபருக்கு மீண்டும் மறியல்



யாழ்ப்பாணம், செப்.17

பெண்களின் முகத்தில் கூரிய ஆயுதத்தால் கீறிக் காயம் ஏற்படுத்திய நபர் பிணையில் விடுவிக்கப்பட்ட போதும், பிணை நிபந்தனைகளை மீறியதனால் குறித்த சந்தேக நபர் பிணை நிராகரிக்கப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

மன்னார் வங்காலையைச் சேர்ந்த ஒரு குடும்பஸ்தர் முன்னைய தகராறு காரணமாக குறித்த பெண்ணின் வீட்டினுள் சென்று முரண்பட்டுள்ளார் என்றும் அதனால் அங்கு குறித்த யுவதியின் தங்கை அதில் தலையிட்டார் என்றும் அதனால் அந்த யுவதிக்கும், யுவதியின் தங்கைக்கும் முகத்தில் கூரிய ஆயுதத்தால் கீறிக் காயம் ஏற்படுத்தினார் என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். ஆரம்ப விசாரணையின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் அவர் வழக்கின் சாட்சிகளை அச்சுறுத்தினார் என்று கடந்த தவணை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்துக் குறித்த நபருக்கு வழங்கிய பிணையை ரத்துச் செய்த நீதிமன்று அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (ற-4)

## இலவச வலைகள் வழங்கக்கோரி நெடுந்தீவு மீனவர் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் , செப் .17

கடற்றொழிலுக்கான இலவச வலைகள் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தைக் கண்டித்து நெடுந்தீவு மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் மு.ப. 9.30 மணிக்கு கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் முன்பாக இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நெடுந்தீவின் 5 கடற்றொழில் சங்கங்களில் இந்த ஆர்ப்பாட்டத் தில் வலம்புரி, குழந்தை இயேசு , அலைகடல் ஆகிய கடற்றொழில் சங்கங்கள் கலந்து கொண்டன.

மாதாந்தம் இலவசமாகக் கொடுக்கப்பட்ட மண்ணெண்ணெய்க் கூப்பனுக்குப் பதிலாக வலைகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது என்றும், ஆயினும் 200 பேரில் 17 பேருக்கே அவை வழங்கப்பட்டுள்ளன என ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் தெரிவித்தனர்.

இதுகுறித்து நெடுந்தீவு வலம்புரி கடற்றொழில் சங்கத்தின் தலைவர் அருள்தாஸ் தெரிவித்ததாவது:-

மண்ணெண்ணெய்க் கூப்பனுக்குப் பதிலாக இலவச வலைகள் வழங்குவதாக உறுதியளித்தும் இன்னும் எம் கைகளில் கிடைக்கவில்லை. கடந்த ஒன்றரை வருடங்களாக, கிட்டத்தட்ட 30 தடவைகள் நெடுந்தீவிலிருந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் அமைச்சகத்துக்கு அலைந்தோம். கடற்றொழிலை தொடர்ந்து செய்ய உபகரணங்கள் இன்மையால், கூலி வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்- என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டு , தற்போது வாழ்வில் முன்னேற முயலும் கடற்றொழிலாளர்களுக்கு உரிய உதவிகள் கிடைக்க வேண்டும். அதிகாரிகளின் அக்கறையின்மை கண்டிக்கப்பட வேண்டியது. காத்திருந்த சலித்துப் போன கடற்றொழிலாளர்கள் ஜனநாயகரீதியில் போராடுகிறார்கள். ஒரு மாத காலத்துக்குள் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாது விடின் , உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொள்வோம். இது தொடர்பில் வடமாகாண சபைக்கு இந்த நிலையை விளக்குவேன். - என்றார்.

இது தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் தலைவர் பா.ரமேஷ் கண்ணாவிடம் கேட்டபோது:-

கடந்த காலத்தில் எரிபொருளின் விலை உயர்வால் , ஒரு படகுக்கு ரூபா 9 ஆயிரத்து 375 பெறுமதியான எரிபொருள் மானியக் கூப்பன் வழங்கப்பட்டது. அதன் ஒழுங்கின்மை காரணமாக ,அதற்குப்பதிலாக கடற்றொழில் உபகரணங்களான வலைகள் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

எரிபொருள் மானியக் கூப்பன் வைத்திருந்தவர்களுக்கு மட்டும் தான் அதற்கு இணையாக உபகரணங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டது.நெடுந்தீவு மாத்திரமல்ல நாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் இந்த நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். கொழும்புக் கடற்தொழில் அமைச்சில் பதியப்பட்ட விவரங்களின் வரிசையில் இம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து விவரங்களையும் நாம் கொழும்புத் தலைமையகத்திற்கு அனுப்பியுள்ளோம். 2 ஆயிரத்து 654 பேருக்கு நாடுதழுவிய ரீதியில் இம்மானியம் வழங்கத்தீர்மானித்த போதும் முதல் ஆயிரத்து 543 பேரின் பெயர்ப்பட்டியல் 2014 இல் வெளியிடப்பட்டது. இன்னும் ஆயிரத்து 111 பேரின் பெயர்ப்பட்டியல் வெளிவர இருக்கின்றது.

நாடு தழுவிய ரீதியில் செயற்படுவதும் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும், உபகரணங்களுக்கான உற்பத்தியில் ஏற்படும் காலதாமதமும் காரணங்களாகும். கால தாமதம் ஆனாலும் பதிவில் உள்ள அனைவருக்கும் இலவச உபகரணங்கள் வழங்கப்படும்.அவர்கள் புறக்கணிக்கப் படவில்லை.- என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியன் இழுவைப் படகுகளின் செயற்பாடுகளையும், பாவனைக்கு தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களின் பாவனைகளையும் வெகுவாகக் கண்டித்தனர். (ற-ரி4)

## ஈழத்து சினிமா படைப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும்

### இயக்குநர் அனோமா ராஜகருணா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.17

இலங்கை திரைப்பட வரலாற்றில் சிங்கள சினிமா பதிவு செய்யப்பட்ட அளவுக்கு ஈழத்து தமிழ் சினிமா படைப்புக்கள் பதிவு செய்யப்படவில்லை. அவை இனி மீண்டும் பதிவு செய்யப்பட வேண்டும். - இவ்வாறு தெரிவித்தார் யாழ். சர்வதேச திரைப்பட விழாவின் இயக்குநர் அனோமா ராஜகருணா.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற யாழ் சர்வதேச திரைப்பட விழாவினுடைய ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த சர்வதேச திரைப்பட விழாவினுடைய நோக்கம் சுதந்திரமான முறையில் திரைப்படங்களை காட்சிப்டுத்துதலே. இப்படியான விழாக்களின் மூலமாக தான் எல்லைகள் கடந்து, வேறுபாடுகள் கடந்து கலைஞர்களுக்கிடையில் ஒரு தொடர்பாடல் ஏற்படும்.

இலங்கைத் திரைப்பட வரலாற்றில் சிங்கள சினிமாத் துறையானது பதிவு செய்யப்பட்ட அளவுக்கு தமிழ் சினிமா பதிவு செய்யப்டாமை ஒரு பெரிய குறைபாடாகவே உள்ளது. ஈழத்து சினிமா தொடர்பில் எந்த ஒரு ஆய்வுகளும் கருத்துக்களும் பெரியளவில் இடம்பெறுவதில்லை வெளிநாட்டவர்கள் அல்லது பிற மொழிக்காரர்கள் இலங்கை சினிமா பற்றி தேடினால் கிடைப்பது சிங்கள சினிமாதான். ஜேசுராசா, காத்திகேசு சிவத்தம்பி போன்றவர்கள் இவ்வாறான பதிவு நடவடிக்கைகளில் முயற்சிகளை மேற்கொண் டார்கள். ஆனால் அது ஒரு பூரணமான பதிவு நடவடிக்கையாக அமையவில்லை.

இந்த நிலையில் தற்போது ஈழத்தில் தமிழ் சினிமா துளிர் விட ஆரம்பிக்கின்றது. இளைஞர்கள் பலர் ஆர்வத்துடன் இந்த துறைக்குள் வருகின்றனர். எனவே இனியாவது ஈழத்தின் சினிமா வரலாறு பதிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில் வரலாறுகள் பதிவுசெய்யபட வேண்டும். - என்றார். (ற-21)

## மல்லாவியில் நடந்த விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், செப்.17

முல்லைத்தீவு, மல்லாவி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மல்லாவி 17ஆவது மைல் கல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் புத்தூரை சேர்ந்த பரமேஸ்வரன் (வயது-39) என்பவரே உயிரிழந்துள்ளார். வவுனியாவை சேர்ந்த ஜெயரூபன் (வயது-28) என்பவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மல்லாவியில் இருந்து துணுக்காய் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த குடும்பஸ்தரையும் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த நபரையும் துணுக்காயில் இருந்து மல்லாவி நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான கனரக வாகனம் மோதித்தள்ளியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உடன் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இலங்கைமின்சாரசபைக்குச் சொந்தமான கனரக வாகனத்தின் சாரதியான நிசாந்த சிந்திக என்பவர் காலில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ற-21,422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் திணைக்களப் பிரச்சினைக்கு ஒரு மாதத்தில் தீர்வு: குழுவும் அமைப்பு

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் பிரச்சினைகளை கண்டறிவதற்கு விசேட குழு அமைக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அலுவலர்களின் உத்தியோகபூர்வ மன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்குமிடையே நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அரச தலைவர் ஒருவர் 20 வருடங்களுக்குப் பின்னர் சிரேஷ்ட அரச பொலிஸ் அலுவலர்களின் உத்தியோகபூர்வ மன்றத்துக்கு பயணம் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அங்கு சென்ற ஜனாதிபதியை பொலிஸ் அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

பொலிஸ் திணைக்களத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகள் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியதுடன், ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தனர். பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு தொடர்பான பிரச்சினைகள், வதிவிடப் பிரச்சினைகள் மற்றும் சம்பளப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இப்பிரச்சினைகளைச் செவிமடுத்த ஜனாதிபதி, இந்த எல்லா விடயங்களையும் உடனடித் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கக்கூடிய நியாயமான பிரச்சினைகளாகத் தான் கருதுவதாகவும் ஒரு மாத காலத்தில் படிப்படியாக இப்பிரச் சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அரசியல் அழுத்தங்களின்றி தமது கடமைகளை உச்சபட்ச திருப்தியுடன்செய்வதற்குக்கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பொலிஸ் திணைக்களத்துக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது என்று பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் இதன் போது சுட்டிக்காட்டியிருந்தார். (ற-4)

# டெங்கு சூழல் ஒழிப்பு நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தின் இரண்டாவது தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை செயற் படுத்தப்படவுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஈ.தேவநேசன் தெரிவித்துள்ளார்.

டெங்கு அபாயம் கூடியளவு பரவக்கூடிய இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் இந்த டெங்கு ஒழிப்பு இடம்பெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று புதன்கிழமை ஜே/109 கிராம அலுவலர் பிரிவிலும் நாளை வெள்ளிக்கிழமை ஜே/83, ஜே/88, நாளை மறுதினம் சனிக்கிழமை ஜே/67, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜே/103, ஜே/106, எதிர்வரும் திங்கட்கிழமை ஜே/101, ஜே/104, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜே/102, எதிர்வரும் புதன்கிழமை ஜே/85, ஜே/87 ஆகிய கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/320 கிராம அலுவலர் பிரிவான ராமாவில், ஜே/321 பிரிவான மீசாலை வடக்கு, நாளை வெள்ளிக்கிழமை ஜே/310 மட்டுவில் தெற்கு, ஜே/313 மட்டுவில் வடக்கு, எதிர்வரும் சனிக்கிழமை ஜே/300 சாவகச்சேரி நகர், ஜே/301 கோயில் குடியிருப்பு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜே/302 சங்கத்தானை ஜே/313 மீசாலை கிழக்கு ஆகிய பகுதிகளில் இடம்பெறும்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/114 கிராம அலுவலர் பிரிவு, நாளை வெள்ளிக்கிழமை ஜே/110 பிரிவு, எதிர்வரும் சனிக்கிழமை ஜே/115 மற்றும் ஜே/119, எதிர்வரும் திங்கட்கிழமை ஜே/124 மற்றும் ஜே/121 ஆகிய பகுதிகளில் இடம்பெறும்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/399, ஜே/400, ஜே/410 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலும், நாளை வெள்ளிக்கிழமை ஜே/415, ஜே/412, ஜே/413 ஆகிய பிரிவிலும், எதிர்வரும் திங்கட்கிழமை ஜே/408, ஜே/411, ஜே/404, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜே/409, ஜே/401, ஜே/403 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/370, ஜே/374, ஜே/371 ஆகிய பிரிவிலும், நாளை வெள்ளிக்கிழமை ஜே/363, ஜே/376, ஜே/364, எதிர்வரும் திங்கட்கிழமை ஜே/379, ஜே/380, ஜே/381, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜே/352, ஜே/359, ஜே/360 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று சுதுமலை தெற்கு மற்றும் வடக்கிலும், நாளை வெள்ளிக்கிழமை சாவற்கட்டு, உயரப்புலம், எதிர்வரும் சனிக்கிழமை மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய் மேற்கு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை, நவாலி வடக்கு ஆகிய இடங்களிலும் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/196, ஜே/198, ஜே/195 கிராம அலுவலர் பிரிவிலும், நாளை வெள்ளிக்கிழமை ஜே/192, ஜே/193, ஜே/194 பிரிவிலும், எதிர்வரும் திங்கட்கிழமை ஜே/200, ஜே/187, ஜே/182, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜே/203, ஜே/202, ஜே/210 ஆகிய பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/263, நாளை வெள்ளிக்கிழமை ஜே/259, எதிர்வரும் திங்கட்கிழமை ஜே/262, ஜே/269, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜே/260 கிராம அலுவலர் பிரிவிலும் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/17[illegible] ஜே/179, ஜே/180, நாளை வெள்ளிக்கிழமை ஜே/181 பிரிவிலும் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாளை வெள்ளிக்கிழமை ஜே/56, ஜே/52, எதிர்வரும் புதன்கிழமை ஜே/46, ஜே/47, ஜே/48 ஆகிய பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/13, ஜே/14, ஜே/15, ஜே/16, ஜே/17 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜே/12, ஜே/18, ஜே/19, ஜே/20, ஜே/21 ஆகிய பிரிவில் டெங்கு ஒழிப்பு இடம்பெறும்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று ஜே/22[illegible] ஜே/229, ஜே/230, ஜே/226 மற்றும் நகுலேஸ்வரம் ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு இடம்பெறும். நாளை வெள்ளிக் கிழமை ஜே/212, ஜே/213, ஜே/214, ஜே/225 ஆகிய கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெறும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்முறை டெங்கு பரவும் இடங்கள் உள்ள இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ற-4)

# முதற் திருமணத்தை மறைத்து திருமணம் செய்தவருக்கு மறியல்



யாழ்ப்பாணம், செப்.17

முதல் திருமணத்தை மறைத்து இரண்டாவது தடவை வேறொரு பெண்ணைத் திருமணம் செய்த குற்றச்சாட்டில் கைதான குடும்பஸ்தரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் முதலில் சட்ட பூர்வமாகப் பதிவுத் திருமணம் செய்துள்ளார். 2 குழந்தைகளும் உள்ளனர். அதனை மறைத்து அவர் இரண்டாவது முறையாக சட்ட பூர்வமான முறையில் திருமணம் செய்துள்ளார். திருமணம் செய்த பின்னரே அவர் ஏற்கனவே திருமணம் செய்துள்ளமை தெரியவந்தது.

அதனையடுத்தே அது தொடர்பில் மன்னார் விஷேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸில் இரண்டாவது தடவையாகத் திருமணம் செய்த பெண் முறைப்பாடு செய்துள்ளார். அவர் முதற் திருமணத்தை மறைத்துத் தன்னைத் திருமணம் செய்ததன் மூலமாக அவர் தன்னை ஏமாற்றியுள்ளார் என்று அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்து மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர்.

ஆரம்ப விசாரணையின் பின்னர் குறித்த நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-4)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்ற பட்டியல் திணைக்கள தலைவர்களுக்கு

யாழ்ப்பாணம், செப்.17

வட மாகாண சபைக்குட்பட்ட மாகாண அரச திணைக்கள அலுவலகங்களிலும் மத்திய அரச திணைக்கள அலுவலகங்களிலும் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றப் பட்டியல் மாகாண பொது நிர்வாக அமைச்சால் நேற்று அந்தந்த திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

வருடாந்த இடமாற்றலுக்கு விண்ணப்பித்த வெளி மாவட்ட அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த இடமாற்றம் குறித்து விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக ஏனைய மாவட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களுக்கு உள்ளக இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளதென்றும் ஆறு மாதங்களுக்கு முன்னர் வெளி மாவட்ட அலுவலகங்களுக்கு இடமாற்றலில் வந்த உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் யாழ்.மாவட்ட அலுவலகங்களுக்கு இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளதென்றும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

மாகாண சபை இந்த இடமாற்றலை பரிசீலனைக்கு எடுத்து நீண்ட காலமாக வெளி மாவட்ட அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்களை யாழ். மாவட்ட அலுவலகங்களுக்கு இடமாற்றல் வழங்கவேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# உலுக்குளம் வீதியை திருத்தக்கோரி பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியா, செப்.17

35 வருடத்துக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் உள்ள உலுக்குளம் வீதியை திருத்தி தருமாறு கோரி வவுனியா உலுக்குளம் பகுதியில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றுசேர்ந்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத் தனர்.

உலுக்குளம் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்களின் போக்குவரத்துக்கான பிரதான வீதியாக உலுக்குளம் வீதி காணப்படுகிறது. சுமார் 3 கிலோமீற்றர் தூரம் நீளமானது இந்த வீதி.

35 வருடங்களுக்கு மேலாக இந்த வீதி திருத்தப்படவில்லை. அதனைத் திருத்தி தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருக்தபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதையடுத்து நாம் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதிக்கு இதுகுறித்து கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்த அவர்கள், வீதியைத் திருத்தக்கோரி வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு மனு ஒன்றைக் கையளித்தனர். (ற-402)

# யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவின் நாளைய காட்சிகள்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவில் நாளை வெள்ளிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் மு.ப 10 மணிக்கு 'பிஃன்' குறுந் திரைப்படமும், நண்பகல் 12.30 மணிக்கு 'கிராண்ட் சென்றல்' திரைப்படமும், பி.ப 3 மணிக்கு 'கோட்ஸ்' திரைப்படமும், பி.ப 7 மணிக்கு 'ஹிம், கியர் ஆவ்றர்' திரைப்படமும், கார்கில்ஸ் சதுக்கத் திரையரங்கில் பி.ப 3 மணிக்கு 'பிராங்கிப்பனி' திரைப்படமும், பி.ப 7 மணிக்கு 'ஸ்கார்ஸ் ஒவ்ருமோறோ' திரைப் படமும்,

யாழ். பொது நூலகத்தில் மு.ப 10 மணிக்கு 'மாஸ்ரர் கிளாஸ்' திரைப்படமும், நண்பகல் 12.30 மணிக்கு குறுந்திரைப்படம் ஒன்றும் பி.ப 3 மணிக்கு 'லவ் மீ ஓர் லீவ் மி' திரைப்படமும் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய கூட்டணி உருவாக்கப்படும்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, செப்.17

எதிர்வரும் 22 ஆம் திகதிக்குப் பின்னர், புதிய அரசியல் கூட்டணி, அரசியல் கட்சி குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



தற்போதும், அமைச்சுப்பதவிகள் வழங்கப்படுவதால் 22 ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகளின்போது, அரச தரப்பில் இருப்பவர்கள் யார்?, எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் யார்? என்று அறிந்த பின்னர், புதிய கட்சி குறித்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், தாம் புதிய கூட்டணியை அமைக்காமல் புதிய கட்சியொன்றை அமைப்பது குறித்து ஆராய்வதாகக் கூறினார்.

அமைச்சுப் பதவி என்று அலைந்து திரியாமல், மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்பவர்களுடன் கலந்துரையாடி, ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற)



# அஸாத் சாலிக்கு எம்.பி. பதவி வழங்க வலியுறுத்திப் பேரணி

கொழும்பு, செப்.17

மேல் மாகாண சபை உறுப்பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத் சாலிக்கு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமென்று வலியுறுத்தி ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீறாவோடையில் அமைதிப் பேரணி நடைபெற்றுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அஸாத் சாலி தேர்தலில் போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் கேட்ட வேளை, தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படுமென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கேற்ப ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்களின் வெற்றிக்காக, அவர்களது தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை. அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று பேரணியில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவித்தனர்.

கல்குடா இளைஞர் அமைப்பின் தலைவர் எச்.எம்.நிஜாம்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேரணி மீறாவோடை நிஸ்வான் பள்ளிவாசல் சந்தியிலிருந்து ஆரம்பித்து மீறாவோடை ஓட்டமாவடி எல்லை வீதி வரை நடைபெற்றது. (ற)

# ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட ராஜாங்க, பிரதியமைச்சர்களின் விவரம் தருக

## சபாநாயகரின் செயலாளரிடம் பிரதமர் கோரிக்கை

கொழும்பு, செப் 17

ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய அரசில் இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களாகப் பதவியேற்றிருப்பவர்களில் ஊழல், மோசடி மற்றும் பொதுச்சொத்துகளைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களின் பெயர், விவரங்களையும் அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் பற்றியும் தனக்கு அறிவிக்கு மாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றச் சபாநாயகரின் செயலாளருக்குக் கடந்த சனிக்கிழமை பணிப்புரை விடுத்துள்ளார்.

ராஜபக்ச அரசின்போது இத்தகைய ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்களில் தற்போது இராஜாங்க, பிரதியமைச்சர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களின் விவரங்களைத் திரட்டும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகச் சபாநாயகரின் செயலாளர் அப்துல் நவுபர் ரஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் மீது ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் பற்றியும் சபாநாயகரின் செயலாளர் தனது அறிக்கையில் கட்டாயமாகக் குறிப்பிடவேண்டுமெனவும் பிரதமர் உத்தரவிட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்கள் மீது எவ்வித பாரபட்சமும் இன்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல உறுதியளித்துள்ளார். (த)

# ஐ.நாவின் பரிந்துரைகள் பாரதூரமாக அமையாது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, செப்.17

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கையில் பாரதூரமான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டாலும் பரிந்துரைகள் பாரதூரமாக அமையாது. பாரதூரமான அத்துமீறல் விசாரணைகள் வலியுறுத்தப்படமாட்டாது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என பிரதிவெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிய உள்ளக விசாரணைகளை பலப்படுத்தி அதனூடாக சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் அரசு செயற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீதான விசாரணை அறிக்கை பாரதூரமான வகையில் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசு எவ்வாறான பொறிமுறைகளைக் கையாளப் போகின்றது என்பது குறித்து ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் நடைபெற்ற ஆயுத போராட்டத்தில் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் என்பவை தொடர்பில் சர்வதேச அமைப்புகளும், இலங்கையின் தமிழர் தரப்பும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. இவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையில், குறித்த விசாரணை அறிக்கை இப்போது வெளிவரவுள்ளது. இந்த அறிக்கை பாரதூரமான அறிக்கையாக, இலங்கையின் அரச தரப்பின் மீது குற்றம் சுமத்தப்படும் என தெரிவிக்கப்பட்டாலும் அவை எந்த அளவுக்குச் சாத்தியமானது என்பது தெரியவில்லை.

ஏனெனில் அந்த அறிக்கையில் என்ன காரணிகளை முன்வைக்கப் போகின்றனர். எவ்வாறான காரணிகள் சுட்டிக்காட்டப்படும் என்ற விடயங்கள் எமக்குத் தெரியாது. ஆனால், இலங்கையின் ஆட்சி மாற்றம் இலங்கையின் ஜனநாயக செயற்பாடுகளை பலமடையச் செய்துள்ளதுடன் பிரச்சினைகள்பலதீர்க்கப்பட்டுள்ளன. ஆகவே, எமது அரசின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேசம் நல்ல நிலைப்பாட்டை கொண்டுள்ளது. ஜெனிவா கூட்டத்தொடரின் ஆரம்ப உரையின்போதும் மனித உரிமைகள் ஆணையாளர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோல், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் இலங்கையின் அண்மைக்கால ஜனநாயக மாற்றங்கள் மற்றும் மக்களிடையேயான சாதகமான வெளிப்பாடுகள் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறான நிலையில் இலங்கையின் அண்மைக்கால மாற்றங்களை கவனத்தில் கொண்டு சாதகமான முடிவுகளை ஐக்கிய நாடு கள் சபை மேற்கொள்ளும் என நம்ப முடியும். அத்தோடு அறிக்கையில் பாரதூரமான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டாலும், பரிந்துரைகள் பாரதூரமாக அமையாது. அதே போல் உள்ளக பொறிமுறைகளை கையாளும் படியான அழுத்தங்கள் கொடுக்கப்படலாம். ஆனால், பாரதூரமான அத்துமீறல் விசாரணைகள் வலியுறுத்தப்படமாட்டாது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. உள்ளக விசாரணைகளை பலப்படுத்தி அதனூடாக சந்தேகங்களைத் தீர்க்கவே நாம் முயற்சிக்கின்றோம். அதேபோல் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை நாம் நன்கு அறிந்துள்ளோம். அவர்கள் எவ்வாறான நீதியை எதிர்பார்க்கின்றனர் என்பது எமக்குத் தெரியும். ஆகவே அனைத்து வகையிலும் இந்த சிக்கல் நிலைமையை தீர்க்கும் முயற்சிகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

அதேபோல் இலங்கை இராணுவத்தின் சேவைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் மூலமாகவே இந்த நாட்டில் அமைதி உருவாகியுள்ளது. அவர்களின் சேவையை நாம் தட்டிக்கழிக்க முடியாது. ஆயினும் பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் மனிதவுரிமை மீறல்களை இராணுவம் மேற்கொண்டிருக்குமாயின் அதனை அரசு கவனத்தில் கொள்ளும் – என்றார். (ற)

# சர்வதேசத் தலையீட்டுக்கு அரசு இட்மளிக்கக் கூடாது

## ரில்வின் சில்வா வலியுறுத்துகின்றார்

கொழும்பு, செப்.17

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசத் தலையீட்டுக்கு அரசு இடமளிக்கக் கூடாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மெய்யானதும் கிரமமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது.மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

உண்மை, நீதி, நல்லிணக்கம் இவ்வாறானசம்பவங்கள்ஏற்படுவதனைத் தடுக்கும் ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டியது அவசியமானது. வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் தங்களது பிரச்சினைகளை கூறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது முக்கியமானது – என்றார். (ற)

# தந்தை எதிர்பார்த்த அமைச்சு தற்போது எனக்குக் கிடைத்தது

## பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, செப்.17

தந்தை எதிர்பார்த்த அமைச்சுப் பதவி எனக்கு கிடைத்துள்ளது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



1977ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் தனது தந்தை காமினி திஸாநாயக்க இந்த அமைச்சுப் பதவியை எதிர்பார்த்திருந்தார். அந்தக் காலத்தில் காணப்பட்ட மிகவும் பலம்பொருந்திய அமைச்சு பெருந்தோட்டத்துறை அமைச்சாகும். எனினும் இன்று அந்த நிலைமை மாறியுள்ளது. ஏனெனில் பல தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

பெருந்தோட்டத்துறையில் சுமார் 10 லட்சம் ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர். பெருந்தோட்டத் துறை ஊழியர்கள் இன்று நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அந்த மக்கள் எம்மிடமிருந்து சேவைகளை எதிர்பார்க்கின்றனர். எனவே பெருந்தோட்டத்துறையை புதிய பரிமாணமொன்றுக்கு நகர்த்த வேண்டும்.

பல்வேறு காரணிகளால் பின்னடைவை எதிர்நோக்கி வரும் பெருந்தோட்டத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். புதிய அரசின் கீழ் நுவரெலியா மாவட்டத்துக்கு அபிவிருத்தியின் நலன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இளைய தலைமுறையினரின் காணி மற்றும் தொழில் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.– என்றார்.

அண்மையில் தலவாக்கலை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவா இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள் விரும்பினால் மட்டுமே விலகுவேன்

### சிரிய அதிபர் தெரிவிப்பு

டமஸ்கஸ், செப் .17

மக்கள் விரும்பினால் மட்டுமே நான் பதவியை விட்டு விலகுவேன் என சிரிய அதிபர் பஷார் அல் அஸாத் தெரிவித்திருக்கிறார். ரஷ்ய ஊடகம் ஒன்றிடம் பேசிய அஸாத், மேற்கு நாடுகள் அழுத்தம் தருகின்றன என்பதற்காகப் பதவி விலகமுடியாது என்றும் கூறியிருக்கிறார்.



பயங்கரவாதத்திலிருந்து தப்ப விரும்புவதாலயே பெரிய அளவில் மக்கள் சிரியாவிலிருந்து வெளியேறுகிறார்களே தவிர, சிரிய ஆட்சியின் காரணமாகஅல்ல என் றும் அவர் கூறியிருக்கிறார். டமஸ்கஸில் இருக்கும் அஸாத் தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவளிப்பதில் ரஷ்ய உதாரணத்தை மேலும் பல நாடுகள் பின்பற்ற வேண்டும் என ரஷ்ய அதிபர் கூறியதற்கு அடுத்த நாள், அஸாத் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ரஷ்யா அஸாத்துக்கு அளிக்கும் ஆதரவைத் தொடர்வதன் மூலம் சிரியாவில் நடக்கும் மோதல் நீடிக்கக்கூடும் என அமெரிக்க வெளியு றவுத்துறைச் செயலர் ஜேன் கெர்ரி எச்சரித்துள்ளார். (த–ரி4)



1950 ஆம் ஆண்டில் இருந்து 1953 ஆம் ஆண்டு வரையிலான கொரியப் போரில் , ஐக்கிய நாடுகளின் ஆதரவுடன் ,தென் கொரியா தீர்க்கமான மாற்றம் அடங்கிய வெற்றியைப் பெற்றது. இதன் 65 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதத்தில்,தென் கொரியாவின் கடற்படை, இராணுவ வீரர்கள் பாரசூட் மூலமாகத் தரையிறங்கிச் சாகசம் புரிந்தனர். (த–ரி4)

## ஜேர்மனியின் போன் நகர மேயராக இந்தியர் தெரிவு

போன், செப் .17

ஜேர்மன் நாட்டின் முன்னாள் தலைநகரானபோன் நகருக்குப் புதிய மேயராகத் தெரிவாகி இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அசோக் ஶ்ரீதரன் ஒக்ரோபர் 21ஆம் திகதி பதவிஏற்றுக்கொள்கிறார்.



போன் நகர் மேயர் தேர்தல்கடந்தஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் போட்டி கடுமையாக இருக்கும் என்றும், குறுகிய வாக்கு எண்ணிக்கையில் வெற்றி நிர்ணயிக்கப்படும் என்றும் கருத்துக் கணிப்புகள் தெரிவித்ததைத் தவிடுப் பொடியாக்கி அதிக வாக்கு வித்தியாசத்தில் முதன்முறையாக இந்தியரான அசோக் ஶ்ரீதரனை மேயராக மக்கள் தெரிவு செய்துள்ளனர். ஶ்ரீதரனின் தந்தை இந்தியர். தாய் ஜேர்மனியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி4)

## பி.எம்.டபிள்யு நிறுவனத்தின் தலைமை அதிகாரி சறுக்கல்



வொஷிங்டன் ,செப் .17.

பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான பி.எம்.டபிள்யுவின் தலைமை நிர்வாக அதிகாரி.ஹரல்ட் குருஜெர், பிராங்போர்ட் வாகன நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் சந்திப்பின்போது சறுக்கி விழுந்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியின் புதிய வாகனக் குழுவினருடன் விளக்கவுரையாற்றிக் கொண்டிருக்கும்போது அவர் சடுதியாக சறுக்கி வீழ்ந்தார். அவரது உதவியாளர்கள் அவரைத் தாங்கிப் பிடித்தபோதும் அவரால் எழுந்து நிற்க முடியாததால், அவர் உதவியாளர்களின் உதவியுடன் மேடையை விட்டு வெளியேறினார்.

பி.எம்.டபிள்யுவின்ஊடகப்பேச்சாளர் மக்ஸ்சி மில்லியன் இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில், தொடர்ந்து சிகிச்சைக்குஉட்பட்டுவரும்49வயதான ஹரல்ட் குருஜெர், உடல்நலக் குறைவு இருந்தபோதிலும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்–என்றார். (த–ரி4)

# காஷ்மீர் பிரச்சினையை சேர்த்தால் மட்டுமே இந்தியாவுடன் பேச்சு

## பாகிஸ்தான் திட்டவட்டம்

இஸ்லாமாபாத், செப்.17,

காஷ்மீர் பிரச்சினையை விவாதப் பொருளாகச் சேர்த்தால் மட்டுமே இந்தியாவுடன் பேச்சு நடத்த முடியும் என்று பாகிஸ்தான் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் நடைபெறும் ஐ.நா. சபை கூட்டத்தில் பங்கேற்கும் பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பைச் சந்தித்து பேசுவார் என்று கூறப்பட்டு வந்த நிலையில்,அந்தநாடுஇவ்வாறுகூறியுள்ளது. அண்டைய நாடுகளுடன் நிபந்தனை அடிப்படையிலான பேச்சுக்களை பாகிஸ்தான் நடத்தாது என்று அந்நாட்டின் தேசிய ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதம் குறித்து மட்டுமே இந்தியா பேச விரும்புவதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், காஷ்மீர் பிரச்சினை உள்ளிட்ட அனைத்து விவகாரங்கள் குறித்தும் பேச்சு நடத்த வேண்டும் என்றும் பாகிஸ்தான் விரும்புவதாகக் கூறியுள்ளார். நியூயோர்க்கில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேச வாய்ப்பு உள்ளதா என்ற கேள்விக்குப் பதில் அளித்த அவர் இதற்கான முயற்சிகளை இந்தியா தான் மேற்கொள்ள வேண்டும்–என்றார். ஹுரியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதில் பாகிஸ்தான் உறுதியாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து பேசுவது பற்றி இந்தியாவிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். ஒரு வேளை அழைப்பு வந்தால் காஷ்மீர் உள்ளிட்ட நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளைப் பற்றியும் பேச்சு நடத்த வேண்டும் என்பதே தங்களது நிலைப்பாடு என்று அந்த நாட்டுத் தேசிய ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் தெரிவித்துள்ளார். (த–ரி4)

## பக்கவாதம் பாதித்த இளைஞருக்கு உணர்வுடன் கூடிய செயற்கைக் கை



வொஷிங்டன், செப் .17

அமெரிக்காவில் இளைஞர் ஒருவர் முதுகுத் தண்டுவடத்தில் ஏற்பட்ட காயத்தால் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார். இதனால் அவரது ஒரு கை செயல் இழந்தது. கடந்த 10 ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்ட அந்தக் கை செயற்படாது இருந்து வந்தது. எனவே, அவர் நரம்பியல் நிபுணர்களிடம் சிகிச்சை பெற்று வந்தார்.

இவ்வாறு அவப்படுபவர்களின் குறையைப் போக்கப் புதிய வழிமுறையை நிபுணர்கள் ஆராய்ந்து வந்தனர். இந்த நிலையில் அமெரிக்காவின் ராணுவ ஆராய்ச்சி மையம் தொடு உணர்வுகளுடன் கூடிய புதுவிதமான செயற்கைக் கைகளைத் தயாரித்தது. செயற்கைக் கை செயற்பாடுகளை மூளையுடன் இணைக்கும் வகையில் தொழில் நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் கை சமீபத்தில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட குறித்த 28 வயது இளைஞருக்குப் பொருத்தப்பட்டது.

இதன் மூலம் உணர்வுகளுடன் கூடிய செயற்கைக் கை பொருத்தப்பட்ட முதல் நபர் என்ற பெருமையை குறித்த அமெரிக்க இளைஞர்பெற்றுள்ளார். (த–ரி4)

## ஸ்பெயினில் கஞ்சா

ஸ்பெயின் நாட்டில், மிகப் பெரிய அளவில் கஞ்சாப் பயிர் விளைவித்ததை அந்நாட்டுப் பொலிஸார் கடந்த வாரத்தில் கண்டுபிடித்திருக்கின்றனர். கஞ்சாப் பயிர்விளைவித்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது சிறையிலிருக்கும் ஒரு நபரின் சார்பில் அவர்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தநபர்சிறையிலிருந்து விடுமுறையில் வெளியில் வந்தபோது, அல்பசெடெ என்ற பகுதியில் ஒரு இடத்தை வாங்கியதாகவும், இந்த ஆறுபேரை வைத்து சுமார் 75 ஆயிரம் கஞ்சாச் செடிகளை அங்கே வளர்த்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச் செடிகளிலிருந்து வரும் வாசனை பரவுவதைத் தடுக்க, இந்தப் பகுதியைச் சுற்றி சாணத்தினாலும் குப்பைகளினாலும் சுவர் போன்ற தடுப்பை அவர்கள் எழுப்பியிருந்ததாகப்பொலிஸார் தெரிவித்தனர். (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கா விபத்தில் உயிரிழந்தோருக்கு தலா 4 கோடி ரூபா

## சவூதி அரசு அறிவிப்பு






ரியாத், செப்.17

சவூதி அரேபியா நாட்டில் உள்ள முஸ்லிம்களின் புனித நகரமான மக்கா நகரின் பெரிய மசூதியில் கடந்த வாரம் பாரந்தூக்கி சரிந்து விழுந்த விபத்தில் 115 ஹஜ் யாத்திரிகர்கள் உயிரிழந்தனர். அவர்களில் 11 பேர் இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து ஹஜ் யாத்திரை செய்யப்புறப்பட்டுச் சென்றவர்கள் எனத் தெரியவந்துள்ளது. இதுதவிர, சுமார் 200 யாத்திரிகர்கள் காயங்களுடன் மக்கா நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக நடத்தப்பட்ட உயர்மட்டக் குழுவின் விசாரணை அறிக்கை நேற்றுச் சவூதி மன்னர் சல்மானிடம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், இந்த விபத்தில் உயிரிழந்த யாத்திரிகர்கள் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரியால் (இலங்கை மதிப்பில் 4 கோடி ரூபா) நிவாரணம் வழங்குமாறு மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளதாகச் சவூதி அரசு அறிவித்துள்ளது.

விபத்தில் காயம் அடைந்து உடலுறுப்பு ஊனம் அடைந்தவர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்படும். காயம் அடைந்தவர்களுக்கு தலா 5 லசம் ரியால்கள் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)




## சிம்பாப்வே ஜனாதிபதி நேற்றுத் தவறான உரை

### அவரது உடல்நிலை பற்றி எதிர்க்கட்சிகள் சந்தேகம்

ஹராரே, செப். 17,

சிம்பாப்வேயில் நேற்றுத் தொடங்கிய நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி றொபேர்ட் முகாபே, ஒரு மாதத்துக்கு முன்பு படித்த உரையை மீண்டும் படித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனாதிபதி றொபேர்ட் முகாபே தான் வாசிக்க வேண்டிய உரைக்குப் பதிலாக வேறு தவறான பழைய உரையைப் படிக்க ஆரம்பித்ததும், தொலைக்காட்சியின் நேரடி ஒலிபரப்பு உடனடியாக நிறுத்தப்பட்டது. அவர் வாசித்த உரை, அவர் கடந்த மாதம் ஆற்றிய உரையாகும். ஜனாதிபதியின் செயலகத்தில் நடந்த குழப்பத்தின் காரணமாகவே தவறு நிகழ்ந்துவிட்டதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் ஜனாதிபதி யின் உடல் நிலை பற்றிச் சந்தேகமும் எழுப்பியுள்ளன. (த-ரி4)

## விரோதம் காட்டினால் பதிலடி கொடுக்கத் தயார்

### அமெரிக்காவை எச்சரித்த வடகொரியா



பியங்யாங்,செப்.17

எந்த நேரத்திலும் போருக்குத் தயார் என அமெரிக்கா மற்றும் அதன் கூட்டுநாடுகளுக்கு வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.வட கொரியாவின் அணு ஆயுத மையமான யோங்பியான் மீண்டும் செயற்பட தொடங்கியுள்ளதாக வட கொரியப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த மையத்தில் யுரேனியம் மற்றும் புளுட்டோனியம் உற்பத்தி மிகப் பெரிய அளவாக இருந்து வருகிறது. இது குறித்து உள்நாட்டு ஊடகத்துக்கு பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் கூறும்போது, அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளும் எங்களிடம் தொடர்ந்து விரோதப் போக்கைக் காட்டினால் அதற்கு நாங்கள் பதில் அளிக்கத் தயாராக உள்ளோம்.

எங்களது மையங்களை அணு ஆயுதங்களால் நிரப்பியுள்ளோம். எந்த நேரத்திலும் எதிரிக்குப் பதில் கூற அவை தயாராக உள்ளன என்று கூறியுள்ளனர். (த-ரி4)

## சிறுநீரகத்தை விற்றாவது 'ஐபோன்' வாங்க வேண்டும்

### இளைஞர்களின் விபரீத முயற்சி




பீஜிங், செப்.17

'ஐபோன்' மோகத்தில் மக்கள் சிக்கித் திளைக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக சீனாவில் இரண்டு இளைஞர்கள் மேற்கொண்ட செயற்பாடு அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. (Iphone 6S) ஐபோன் சிக்ஸ் எஸ் தற்போது தான் சந்தைக்கு வந்து மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகிறது. இந்த நிலையில், சீனாவைச் சேர்ந்த வூ மற்றும் ஹுஆங் ஆகிய இரு நண்பர்கள், ஐபோன் வாங்க ஆசைப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களிடம் ஐபோன் வாங்கப் பணம் இல்லாததால் தங்களுடைய சிறுநீரத்தை விற்பனை செய்து அதில் வரும் பணத்தைக் கொண்டு ஐபோன் வாங்க முடிவு செய்த இவர்கள், இணையத்தளம் மூலம் சிறுநீரக விற்பனைத் தரகரைத் [illegible] கொண்டுள்ளனர். ஆனால் [illegible] படி குறிப்பிட்ட இடத்துக்குத் தரகர் வராத காரணத்தால் ஏமாற்றமடைந்தனர். இதனைத் தொடர்ந்து ஹுஆங் என்பவர் சிறுநீரகத்தை விற்று எப்படியாவது ஐபோன் வாங்கி வருவேன் என்று வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். ஆனால் நாள்கள் செல்லச் செல்ல இவர் திரும்பி வராத காரணத்தால் இவரது நண்பர் பொலிசில் புகார் அளித்துள்ளார்.

தற்போது பொலிசார் காணாமல்போன நபரைத் தேடி வருகின்றனர்.

(த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு யானைகள் அட்டகாசம் மூதூரில் வெகுவாக அதிகரிப்பு

## அந்தப் பகுதி மக்கள் விசனம்

திருகோணமலை, செப்.17

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலத்தடிச்சேனை, ஆசாத் நகர், ஜின்னா புரம், ஸ்ரீநாராயணபுரம், முன்னம் புடி வெட்டை போன்ற கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் பல முறை தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பகல் நேரத்தில் காட்டு யானைகள் பெருவெளிகுளத்துக்கு அருகில் உள்ள சிறு காட்டுப்பகுதிக்குள் தரித்து நின்று, இரவு நேரத்தில் அட்டகாசம் செய்வதாகவும் இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து திருகோணமலை மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்ததாவது:-

மாவட்டத்தில் கூடுதலான இடங்களில் யானைகள் அட்டகாசம் செய்து வருவதாக முறைப்பாடுகள் வந்தவண்ணம் உள்ளன. இந்த வருட இறுதிக்குள் யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 30 வீதமான பணத்தை யானை மின் வேலி அமைக்க ஒதுக்கப்பட்டுள்ளது. - என்றார். (ற)

# தொடரும் வாழைக்குலைத் திருட்டால் செய்வதறியாது தவிக்கும் விவசாயிகள்

வலி. வடக்கு, செப்.17

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வாழைக்குலைக் களவுகளால் வாழைச் செய்கையாளர்கள் செய்வதறியாது தவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவும் ஈவினைப் பகுதியில் முப்பத்தைந்து முதல் நாற்பது வரையான வாழைக்குலைகள் திருட்டுப் போயுள்ளன என்றும் இவற்றின் பெறுமதி சுமார் அறுபதாயிரம் ரூபா வரையில் இருக்கும் எனவும் பாதிக்கப்பட்ட வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே இந்தப் பகுதியில் இடம்பெறும் வாழைக் குலைக் களவுகள் மற்றும் தோட்டங்களில் இடம்பெறும் களவுகள் சம்பந்தமாக விவசாயிகளும் கிராம அலுவலர்களும் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போது பல தடவைகள் சுன்னாகம் பொலிஸாருக்குத் தெரிவித்திருந்தும் இது வரையில் எந்த வகையான ஆக்க பூர்வமான நடவடிக்கைளும் மேற் கொள்ளப்படவில்லை என்று அவர்கள் விரக்தியுடன் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளின் எல்லையில் அமைந்துள்ள இந்தக் கிராமங்களில் இரவு நேரத்தில் வாகனங்களில் வந்து வாழைக் குலைகளை திருடிச் செல்லும் திருடர்கள் எவ்வாறு இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிசாரிடம் அகப்படாமல் தப்பிச் செல்கின்றார்கள் எனவும் பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ற-86)

# புலிமுகச் சிலந்திக் கடிக்கு இலக்கானார் குடும்பப் பெண்

சாவகச்சேரி, செப்.17

புலிமுகச் சிலந்தி கடித்து குடும்பப் பெண்ணொருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம் பெற்றது.

கடைக்குச் செல்வதற்காக பெட்டிக்குள்ளிருந்த உடையை எடுத்து உதறியபோது அதனுள்ளிருந்து வீழ்ந்த புலிமுகச் சிலந்தி பெண்ணின் காலில் கடித்துள்ளது.

சாவகச்சேரி ஆடியம்பிட்டி வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் நிர்மலா ( வயது 45 ) என்பவரே பாதிக்கப்பட்டு சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் நலத் திட்டங்கள்

கொழும்பு, செப்.17

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பல சிறுவர் நலத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன என்று மக்கள் வங்கி அறிவித்துள்ளது. இதனடிப்படையில் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை, சிறுவர்களுக்கான பல நலத்திட்டங்களை முன்வைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் சாவகச்சேரி கிளையிலும் மற்றும் அதன் கைதடி, கொடிகாமம் சேவை நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படும் ரூபா 500க்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்களுக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படுவதுடன் கணக்கின் மீதிக்கேற்ப மேலதிக பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது. (ற-131)

# பாலியல் துஷ்பிரயோகக் குற்றத்துக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும்

## அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, செப்.17

சிறுவர்கள் மற்றும் மகளிர் பாலியல் துஷ்பிரயோக குற்றத்தைப் புரிபவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் மற்றும் மகளிர் சமூகத்தை பாதுகாப்பதற்கும், அவர்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சும் ஒன்றிணைந்து, தேசிய ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளன என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் தேசிய வேலைத் திட்டத்தை மீறுவோருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மகளிர் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திரானி பண்டார, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த வைபத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:-

சிறுவர்களுக்கும் மகளிருக்கும் எதிராக இடம்பெறும் துஷ்பிரயோகங்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்காகவே நாம் இவ்வாறானதொரு திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதையும் மீறி தவறுகள் நடைபெறுமாயின், குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். துஷ்பிரயோக சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிக்கு தண்டனை வழங்குவதற்கு தேசிய அரசு தான் அவசியம் என்றில்லை– என்றார். (ற)

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணம் இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் சைவ மகாஜன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலைச் சமூகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-ரி2)

# இராஜகோபுர கால்கோள்விழா

யாழ்ப்பாணம், செப். 17

அருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய இராஜகோபுர அடிக்கல் நடும் விழா இன்று வியாழக்கிழமை 17ஆம் திகதி நண்பகல் 12 மணி தொடக்கம் 12.15 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

வீரகத்திப் பிள்ளையார், ஸ்ரீ பரு[illegible]தவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆகிய இரு சந்நிதான மஹா துவாரங்களுக்கும் இராஜகோபுரம் அமைக்கப்படவுள்ளன என்றும் இந்தத் திருப்பணிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அடியவர்கள் மனமுவந்து நிதியுதவி வழங்குமாறும் ஆலயப் பரிபாலன சபையினரும் திருப்பணிச் சபையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-ரி2)


## வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபை

மேற்படி சபையின் மாவட்டச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### மாவட்டச் செயலாளர் பதவி

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி - மாவட்டச் செயலாளர்
02. சம்பளக் குறி இல: 114/7
03. சம்பள அளவுத்திட்டம்: 11450 -145 × 10 -160×10 - 14600 (66/2006 இன்படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 08 ஆவது சம்பளத்திட்ட முகாமை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான காரியாலய உதவியாளர் அல்லது அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் காரியாலய முகாமை அல்லது செயலாளர் அலுவல்கள் அல்லது பொதுசனத்தொடர்பு அலுவல்களில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. பட்டயம் பெற்ற செயலாளர் மற்றும் நிர்வாகத்தினர் நிறுவனம் தொடர்புபட்ட அங்கத்துவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் செயலாளர் அலுவல்களில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஈ. சட்டத்தரணியுடன் செயலாளர் அலுவல்களில் நான்கு (04)வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

உ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் காரியாலய முகாமையாளர் அல்லது பணிப்பாளர் சபை செயலாளர் அல்லது பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர் பதவியொன்றில் எட்டு (08) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

04. வயதெல்லை : 25 - 45 இற்கும் உட்பட இருத்தல்
05. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் உடையவர்கள், உங்கள் சுயவிவரத்தைப் பூர்த்தி செய்து, பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
06. விண்ணப்ப முடிவுதிகதி: 12.10.2015
07. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையது ஆகாது என்பதுடன், அவர்கள் பதவிக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை, சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல்,விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
08. வவுனியா பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

இ.சுப்பிரமணியம் J.P.
தலைவர்,
வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபை,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா 024 - 2220 528

16.09.2015

(63879) (13.15.17)


# குளவிக் கொட்டுக்கு இலக்காகி 20 பேர் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, செப்.17

முல்லைத்தீவு மாவட்டம் யோகபுரம் மகா வித்தியாலயத்துக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் 15 பாடசாலை மாணவர்கள் உட்பட 20 பேர் பாதிக்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மல்லாவி யோகபுரம் பகுதியில் காலையில் வீதியால் நடந்து சென்றவர்களை கருங்குளவிக்கூட்டம் ஒன்று துரத்தித் துரத்தி தாக்கியுள்ளது. இதனால் குறித்த வீதியின் ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்த யோகபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் 15 பேர் அடங்கலாக மொத்தம் 20 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மல்லாவி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-101)

# கட்டட நிர்மாணம் குறித்த நல்லூர் பிரதேச சபையின் அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப். 17

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் அமைக்கப்படும் எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் சபையின் அனுமதியை பெற்றே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அவ் வாறில்லாத கட்டடங்கள்யாவும் சபையால் உடனடியாகவே சட்ட நடவடிக்கை மூலம் அகற்றப்படும் எனவும் இது தொடர்பில் மக்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்பதாகவும் நல்லூர் பிரதேசசபை செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையில் சாரத்தியம்: ரூ.19ஆயிரம் அபராதம்

சாவகச்சேரி, செப்.17

ஆவணங்களின்றி, மது போதையில் உழவு இயந்திரம் செலுத்திய கைதடி வாசியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று 19 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. சாரத்திய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரி செலுத்திய ஆவணம் ஆகியவை இன்றி மது போதையில் உழவு இயந்திரத்தைச் செலுத்திய சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் நான்கு குற்றங்களுக்குமாக 19 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ற)

## விதிமுறைகளை மீறி பயணித்தவருக்கு அபராதம்

சாவகச்சேரி, செப்.17

கையடக்கத் தொலைபேசியில் உரையாடியபடி தவறான நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நல்லூர் நாயன்மார்க்கட்டு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் தொலைபேசியில் உரையாடிய நிலையில் வாகனம் செலுத்தியமைக்கு 3 ஆயிரம் ரூபாவும், தவறான நிலையில் வாகனம் செலுத்தியமைக்கு 3 ஆயிரம் ரூபாவுமாக 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ற)

## போதையில் சாரத்தியம்: சாரதி அனுமதி பத்திரம் ரத்து

சாவகச்சேரி, செப்.17

மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு அரச செலவாக 5 ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் உத்தரவிடப்பட்ட துடன், சாரதிய அனுமதிப்பத்திரத்தை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக இருவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இருவரும் சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றில் முற்பட்டமையால் அரச செலவாக ஒருவருக்கு 5 ஆயிரத்து 500 ரூபாவும், மற்றவருக்கு 5 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டு, இருவரின் சாரத்திய அனுமதிப்பத்திரங்களையும் நீதிமன்றில் மூன்று மாதங்கள்தடுத்து வைக்குமாறும் உத்தர விடப்பட்டது. அதேவேளை– சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய மேலும் இருவருக்கு தலா 7 ஆயிரத்த 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற)

## ஆவணிச் சதுர்த்தி

கொழும்புத்துறை மேற்கு, விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும். (ற–17)




### யாழ் நல்லூர் நாவலர் வீதி சீரடி சாயி மந்திரின் 7 ஆவது வருட வசந்த உற்ஷவம்

அன்பான அடியார்களே!

18.09.2015 மாலை 4.30 மணிக்கு- கொடியேற்றம்
19.09.2015 மாலை 4.30 மணிக்கு- மயில் வாகனம்
20.09.2015 மாலை 4.30 மணிக்கு- பல்க்கி
21.09.2015 மாலை 4.30 மணிக்கு- அன்னவாகனம்
22.09.2015 மாலை 4.30 மணிக்கு- கப்பல் திருவிழா
23.09.2015 மாலை 4.30 மணிக்கு- சர்ப்ப வாகனம்
24.09.2015 மாலை 4.30 மணிக்கு -குதிரை வாகனம்
25.09.2015 மாலை 6.00 மணிக்கு - சப்பறம்
26.09.2015 மாலை 5.00 மணிக்கு - தேர்த்திருவிழா
27.09.2015 மாலை 4 மணிக்கு - தீர்த்தம்,கொடியிறக்கம்
28.09.2015 மாலை 5 மணிக்கு -லெண்டித்தோட்ட உற்ஷவம்
29.09..2015 மாலை 5 மணிக்கு - வைரவர் மடை(நாய் வாகனம்)

அனைவரும் வருக! சாயிநாதன் அருள் பெறுக!

**"சீரடி சாயி மந்திர்"**

514,நாவலர் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்

T.P:- 077 722 2568,077 481 5336

(64598) (12.15)



**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி தனங்கிளப்புப் பிரிவு அறுகுவெளியில் தென்னைச் செய்கைக்கு ஏற்ற நிலப்பரப்பு 27 காணி விற்பனைக்குண்டு.( பூநகரி- யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் )

தொடர்பு: 071 534 6641, 077 471 3097



**பெண் வேலையாள் தேவை**

பருத்தித்துறை,புத்தூரில் அமைந்துள்ள மிக்சர் கடை ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை. அப் பிரதேசத்துக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 552 1475



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி
செல்வி செல்வராஜன் சுமித்ரா
தேசிய நிலை தமிழ்த் தினப் போட்டிகளில்
குறுநாடக பிரதியாக்கப் போட்டியில்
தங்கப்பதக்கம் பெற்று கல்லூரிக்கு பெருமை
சேர்த்தமைக்கு பாராட்டுவதுடன் போட்டியில்
தேசிய நிலையில் முதலிடம்பெற ஊக்குவித்த
கல்லூரி அதிபர், ஆசிரியை திருமதி [illegible]
சிவகுமாரன் மற்றும் ஆசிரியர்களையும்
மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்.
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,
மீசாலை.

(18862) (14)



### யா/இணுவில் மத்திய கல்லூரி

இணுவில், சுன்னாகம்.

### வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் - 2015

காலம்: 18.09.2015 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பி.ப. 2.00 மணி
இடம் : சைவமகாஜன மண்டபம் சரஸ்வதி கலையரங்கம்.
தலைவர்: **இ.துரைசிங்கம்** அவர்கள் - கல்லூரி முதல்வர்

ஆசியுரை

செஞ்சொற்செல்வர் கலாநிதி **ஆறுதிருமுருகன்** அவர்கள்
தலைவர்-துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

பிரதமவிருந்தினர்

**த. குருகுலராசா** அவர்கள்
கௌரவ அமைச்சர் - கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர்விவகாரம், வடக்குமாகாணம்.

சிறப்பு விருந்தினர்

**இ.இரவீந்திரன்** அவர்கள்
செயலாளர்- கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர்விவகார அமைச்சு, வடக்குமாகாணம்.

கௌரவ விருந்தினர்கள்

**செ.சந்திரராஜா** அவர்கள்
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

**பா.ரமேஸ்கண்ணா** (பழையமாணவன்)
உதவிப்பணிப்பாளர் - கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம். யாழ்மாவட்டம்.

**வே.பிறேம்குமார்** (பழையமாணவன்)
பிரதிப்பணிப்பாளர்- நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்குமாகாணம்.

நன்றியுரை

**ச.சந்திரகுமார்**
செயலாளர்- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(64712) (13.15)



**University of Jaffna - Srilanka**
**Faculty of Management Studies & Commerce**
**Postgraduate Diploma in Management (PGDM)**
**Leading to the Degree in Master of Business Adiministration(MBA)**
**Intake II - 2015/2016**

### Extension of Closing date for Applications

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the postgraduate Diploma in Management(PGDM) for the academic year 2015/2016 and invites applications for the admission from suitability Qulified candidates. Details of the courses can be of optained form thefaculty of Management Studies and commerce or via the internet on the faculty website:- **http//www.jfn.ac.lk/maco**

### ELIGIBILITY REQUIREMENTS

1.Graduates in any discipline in any recogizned University

or

2.Professional Qualifications with five years experience.

or

3.Any other Qualifications and/or experience, which would be acceptable to the selection board with the approval of the Senate.

### PROGRAMME STRUCTURE

Structure - Semester based Course Unit System
Semester duration - Each semester extends for 20 weeks
Duration - Two years
Medium of instruction - English

### COURSE FEE

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below.

| Detail | Year 1(PGDM) | Year 2 (MBA) |
|---|---|---|
| Registration/Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| Total | LKR 200,000 | LKR 150,000 |

Applacition Fees: LKR 2000/=

### APPLICATION PROCEDURE

Application form & Paying in voucher can be downolded from the Faculty website at http://www.jfn.ac.lk/maco or obtained from Dean,**Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli, Jaffna.** by sending a self addressed stamped envel ope 100 X 255mm in size. **The closing date for applications has been extended up to 25.09.2015.**Please forward completed applicationform to the above address and indicate **"Application for MBA"** in the top left hand cornor of the envelope.

Register
University of Jaffna, Srilanka.

(சி.18861) (14.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேலை கட்டும் பெண்ணுக்கொரு...!

**(சேலை கட்டும் பெண்ணுக்கொரு என்ற தலைப்பில் சேலை கட்டுவது எப்படி? என்பது தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியான குறிப்பின் தொடர்ச்சி இது)**

இரண்டாவது சுற்றில் பின்பக்கச் சேலை வலதுபக்கமாக உயர்ந்து சென்று வலது கமக்கட்டுக்குக் கீழால் மார்பை மூடிக் கொண்டு இடது தோள்மூட்டுவரை சென்றிருக்கும். இந்த நிலையில் இளம் பெண்கள் தாவணியை பின்னால் தொங்க விடாது இடது கையில் முழங் கையில் ஏந்தி பரவி விட்டுப் பிடித்திருப்பார்கள்.


வயது வந்தோர் தாவணியின் மேல்கரை, தோளின் உட்பகுதியிலும் கீழ்க்கரை, மேற்பக்கமாகவும் வருமாறு மடித்து சட்டையுடன் ஊசியால் குத்தி, பின்னால் தொங்க விடுவார்கள். இவ்வாறு செய்யும் போது சேலையின் மேற்கரை நெஞ்சின் உட்பக்கத்தில் மறைக்கப்பட்டுவிடும். அத்துடன் கொய்து முன்னுக்கு செருகப் பெற்ற மடிப்புகள் ஒழுங்காகவும், சீராகவும் இருக்கின்றனவா எனப் பார்த்துச் சரிசெய்து கொள்ளுங்கள். அவற்றின் மடிப்புகள் விலகாது இருப்பதற்காக மடிப்புக்களின் உட்புறமாக ஒரு ஊசியால் வெளியே தெரியாதபடி குத்திக் கொள்ளுங்கள்.

முன்னால் எடுத்து இடது தோளில் இடப்பெற்ற (தாவணியை) முகதலையை எடுத்து கீழ்க் கரை மேல் பக்கமாக இருக்கக் கூடியதாச் சுமார் ஒரு சாண் அகலத்தில் அடுக்காக மடித்து விட்டு இரண்டு மூன்று இடத்தில் விலகாது இருக்க ஊசியால் குத்திக் கொள்ளுங்கள் இப்போது தாவணியை இடது தோளில் போட்டு கீழே தூங்கும் உயரத்தைச் சரிசெய்யுங்கள். தாவணி சரியாக அமைந்தால் மடிக்கப் பெற்ற தாவணியை தோள்ப்பகுதியில் வைத்து சட்டையின் உட்பகுதியின் கீழ் ஊசியைக் குத்தி வெளியே ஊசி தெரியாதபடி ஒழுங்குபடுத்தி விடுங்கள். தோளில் ஊசி குத்தப்பட்ட மடிப்புகளுக்கு ஏற்றவாறு நெஞ்சுப் பகுதியில் இருக்கும் சேலையின் சுருக்கங்கள் ஒழுங்காக உள்ளனவா என்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள். சட்டையுடன் அமைந்திருக்கும் மடிப்பு விலகாது இருப்பதற்காக சட்டையின் நெஞ்சுப்பகுதியில் உட்பக்கமாக ஊசி குத்தி விடுங்கள்.

**குறிப்பு:**

சேலை கட்டுவதற்கு முன் அதனை உடம்பில் சுற்றி அளவிட்டு மடிப்புகள் வரும் இடங்களை குறிப்பெடுத்து அவ்விடங்களில் முன் கூட்டியே ஊசி குத்தி வைத்தால் சாறி கட்டுவது சுலபமாக இருக்கும். முகதலைப்பகுதியை மடிக்கும்போது முகதலை விளிம்புகள் ஒழுங்காக இருக்குமாறு பார்த்து மடித்து மூன்று நான்கு இடங்களில் ஊசி குத்தி வைத்திருங்கள். சாறி கட்டியபின் தேவையில்லாதவற்றைக் கழற்றிவிடலாம்.







# உங்கள் நிறம்..!

உங்கள் பிறந்த திகதியை வைத்து உங்களுக்கான நிறத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். நிறம் என்பது ஒருவித மாயை. நீங்கள் எந்த உடை அணிகிறீர்கள், அதன் விலை என்ன என்பதல்ல முக்கியம். அது பிறரைக் கவர்வதுமில்லை. அணிகிற உடையின் நிறம் தான் மற்றவர்களை ஈர்க்கிறது. ஆயிரக்கணக்கில் கொட்டிக் கொடுத்து வாங்கிய உடையானாலும், அது உங்களுக் கேற்ற நிறமாக இல்லாவிட்டால் எவருமே உங்களைத் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். யார் யாருக்கு என்ன நிறம் பொருந்தும், எந்த மாதிரி சந்தர்ப்பங்களுக்கு என்ன நிறம் உடுத்தலாம்? இதோ சில குறிப்புகள்! எம் ஒவ்வொருவருக்கும் ஒரு நிற ஈர்ப்பு உண்டு என்பது தெரியுமா? உங்கள் பிறந்த திகதியை வைத்து உங்களுக்கான நிறத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இப்படி ஒன்று முதல் 9 வரையிலான எண்களுக்கு ஒவ்வொரு நிறம் உண்டு.

1– சிவப்பு, 2– ஓரேஞ்சு, 3– மஞ்சள், 4– பச்சை, 5– நீலம், 6– இண்டிகோ 7– ஊதா, 8– வெள்ளி நிறம், 9– பிங்க்

உங்கள் பிறந்த நாளுக்கான நிறம் உங்களுக்கு அதிர்ஷ்டமானது மட்டுமல்லாது உங்கள் நடத்தையையும் சொல்லிவிடுமாம்.

அதன் படி....

1. சிவப்பு– தன்னிச்சையானவர்கள். ஆதிக்கக் குணம் உடையவர்கள். சவால் விரும்பிகள். எதிலும் சுயமான முடிவையே எடுப்பவர்கள்.
2. ஓரேஞ்சு– சுறுசுறுப்புத் திலகங்கள். வெற்றி இவர்களை விடாது விரட்டும். புதிய சிந்தனை உடையவர்கள்.
3. மஞ்சள்– தோழமையானவர்கள். சந்தோஷமானவர்கள். நேர்மறையான குணமுடையவர்கள்.
4. பச்சை – பழைமைவாதிகள். புத்திசாலிகள். நேர்மையானவர்கள்.
5. நீலம்– எடுக்கிற முடிவில் உறுதியானவர்கள். மிஸ் ஒழுக்கம் எனப் பெயரெடுக்க விரும்புவார்கள். பொறுமையும், அமைதியும் வாய்க்கப் பெற்றவர்கள்.
6. இண்டிகோ– திருப்தியானவர்கள். பக்குவமானவர்கள். கடின உழைப்பாளிகள்.
7. ஊதா– பிறரைக் கவர்பவர்கள். தாராள குணமுள்ளவர்கள். கிரகிப்புத் திறன் அதிகம் இருக்கும்.
8. வெள்ளி நிறம்– மிக உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும், மிகச் சாதாரணமாகவே இருப்பார்கள். பழக இனிமையானவர்கள்.
9. பிங்க்– மென்மையானவர்கள். அப்பாவிகள். இளகிய மனம் படைத்தவர்கள்.

# குழந்தைகளுக்கான ஆபத்தைத் தடுக்க

1. உயரமான நாற்காலிகளைப் பயன்படுத்தாமல் தாழ்வான மேசை நாற்காலிகளையே குழந்தை உள்ள இடத்தில் பயன்படுத்துங்கள்.
2. குழந்தைக்கு உணவூட்டும்போது உயரமான நாற்காலிகளைப் பயன்படுத்தினால், அத்தகைய நாற்காலி கவிழாவண்ணம் அதன் அடிப்பாகம் அகலமானதாக அமையட்டும். அல்லது சுவர் அருகில் இருக்கும்படியாக அமைத்துக் கொள்ளுங்கள். அல்லது அது விழுந்துவிடாமல் அதை ஒரு பட்டியால் இணைத்து விடுங்கள்.
3. தள்ளு வண்டியைப் பயன்படுத்துகிறீர்களா? குழந்தை எழுந்து நிற்க முயற்சிக்கலாம். கீழே விழுந்து விடாமலிருக்க குழந்தையை வண்டியுடன் சேர்த்து பட்டியுடன் இணைத்து விடுங்கள்.
4. குழந்தை மாடிப்படியிலோ, தெருவாயிற்படியிலோ ஏறி இறங்கிப் பழகும் வரையில் அவைகளின் முகப்பில் சிறிய கதவுகள் அமைத்து அவைகளை மூடி வையுங்கள்.
5. ஜன்னல்களில் கம்பிகள் இல்லை என்றால் அடிக் கதவுகளை எப்போதுமே மூடி வைப்பது நல்லது.
6. சமையல் செய்யுமிடத்திலோ, உணவு பரிமாறும் போதோ குழந்தை தவழவோ, நடக்கவோ விட்டு விடாதீர்கள். ஏனென்றால் நீங்களே உங்கள் குழந்தையின் மேல் இடறி விழுந்துவிட நேரிடும். சூடான உணவுப் பொருள், எண்ணெய் அதன் மேல் சிந்தி விடலாம். அல்லது குழந்தையே பாத்திரத்தை இழுத்து தன்மீது கவிழ்த்துக் கொள்ளலாம். தோசைக்கல், வெந்நீர் பாத்திரங்களை வைத்து விடாதீர்கள். கல்லில் தவறி உட்கார்ந்து விடலாம்.
7. அடுப்பின்மேல் உள்ள பாத்திரங்களின் கைப்பிடிகளைப் பிடித்து இழுக்காதபடி, அவ்வப்போது உட்பக்கமாகத் திருப்பி வைத்துக் கொள்ளுங்கள்.
8. உணவு பரிமாறும்போது , அல்லது சூடான உணவுப் பொருள்கள் உள்ள பாத்திரங்களை மேசையின் நடுவில் குழந்தை தொட முடியாத இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.
9. மேசையின் ஓரத்தில் மேசை விரிப்புகள் தொங்கிக்கொண்டிருக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். குழந்தை அவற்றைப் பிடித்து இழுத்து பொருள்களைக் கொட்டி விடலாம்.
10. எந்தப் பொருளையும் வாயில் வைக்கும் இயல்பு குழந்தைக்கு உண்டு. எனவே குழந்தையிடம் சில்லறைக்காசு, பட்டாணி, கடலை வகைகள், மணி, பாக்கு போன்ற சிறிய பொருள்களைக் கொடுக்காதீர்கள். காற்றுக் குழாய்க்குள் எளிதில் அவை புகுந்து குழந்தைக்கு மூச்சடைப்பை உணடாக்கலாம். மிகவும் கவனம் தேவை.
11. குழந்தையைக் குளிப்பாட்டக் கொண்டு செல்லும் முன்னர் குளியலறையில் ஏற்கனவே சுடுநீரைத் தண்ணீரில் கலந்து அதிகம் சூடு இல்லாமல் பார்த்து வைத்துக் கொள்ளுங்கள். இல்லையேல் சுடுநீரை இழுத்துக் கொட்டிக் கொள்ளலாம்.
12. மின்சார வயர்களை இழுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். கைக்கெட்டும் உயரத்தில் மின் ஆழிகள் இருக்கக் கூடாது.
13. கிணறுகள், தண்ணீர்த் தொட்டிகள் முதலியவற்றை நன்கு மூடிப் பாதுகாக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகுளின் இலவச வைபை

Google

Wi Fi

உலகின் பல பகுதிகளிலும் வியாபித்திருக்கும் கூகுள், தொடர்ந்தும் தனது சேவை எல்லைகளை அதிகரித்துவருகின்றது. அத்துடன் வேறு பல நிறுவனங்களுடனும் இணைந்து தனது சேவையை விஸ்தரித்துவருகின்றது. இவற்றின் ஒரு பகுதியாக தற்போது இந்தியாவின் ரயில்வே திணைக் களத்துடன் இணைந்து சுமார் 400 இடங்களில் முற்றிலும் இலவசமான முறையில் வைபை இணைய இணைப்பை வழங்க முன்வந்துள்ளது. 1,000 எம்பிஎஸ் வேகம் கொண்ட இந்த இணைப்புக்கள் அனைத்தும் ரயில் நிலையங் களில் வழங்கப்படவுள்ளன. இந்த வேகமானது, சாதாரண இணைய இணைப்புக்களை விடவும் 10 மடங்குகள் வேகம் உடையவை. இதன் ஊடாக நாளாந்தம் ரயில் பயணம் செய்யும் சுமார் 20 மில்லியன் மக்கள் பயன் பெறுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் அதி நவீன மேலங்கி


மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும்போது ஏற்படும் விபத்துக்களிலிருந்து பாதுகாப்பை வழங்குவதற்காக MISANO 1000 எனும் மேலங்கியை டைனீஸ் நிறுவனம் தயாரித்துள் ளது. எயார் பேக் தொழில் நுட்பத்தை அடிப் படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மேலங்கியில் ON/OFF ஆழியை மற்றும் அணிபவரின் இயல்பை அறியக்கூடிய LED மின் குமிழ்கள் காணப்படுகின்றன.

15 வருட அனுபவத்தின் அடிப்படையில் உரு வாக்கப்பட்டுள்ள இந்த மேலங்கியில் GPS தொழில்நுட்பமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் விற்பனைக்கு வரவுள்ள இதன் பெறுமதி, 1695 டொலர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.



# உலகின் மிகச் சிறிய டிரோன் (Drone) விமானம்



டிரோன் எனப்படும் சிறிய ரக விமானத் தின் கண்டு பிடிப்பானது பல்வேறு துறைக ளிலும் புரட்சியை ஏற்படுத்தியிருந்த நிலை யில் தற்போது உலகின் மிகச்சிறிய டிரோன் விமானம் உருவாக்கப் பட்டுள் ளது.

2.2 சென்ரி மீற்றர் நீளம் 2.2 சென்ரி மீற்றர் அகலம் கொண்ட இந்த விமானத்தை TRND labs நிறுவனம் வடிவமைத் துள் ளது.

இரவு நேரங்களிலும் பறப்பில் ஈடுபடக்கூடிய வகையில் இந்த விமானத்தில் லெட் மின்கலங் கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் 49 டொலர்கள் பெறு மதியான இந்த விமானத்தைப் பயன்படுத்தி எந்தவொரு குறு கிய இடத்திலும் ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் கரணம் மற்றும் சுழற்சிகளை மேற்கொள்ளக் கூடிய வகையிலும் இந்த விமானம் வடிவமைக்கப்பட் டுள்ளது.







தெல்லிப்பழை கிழக்கு, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிசேகம் நேற்றுப் புதன்கிழமை மு.பகல் 10.15 மணியளவில் அடியவர்களின் அரோகரா, கோஷத்தின் மத்தியில் இராஜகோபுரத்துக்கு கும்ப நீரூற்றிச் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த இரண்டு நாள்களாக எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று நேற்று அதிகாலையில் ஆரம்பமான விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விசேடமாக நடை பெற்ற ஓம குண்டத்தில் யாகம் இடம்பெற்று, அந்தணப் பெருமக்கள் வேத மந்திரங்களை முழங்க, மேள வாத்தியங்களுடன் கும்பங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு இராஜ கோபுரம் உட்பட ஏனைய தூபிகளுக்கும் நீராட்டு விழா இடம் பெற்றது.

கடந்த கால போர்ச் சூழல் காரணமாக, சுமார் இருபத்தைந்து வருடங்கள்வரை கைவிடப்பட்டு வழிபாடுகள் இன்றி அழிவடைந்து காணப்பட்ட இ[illegible] மக்கள் இந்தப் பகுதியில் மீளக்குடியமர அ[illegible] மக்கள் உதவியுடன் கட்டப்பட்டு நேற்று மகா கும்பாபிசேகம் இடம் பெற்றுள்ளது. (ற-86)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு எழுதுமட்டுவாழில் நடமாடும்சேவை



சாவகச்சேரி, செப்.17

உள்ளூராட்சி வாரத்தை முன் னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையும், சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து நட மாடும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாழ் ஆயுள் வேத மருந்தகத்தில் நடத்தின.

அதில் மேற்கொள்ளப்பட்ட நீரிழிவு மற்றும் கண் பொது மருத்துவம் ஆகிய பரி சோதனைகளில் எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, விடத்தற்பளை, கரம்பகம் முகமாலை வடக்கு, ஒட்டுவெளி ஆகிய இடங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

கண் பரிசோதனையில் பார்வைக் குறைபாடு காணப்பட்ட வறிய குடும் பங்களைச் சேர்ந்த 90 பேருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் இலவச மாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நீரிழிவுப் பரிசோதனையில் நீரிழிவு ஏற்பட்டுள்ளதாக இனங்காணப் பட்டுள்ள 15 பேரை மேலதிக சிகிச்சை பெற சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது.

உள்ளூராட்சி வார்த்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை மற்றும் ஆயுள்வேத மருந்தக வளாகம் என்பனவற்றில் மரக் கன்றுகள் நடப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியர் திருமதி ரஜிதா கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற குறித்த முகாமில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பு.டினேஸ்குமார் மற்றும் கழக உறுப் பினர்களும் கலந்துகொண்டனர். (ற)

# பனையில் இருந்து வீழ்ந்து ஒருவர் சாவு

திருகோணமலை, செப்.17

திருகோணமலை ஜயந்திபுர பிர தேசத்தில் நேற்றுப் புதன்கிழமை பனை மரத்திலிருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள் ளார். ஜயந்திபுர பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வசந்தகுமார் (வயது-52) என் பவரே இவ்வாறு உயிரிழந்தவ ராவார்.

பனை மரத்தில் ஏறி பனை மட் டைகள் வெட்டிக்கொண்டிருக்கும் போது வேகமாக வீசிய காற்றால் குறித்த நபர் தவறி விழுந்து உயிரி ழந்துள்ளார் என்று சூரியபுர பொலி ஸார் தெரிவித்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற வி
# கலப்பு சிறப்

## இலங்கை தொடர்பான ஐ.நாவின் விசாரணை
## வெளியிட்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணை

கொழும்பு, செப். 17

ஜெனிவாவில் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கையில் இலங்கையில் 2002 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை பாரதூரமான உரிமை மீறல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை இலங்கையில் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்கள் இரு தரப்பினராலும் பெரும்பாலும் இழைக்கப்பட்டிருக்கலாம் என்று வெளிப்படுத்தியுள்ளது. நீதியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நீதிபதிகள் – வழக்குத் தொடுப்பவர்கள் – சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஆரம்பிப்பது மிக முக்கியமானது என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் பரிந்துரைத்துள்ளார்.

ஐ.நா. அறிக்கை மனித உரிமைகள் சபையில் நேற்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் விசாரணை அறிக்கையை வெளியிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா நடத்திய விசாரணை அறிக்கை இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. இதில் அறிக்கையின் சுருக்கம், ஆங்கிலத்தில் 19 பக்கங்களில் இடம்பெற்றுள்ளது. இரண்டாவது பகுதி 261 பக்கங்களில் உள்ளது.

இந்த அறிக்கையின் சுருக்கத்தை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நேற்று ஜெனிவாவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

அவரது பரிந்துரைகளுடன் கூடிய அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஐ.நா. விசாரணை, இலங்கையில் நடைபெற்ற குரூரமான மீறல்கள் மற்றும் பாகுபாடற்ற எறிகணைத் தாக்குதல் (ஷெல் தாக்குதல்), நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமற்போதல்கள், மனிதாபிமானமற்ற சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள், சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் வேறு பாரதூரமான குற்றங்களை வெளிக்கொண்டு வந்துள்ளது' என்று மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார். முக்கியமாக, இந்த அறிக்கையினூடாக வெளிக் கொண்டு வரப்பட்டுள்ள மீறல்கள் முழு சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் பாரதூரமான குற்றங்களாகும். மேலும், இலங்கையில் நம்பிக்கை தரும் புதிய அரசியல் சூழலின் மத்தியில் இந்த அறிக்கை முன்வைக்கப்படுகின்றது. நம்பகத் தன்மையான அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புடைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது முக்கியம், எனவும் ஆணையாளர் கூறி னார்.

ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பாரதூரமான குற்றங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

***சட்டத்துக்குப் புறம்பான கொலைகள்***

2002 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடையில் எண்ணற்ற சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் இரு தரப்பினர், மற்றும் பாதுகாப்புப் படையினருடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு நடந்த கொலைகளால், தமிழ் அரசியல் வாதிகள் – மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் – ஊடகவியலாளர்கள் மற்றும் சாதாரண பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டோருள் உள்ளடங்குவர்.

நீதிக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொலைகள் இனங்காணப்படக் கூடிய வடிவங்களிலேயே நடைபெற்றுள்ளன. உதாரணமாக, இந்தக் கொலைகள் இராணுவத்தினரின் சோதனைச் சாவடி மற்றும் படைத் தளங்களுக்கு அருகாமையில் நடைபெற்றுள்ளன. அத்துடன் இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் இரணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டோர், இறுதிப் போரின் போது சரணடைந்தோர் மற்றும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டோர் உள்ளடங்குவர்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ் – முஸ்லிம் – சிங்கள பொது மக்களைப் பாரபட்சமற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு உட்படுத்தியதுடன், கல்விமான்கள் மற்றும் மாற்றுக் கருத்துள்ள தமிழ் அரசியல் பிரமுகர்களைக் குறிவைத்து கொலை செய்துள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

***பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை***

இராணுவத்சினரால் தடுத்து வைக்கப்பட்டோர் மீது குரூரமான பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான பாலியல் வன்முறைகள் அதிகளவில் பிரயோகிக்கப்பட்டன என்னும் அதிர்ச்சிகரமான விடயத்தை விசாரணை வெளிக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் பெண்கள் மாத்திரமின்றி ஆண்களும் அடங்குவர்.

பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட முப்பது பேரிடம் பதிவு செய்யப்பட்ட துன்பகரமான சாட்சியங்களின் அடிப்படையில் பாலியல் வன்முறைகள், சித்திரவதை செய்வதனை நோக்காகக் கொண்ட கொள்கையின் அடிப்படையில் திட்டமிட்டுப் பாவிக்கப்பட்ட பொறி முறைகளாகும் என்பது தெளிவாகின்றது.

பாலியல் வன்முறைகளின் வடிவங்களை நோக்கும்போது, பாலியல் சித்திரவதைகள் விசாரணைகளின் போதும், பாலியல் வல்லுறவுகள் அனேகமாக விசாரணை இல்லாத வேறு சந்தர்ப்பங்களிலும் நடைபெற்றுள்ளன.

பாலியல் சித்திரவதைகள் வெவ்வேறு விதமான தடுப்பு நிலையங்களிலும், பல விதமான பாதுகாப்பு தரப்பினராலும், போரின் போதும் அதன் பின்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாலியல் வன்முறைகளை இழைத்தவர்களில் ஒருவர் கூட இன்று வரை சட்டத்தினால் தண்டனைக்குட்படுத்தப்பட்டதாக அறியக் கிடைக்கவில்லை.

***காணாமற்போகச் செய்யப்படுதல்***

காணாமற்போகச் செய்யப்படுதல் என்பது பல்லாயிரக்கணக்கான இலங்கையரைப் பல தசாப்தங்களாகப் பாதித்துள்ளது. பாதுகாப்புப் படைத்தரப்பினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற 26 வருட போர்க் காலத்தையும் இது உள்ளடக்கும். காணாமற் போகச் செய்யப்படுதல் என்பது பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பரந்த மற்றும் திட்டமிடப்பட்ட தாக்குதலாக இருக்கக் கூடும் என்பதனை நம்புவதற்கு காரணங்கள் உள்ளன.

போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த பலர் காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்பதனை நம்புவதற்கு காரணங்கள் உள்ளன. அவர்களது இருப்பு இன்று வரை கண்டறியப்படவில்லை. பலர், போரிலே நேரடியாக தொடர்பில்லாதவர்களும், பொதுவாக வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு, அதன்பின் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளனர்.

***சித்திரவதைகள் மற்றும் வேறு விதமான கொடுமையான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நடத்துகைகள்***

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில், இலங்கை பாதுகாப்பு படையினர் பரந்தளவில், குரூரமான சித்திரவதைகளை முக்கியமாக போர் முடிவடைந்த காலத்தில் மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்ட சில தடுப்பு முகாம்களில் சித்திரவதைக்கான உபகரணங்களைக் கொண்ட அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இது சித்தரவதை திட்டமிடப்பட்ட முறையில் பிரயோகிக்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்துகின்றது.

இந்த அறைகளில் அடிப்பதற்கான இரும்புத்தடிகளும் – பொல்லுகளும் – நீரில் அமிழ்த்தி மூச்சுத் திணறலை ஏற்படுத்துவதற்காக தண்ணீர் பீப்பாய்களும் மற்றும் தடுப்பிலுள்ளோரை தொங்க விடுவதற்கான கயிறுகளும் காணப்பட்டன. விசாரணையின் போது சாட்சியமளித்த – பாதிக்கப்பட்டோர் தங்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை விவரிக்கும் போது குறித்த அறைகளின் சுவர்களிலும், நிலத்திலும் இரத்தக் கறைகளைக் கண்டதாகக் கூறினார்கள்.

சிறுவர் ஆள்சேர்ப்பு மற்றும் போரில் பாவித்தல் – வயது வந்தோர் கடத்தல் மற்றும் வலுக்கட்டாயப்படுத்தப்பட்ட ஆள்சேர்ப்பு

கிடைத்த தகவலின் அடிப்படையில் போரின் இறுதிக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் வயது வந்தோரைக் கடத்தி, வலுக் கட்டாய ஆள் சேர்ப்பு செய்தனர் எனும் விடயம் தெரியவந்தது. முக்கியமாக, போரின் இறுதிப் பகுதியில் வலுக் கட்டாயப் படுத்தப்பட்ட ஆள் சேர்ப்பு தீவிரமடைந்தது. தமிழீழ விடுத லைப் புலிகளும், 2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து, அரசுடன் செயற்பட்ட கருணா குழுவினரும், பரந்தளவில் சிறுவர்களை ஆள்சேர்ப்பு செய்து அவர்களைப் போரில் பாவித்துள்ளனர் என்பது ஆவணப் படுத்தப்பட்டுள்ளது.



சிறுவர்கள், வீடுகள் – பாடசாலைகள் – கோவில்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் ஆகிய இடங்களில் இருந்து வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டு, அடிமட்டப் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டனர். போரின் இறுதி மாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் 15 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை ஆள்சேர்ப்பு செய்தனர் என்று பல அறிக்கைகள் கூறுகின்றன. இந்தச் செயற்பாடுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அவை போர் குற்றங்களாகக் கருதப்படும்.

***பொதுமக்கள் மற்றும் பொது உடைமைகள் மீதான தாக்குதல்கள்***

போரின் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்ட பல தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப – போரை நடத்துவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப அமையவில்லை. முக்கியமாக, இராணுவ உடைமைகளுக்கும் பொது உடைமைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை மதிக்க வேண்டும் என்று கூறும் கோட்பாடு மீறப்பட்டது என்பதனை நம்புவதற்கு காரணங்கள் உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் மக்கள் செறிவாகக் காணப்பட்ட இடங்களில் – அரசு உருவாக்கிய போர்ச் சூனிய பிரதேசத்தில் அமைந்திருந்த மருத்துவமனைகள் – மனிதாபிமான உதவி வழங்கும் நிலையங்கள் மீது அரச படைகள் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியதை அறிக்கை ஆவணப் படுத்தியுள்ளது.

பொது உடைமைகள் மற்றும் போரில் நேரடியாகப் பங்குபற்றாத பொது மக்கள் மீது நேரடித் தாக்குதல்களை நடத்துவது பாரதூரமான சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறலாகும். இது ஒரு போர்க் குற்றமாகக் கருதப்படலாம்.

போரில் நேரடியாகப் பங்குபற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பெரும்பாலும் பொது மக்கள் இருக்கும் இடங்களில் இருந்து செயற்பட்டதுடன், இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்கு
# பு நீதிமன்றம்

## ணை அறிக்கையை
## ணையாளர் பரிந்துரை

இடங்களுக்கு அருகாமையிலிருந்து தாக்குதல்களைத் தொடுத்தது மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் போர்க் காலத்தில் வலுக் கட்டாயமாகப் பொது மக்களைத் தடுத்து வைத்திருந்தமையும், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறலாகக் கூடும். ஆனாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்தச் செயற்பாடுகளைக் காரணம் காட்டி, அரசு சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் அதன் பொறுப்புக்களை தட்டிக் கழித்திருக்க முடியாது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மதிக்கும் கடமை மற்றைய தரப்பினரின் நடத்தையில் தங்கிருக்கவில்லை.

***மனிதாபிமான உதவிகள் தடுக்கப்படல்***



அரசு, மனிதாபிமானச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் மற்றும் நடமாடும் சுதந்திரத்தின் மீது கணிசமான தடைகளை விதித்து, வேண்டுமென்றே வட மாகாணத்தில் – வன்னி பிரதேசத்திற்கு உணவு உதவி மற்றும் மருத்துவப் பொருள்கள் சென்றடைவதை தடுத்திருக்கலாம். இந்தச் செயலானது, பொது மக்களைப் பட்டினி போடுவதை ஒரு போர் முறைமையாக பிரயோகித்திருக்கலாம் என்பதை வெளிகாட்டுகின்றது.

பொதுமக்களைப் பட்டினி போடுவது ஒரு போர் முறைமையாகப் பிரயோகிக்கப்பட்டது என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அது போர்க் குற்றமாகக் கருதப்படலாம்.

***முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மீறல்கள்***

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை பொது மக்களில் இருந்து வேறுபடுத்துவதற்காக பிரயோகிக்கப்பட்ட வழிமுறைகள் சர்வதேச விதிமுறைகளை மீறியது மட்டுமல்லாது, அந்த மக்கள் துஷ்பிரயோகங்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தப்படுவதற்கும் வழிவகுத்தன.

ஏறத்தாழ மூன்று லட்சம் இடம் பெயர்ந்தோரின் சுதந்திரம் சர்வதேச சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்கு மேலாக பறிக்கப்பட்டது. மேலும், இடம்பெயர்ந்தோர் தமிழர்கள் என்பதால், அவர்கள் சந்தேக நபர்களாக நடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்கள் என்று நம்புவதற்கு காரணங்கள் உள்ளன.

இந்த நடைமுறையானது, தமிழ் மக்கள் பாரபட்சத்துடன் நடத்தப்பட்டார்கள் என்றும், மனித நேயத்திற்கு எதிரான குற்றமான துன்புறுத்தல் களுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள் என்றும் கருத இடமளிக்கின்றது.

இந்த அறிக்கை பல வருடங்களாக நடைபெற்ற உண்மைகளை மறுத்தல் – மூடி மறைத்தல் – உடனடி விசாரணைகளை நடத்தாமல் விடல் – விசாரணைகளை இடைநிறுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டோரின் குடும் பங்களுக்கும் – நீதிக்காக அழுத் தங்கள் கொடுத்து செயற்படுவோருக்கும் எதிராக விடுக்கப்பட்ட அச் சுறுத்தல்கள் மற்றும் இழைக்கப்பட்ட மீறல்களை ஆவணப்படுத்துகின்றது.

பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்குவதற்கு, உள்நாட்டுப் பொறிமுறைகள் தொடர்ச்சியாகக் கண்ட தோல்வியின் காரணத்தால் பாதிக்கப்பட்டோர் கோபம் – சந்தேகம் மற்றும் அவ நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை அவதானிக்கின்றது. குற்றங்களுக்கும் – உரிமை மீறல்களுக்கும் காரணமான கட்டமைப்புகள் எவ்வித சீர்திருத்தங்களுக்கும் உட்படுத்தப்படாது அதே நிலையில் காணப்படுகின்றமையே இதற்கு காரணமாகும்.

குற்றங்கள் இராணுவத்தினராலும், பாதுகாப்புப் படையினராலும் இழைக்கப்படும் போது அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க இயலாமல் இருப்பது கட்டமைப்புகளின் பலவீனத்தை சுட்டிக்காட்டுகிறது. மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எத்தனிக்கும் சட்டவியளார்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் இழைக்கப்பட்ட உரிமை மீறல்கள் ஆகியவற்றை இந்த அறிக்கை விவரிக்கின்றது.

பொறுப்புக்கூறலை ஓர் உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் கையாள்வதாக புதிய அரசு வழங்கிய வாக்குறுதி பாராட்டத்தக்கது. ஆனாலும், துரதிஸ்டவசமான உண்மை என்னவெனில், இலங்கையின் குற்றவியல் நீதிப் பொறிமுறை இதை செயற்படுத்துவதற்கு திறனற்றதாக உள்ளது என்பதையும் ஐ.நா. விசாரணை அறிக்கை கூறுகின்றது.

முதன்மையான விடயம் என்னவெனில், பாதிக்கப்பட்டவர்களுக்கும் – சாட்சியங்களுக்கும் பாதுகாப்பு வழங்க – நம்பகத் தன்மையுடைய பாதுகாப்புப் பொறிமுறை இன்றுவரை உருவாக்கப்படவில்லை. இரண்டாவது, இலங்கையின் உள்நாட்டு சட்டக் கட்டமைப்பானது பாரதூரமான சர்வதேச குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குரிய திறன் இல்லாதுள்ளது.

மூன்றாவது சவால் என்னவெனில், பல தசாப்தங்களாக நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டம், போர் மற்றும் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பியமை ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்புத் துறையும் – நீதித்துறையும் சிதைவடைந்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசு முன்னெடுத்துள்ள ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஆணையாளர் சயிட் வரவேற்றுள்ள அதேநேரம், தசாப்தங்களாக நடைபெற்ற உரிமை மீறல்களின் காரணமாக, ஆழமாக வேரூன்றியுள்ள அடக்குமுறை கட்டமைப்புகள் மற்றும் நிறுவன கலாசாரங்களை அகற்றுவதன் ஊடாக இலங்கை முன்னோக்கிப் பயணிக்கலாம் என்று கூறினார்.

இது ஒரே நாளில் நடைபெறுவதற்கு சாத்தியமில்லாததால் எவரும் இத் தப் பணியின் கடினத்தைக் குறைத்து மதிப்பிடலாகாது எனக் கூறியுள்ளார். இலங்கையின் வரலாற்றில் அரசுகள், காணாமற் போகச் செய்யப்படுதல் போன்ற செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்று உறுதிமொழி கொடுத்திருந்தாலும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாமை மற்றும் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கு வழிவகுத்த கட்டமைப்புகளில் உள்ள பிரச்சினைகளை வேரோடு அகற்றாமையினால், வெள்ளை வான்களில் கடத்தப்படுதல் தேவையான தருணத்தில் மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட் டன.

தற்போதைய அரசானது தனித்துவமான வாய்ப்பைக் கைப்பற்றிக் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்புவதனை இல்லாதொழிக்க வேண்டும், அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் செயற்படும் விதங்களில் அடிமட்டம் தொடக்கம் உயர்மட்டம் வரை மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

கடந்த முப்பதாண்டு காலமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நீதி மற்றும் நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காகவும், இந்த மீறல்கள் மீண்டும் நடைபெறாது என்று உத்தரவாதமளிப்பதற்கும் ஒரு முழுமையான இடைக்கால நீதிக் கொள்கையை உருவாக்குமாறு இவ்வறிக்கை பரிந்துரை செய்கின்றது.

உண்மையை மறுக்கும் நிலையிலிருந்து, உண்மையை ஒப்புக் கொள்ளும் நிலைக்கு வந்து, ஆக்கபூர்வமான கலந்துரையாடலின் மூலம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு இந்த அறிக்கையை ஒரு வாய்ப்பாக நோக்குபடி புலம்பெயர் வாழ் மக்கள் உட்பட, சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற மனித உரிமை மீறல்களினாலும், குற்றமிழைத்தவர்கள் தண்டனை பெறாது தப்பிப்பது சாதாரணமாகக் காணப்பட்டமையினாலும், இரு தரப்பிலும் பாதிக்கப்பட்டவர்களின் மனவடுக்களின் காயங்கள் ஆழமாகப் பதியப்பட்டுள்ளன என்று ஆணையாளர் சயிட் கூறினார். அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவந்து இந்தக் காயங்களை ஆற்றாவிட்டால், இவர்களின் தொடரும் வேதனையானது சமூகங்களுக்கிடையில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தி, நல்லிணக்கத்திற்கு ஒரு தடையாக அமைவது மட்டுமல்லாது எதிர்காலத்தில் புதிய முரண்பாடுகளுக்கும் வழிவகுக்கும்.

அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் மீது பலதரப்பினருக்கும் இருக்கும் அவநம்பிக்கையினை குறைத்து எடை போடலாகாது. இந்தக் காரணத்தினால் சர்வதேச நீதிபதிகள் – வழக்குத் தொடுப்பவர்கள் – சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஆரம்பிப்பது முக்கியமாகும். ஒரு தனித்த உள்நாட்டு நீதிமன்ற செயல்முறை பல தாசாப்த காலங்களாக நடைபெற்ற உரிமை மீறல்கள் – முறைகேடுகள் மற்றும் உடைத் தெறியப்பட்ட வாக்குறுதிகளால் உருவாக்கப்பட்ட நியாயமான சந்தேகங்களை நிவர்த்தி செய்ய மாட்டாது.

மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக உள்நாட்டு குற்றவியல் நீதிக் கட்டமைப்பு – சீர்திருத்தப்பட்டு வலுவாக்கப்பட வேண்டும். ஆனால், இந்தச் செயல்முறையைப் பூர்த்தி செய்வதற்குப் பல்லாண்டு காலம் தேவைப்படும். ஆகையால், இந்தச் சீர்திருத்தம், சிறப்புக் கலப்பு நீதிமன்றத்தை ஆரம்பிப்பதற்கு இணைவாக செயற்படுத்தப்பட வேண்டும் சிறப்பு நீதிமன்றத்திற்குப் பதிலாக அல்ல. தேவையான சீர்திருத்தங்களை ஊக்குவித்து, பொது மக்களின் நம்பிக்கையையும் பெற்று, இலங்கையை நீதியான ஒரு புதிய பாதையில் இட்டுச்செல்லலாம்.

இந்த விசாரணையின் அறிக்கை, நேரடிச் சாட்சியங்கள் – பாதிக்கப்பட்டோர் மற்றும் வேறு சாட்சியங்களோடு நடத்தப்பட்ட நேர்காணல்கள், இராணுவ மற்றும் தடயவியல் நிபுணர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்ட ஒளிப்பதிவுகள் – ஒளிப்படங்கள், செய்மதிப் ஒளிப் படங்கள் (இவற்றில் பல பொதுமக்களின் [illegible] வைக்குப் – பயன்பாட்டிற்கு எ[illegible] வகையிலுள்ளன), ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்து (இவற்றில் [illegible] யிரம் வாக்கு மூலங்கள், சமர்ப்பிப்புகள் மற்றும் வெளியிடப்படாத அறிக்கைகளும் உள்ளடங்கும்) இந்த விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டது. ஐ.நா. விசாரணைக் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. இதற்கு மேலாக, முன்னைய அரசு, அச்சுறுத்தல்கள் – மிரட்டல்கள் மற்றும் கண்காணிப்புகளால் இந்த விசாரணையுடனான மக்கள், முக்கியமாக [illegible] கிடைத்திருப்போர் ஒத்துழைப்பை தடை செய்தமை, ஒரு சவாலாக அமைந்தது– என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்பை அப்பனை தொழ வினையறுமே....!



செ.உமாசுதன்

**வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்**
**வெற்றி முகத்து வேலவனைத் தொழ புத்தி மிகுந்து வரும்**
**வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ துள்ளியோடும்**
**தொடர்ந்து வினைகளே**
**அப்ப முப்பழம் அமுது செய்தருளிய**
**தொப்பையப்பனைத் தொழ வினையறுமே...**

விநாயகர் வழிபாடு மிகவும் புராதனமானது. தனிப்பெருஞ் சிறப்புடைய இந்த வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் நிலவியதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்று கூறப்படுகின்ற இந்து சமயப் பிரிவுகள் ஆறினுள்ளும் கணபதியை முழுமுதல் தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்ற நெறி காணாபத்தியமாகும்.

இந்து மக்களின் முதல் வழிபாட்டுக்குரிய தெய்வமாக விளங்குபவர் விநாயகப் பெருமான். நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் முதலிலே விநாயகப் பெருமானை வழிபாடாற்றித் தொடங்கினால் அந்தக் காரியம் எளிதிலே கைகூடிவிடும். விநாயகரை வழிபடாது தொடங்குகின்ற காரியங்கள் இடையிலே தடைப்பட்டு விடும் அல்லது சிதைந்து விடும்.

சிவபெருமான் பிள்ளையாரை வணங்காது முப்புரம் எரிக்கச்சென்றபோது அவரது தேரின் அச்சாணி முறிந்துவிட்டது. இதனை அருணகிரிநாதர் தமது திருப்புகழிலே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

***முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்***
***அச்சது பொடிசெய்த அதிதீரா***

இதில் இருந்து விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். விநாயகர் எளிதிலே வந்து அடியவர்களுக்கு அருளுகின்ற தெய்வமாகக் காணப்படுகின்றார். இதனால்தான் அருணகிரிநாதர் விநாயகனை நோக்கி 'அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே. ஐந்து கரத்தானை முகப்பெருமானே' என்று பாடுகின்றார்.

சாணம், சந்தனம், அரிசிமா என எளிதிலே கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடுகின்றோம். ஆல மரத்தடியிலும், அரச மரத்தடியிலும், குளக்கரையிலும் விநாயகர் வழிபாடு இடம்பெறுவதைக் காண்கிறோம்.

பிள்ளையாருக்குரிய வழிபாட்டு முறைகளாக குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. கணபதியின் சன்னிதியை அடைந்ததும் நாம் நெற்றிப்பொட்டில் குட்டிக் கொள்கிறோம். தேகத்தை மடக்கித் தோப்புக்கரணம் போடு கிறோம். எமது மூலாதாரத்தில் உள்ளவர் கண பதியேதான் என்பதனை எடுத்துக் காட்டுவதே இந்த இருவித வழிபாடுகளிலும் உள்ள முக்கிய தத் துவமாகும். இவ்வாறு நாம் நெற்றிப்பொட்டிலே குட்டிக் கும்பிடுவதற்கான வழக்கம் உருவானதற்கான புராண வரலாறுகள் பல இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் அகத்திய முனிவர் காவேரியை கமண்டலத்தில் அடைத்து வைத்த கதை. அகத்திய முனிவர் காவேரியை கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்தார். பூவுலகுக்கு பயன் கிடைக்க வேண்டி காக்கை வடிவத்தில் கணபதி சென்று கமண்டலத்தை கவிழ்த்து விட்டார். காவேரியும் விடுதலை பெற்றாள். அகத்தியர் கோபம் கொண்டு அதனை விரட்டிச் செல்ல அது சிறுவனாக மாறி ஓடியது. சிறுவனைத் துரத்திப் பிடித்து குட்ட எண்ணினார். ஆனால் தான் குட்ட நினைத்தது கணபதியையே என்று பின்னர் தனது ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டார். தனது தவறை உணர்ந்து தன் தலையிலேயே குட்டிக் கொண்டார். இவ்வாறு விநாயகர் வழிபாடு முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம்.

பிள்ளையாருக்குரிய விரதங்களாக ஆவணி வளர்பிறைச் சதுர்த்தி, மாதாமாதம் வருகின்ற வளர்பிறைச் சதுர்த்திகள், தேய்பிறையிலே வருகின்ற சங்கடகர சதுர்த்தி மற்றும் கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி ஈறாக அனுஷ்டிக்கப்படும் பிள்ளையார் கதை என்பன சிறப்பிடம் பெறுகின்றன.

அந்த வகையிலே ஆவணி வளர்பிறைச் சதுர்த்தி முக்கியத்துவம் பெறுகின்றது. விநாயக விரதங்களுள் மிக விசேடமானது இது. இந்துக்கள் அனைவரும் விரும்பி அனுஷ்டிக்கும் விரதம் இது. விநாயகர் ஆலயங்களில் பொதுவாக இந்த விரத நாளிலே விசேட அபிஷேகம், பூஜை வழிபாடுகள் நிகழ்கின்றன. இந்த விரதத்தை பூஜை வழிபாடுகளுடன் இல்லங்களில் கைக் கொள்வதும் நன்று. விநாயகப் பெருமான் உற்பவமான தினம் சதுர்த்தி என்பதால் சிறப்பிற்குரியது.

அதிகாலையிலே துயிலெழுந்து நீராடி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு பிரார்த்தனை, வழிபாடுகள், ஆலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபடவேண்டும். மத்தியானம் ஒரு பொழுது உண்ணலாம். நல்லெண்ணெய் சேர்க்கக்கூடாது என்பது விதி. இரவு உப வாசம் (பட்டினி) இருக்க முடியாதவர் கள் பால், பழம் அல்லது பலகாரம் உண்ணலாம்.

**இன்று (17.09.2015)**
**வியாழக்கிழமை விநாயக**
**சதுர்த்தி விரத நாளாகும்**
**அதனை யொட்டி இந்த**
**ஆக்கம் பிரசுரமாகிறது**

விநாயகர் சதுர்த்தி பூஜையில் இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில், இருபத்தியொரு பத்திரம், இருபத்தியொரு புஷ்பம், இருபத்தியொரு அறுகம்புல் என்பவற்றால் தனித் தனியாக விநாயகரை அர்ச்சித்தலாகும். ஒவ்வொரு நாமம் சொல்லப்படும் போதும் ஒவ்வொரு பத்திரம், ஒவ்வொரு புஸ்பம் சமர்ப்பித்து விநாயகனின் பலவித நாமங்களை ஓங்காரத்துடன் உச்சரித்து விநாய கருக்கு வணக்கம் செலுத்தலாம். இதனையே அர்ச்சனை என்கிறோம்.

பரமேஸ்வரனாகிய தந்தையின் வடிவத்தை நுட்பமாக தமக்குள் கொண்டு விளங்கும் பஞ்சமுக விநாயகரின் பத்துத் திருக்கரங்களிலும் முறையே வலது பக்கத்தில் சூலம், மழு, வாள், வச்சிரம், அக்கினி என்பனவும், இடது பக்கத்திலே முறையே அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம் ஆகியனவும் அமைந்திருக்கும். சிவந்த நிறமுடையவராகவும், சிங்கத்தை வாகனமாகக் கொண்டவராகவும், அண்டத்திலுள்ள அனைத்து உயிர்களும் தன்னுள் அடங் கியுள்ளன என்பதைக் காட்டும் பெருவயிறு கொண்டவராகவும் விநாயகர் விளங்குகின்றார்.

பிரார்த்திக்கின்ற அடியவர்களின் பக்தியில் வசப்படுகின்ற இறைவனுக்கு இத்தனை வித மான மூர்த்தி பேதங்கள் ஏனென்று நினைக்கத்தோன்றும். நாம் எல்லோரும் பிறப்பு, இறப்பு உடையவர்களாக இருப்பதுபோன்று இறைவனுக்கும் தோற்றம், வடிவம் என்பவற்றைக் கற்பித்து, இறைதத்துவத்தை எம்முடன் இணைத்து ஈடேறத் தலைப்படுகின்றோம்.

கந்த புராணத்திலே சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதமானது சூத முனிவரால் பஞ்ச பாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையை உடையது. துரியோதனன் உட்பட கௌரவர்களின் சூழ்ச்சியாலும், கொடுமையாலும் பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் செய்ய நேர்கின்றது. காட்டிலே மிகுந்த கஷ்டத்தையும் மனவேதனையையும் அடைந்த பாண்டவர்கள் சூத முனிவரைச் சந்திக்கின்றனர். தருமன் தமது கஷ்டங்களை நீக்கி சுகமாக வாழ வழி கேட்கிறான். அதற்குரிய பரிகாரமாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதேசிக்கிறார் சூத முனிவர். அதுமட்டுமன்றி இந்த விரதத்தை முறையாக அனுஷ்டித்துப் பயன்பெற்றவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகின்றார்.

தமயந்தி நளனை மீண்டும் வந்தடைதல், இராமன் சீதையை மீட்டதும், கிருஷ்ணன் ஜாம்பவதியையும், சியமந்தக மணியையும் பெற்றுக்கொண்டதும், இந்திரன் அசுரப் பகையை வென்றதும் பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததும் இந்த விரத மகிமையினால் தான் என்று விளக்கினார்.

இதனைக் கேட்ட பாண்டவர்களும் முறைப்படி விநாயக சதுர்த்தி விரதத்தைக் காட்டிலேயே அனுஷ்டித்து உரிய காலத்திலே ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். நினைத்த காரிய சித்தியை விரும்புவோர் இந்த விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

இதேபோன்று தமிழ்தளரா நாவும், அன்பு தளரா உள்ளமும் உடைய ஔவைப் பிராட்டி எந்தக் காரியத்தை செய்தாலும் செய்யாவிட்டாலும் விநாயகரை வழிபடுதலை மறக்கமாட்டார்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும்கலந்துனக்குநான்தருவேன்கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா

என்று தோத்தரித்து விநாயகனை வேண்டித் தமிழ்ப்புலமை பெற்றவள் அல்லவா...?

இந்த விதமாகப் பூசை செய்யும் ஔவைப் பிராட்டி தன்னையே மறந்து விநாயகப் பெருமானுடைய திருவருள் இன்ப உணர்ச்சியிலே மிதந்தார். அவரது உள்ளத்திலே இன்ப அலைகள் மோதின. அப்பொழுதே இந்தப் பாட்டு எழுந்தது.

# விநாயகர் சதுர்த்தி

இ.குமாரசாமி சர்மா,
வண்ணார்பண்ணை

ஆவணி மாதத்தில் வளர்பிறையில் நான்காம் நாளாகிய சதுர்த்தியன்று விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாடுகின்றனர். இந்த நிகழ்வை எமது நாட்டில் பல பகுதிகளிலும் வாழ் கின்ற மக்கள் எல்லோரும் சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

எதை எழுதத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழிபோட்டு விட்டே எழுதத் தொடங்குகிறோம். எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் விநாயகரை வேண்டிக் கொண்டே தொடங்குகிறோம். எந்தத் தெய்வத்தை பூசை செய்ய விரும்பினாலும் முதலில் விக்னேஸ்வரர் பூசை செய்கிறோம். அப்போதுதான் காரிய சித்தி உண்டாகும். விக்கினங்கள் விலகும். இது நம்மிடையே பரம்பரையாக நிலவி வரும் நம்பிக்கை.



**சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம்**
**ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே**

பிள்ளையார் எல்லோருக்கும் பொதுவானவர். ஸ்ரீ வைஷ்ணவ ஆலயங்களில் தும்பிக்கை ஆழ்வார் என்று கொண்டாடப்படுகிறார். கணபதி ஒருவரே மூலமுதலான பரம்பொருள் என்றும், பரப்பிரம்மம் என்றும், அவரே ஓம் என்கிற பிரணவ மந்திரமும் ஆவதாகக் கொள்ளப்படுகின்றது.

வேண்டுவார் வேண்டாதார் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் அருள்புரிபவர். பிள்ளையாரின் அருளை சுலபமாக பெறமுடியும் என்பது சான்றோர் வாக்கு. பல இடங்களில் விநாயகப் பெரு[illegible] தப்பட்ட போதிலும் [illegible] இடங்களில் சித்தி, புத்தி சமேதரராகப் பூஜிக்கப்படுகிறார். சித்தி, புத்தி விநாயகரின் தத்துவத்தை நாம் உணர வேண்டும். சித்தி, புத்தி பிரம்மாவின் இரு குமாரத்திகள். சித்தி நினைத்த காரியத்தை நடத்த உதவுவாள். புத்தி ஞானத்துக்கு மூலாதார மானவள். சித்தி, புத்தியின் சகோதரன் நாரத முனிவர்.

விநாயக சதுர்த்தி தினத்தன்று அதிகாலையில் எழுந்து வீட்டை நன்றாகச் சுத்தம் செய்து கோலமிட்டு அலங்கரிக்க வேண்டும். களிமண் பிள்ளையாரை வைத்துப் பூஜிக்கலாம். கோயில்களில் வாழை, மாவிலை, தோரணம் கட்டி அலங்கரித்து அபிஷேகங்கள், பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். வெள்ளெருக்கம் பூமாலை, அருகம்புல் மாலை ஆகியவற்றை விநாயகருக்கும் சார்த்த வேண்டும். பிள்ளையாருக்கு தும்பைப் பூ, வெள்ளெருக்கம்பூ, மலர்கள் கொண்டு பூசை செய்ய வேண்டும். மாவிலை, வில்வம் இலை, அருகம் புல், மாதுளை இலை ஆகிய இலைகளையும் கொண்டு பூஜிக்கலாம்.

விநாயக சதுர்த்தி தினத்தன்று, பூசை செய்து ஆராதனை செய்து முடியும் வரை எந்தவித உணவும் உண்ணாமல் விரதமாக இருப்பது மரபு. ஆராதனை முடிந்த பிறகுதான் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்த பொருள்களை உண்ணலாம். விநாயக சதுர்த்தியன்று விநாயகப் பெருமானுக்கு படைக்கும் நைவேத்தியங்களுள் மிகவும் முக்கியமானது மோதகம் என்னும் பலகாரம், கொழுக்கட்டை, வடை, சுண்டல், அப்பம், எள் உருண்டை, பாயா சம், அவல்பொரி, வாழைப்பழம், பலாப் பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு முத லியவற்றை சக்திக்குத் தக்கபடி நைவேத்தி யமாக வைக்கலாம்.

குத்துவிளக்குகளை ஏற்றி வைத்து விநாயக அஷ்டகம், விநாயகர் அகவல் போன்றவற்றை பாராயணம் செய்யலாம். விநாயக பூசை அஷ்டோத்திர சகஸ்ர நாமங்களுடன் சிறப்பாக பூசை செய்யலாம். எதிர்பாராமல் வருகின்ற தடைகளைத் தடுத்துக் காத்து இரட்சிப்பவர் விநாயகர். அதனால் பலரும் விநாயக சதுர்த்தியை ஒரு முக்கிய பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். விக்கினங்களை நீக்குவதாலேயே விநாயகருக்கு விக்னேஸ்வரர் என்னும் பெயரும் உண்டு. இந்தியாவில் தமிழ் நாட்டில் விநாயக சதுர்த்தி விழாவை பெரும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

விநாயகசதுர்த்தி, கணேச சதுர்த்தி, பிள்ளையார் சதுர்த்தி என்றெல்லாம் கொண்டாடப்படும் இந்த நாள், ஒவ்வொருவரும் பிள்ளையாரை தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப வழிபடும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. வேதங்கள், சாஸ்திரங்கள் விநாயகப் பெருமானை பிரணவ ஸ்வரூபன், கணநாதன் என்றெல்லாம் வர்ணித்தாலும், சாதாரணமானவர்கள் அவரை பிள்ளையார் என்றே அழைக்கின்றனர். விநாயக சதுர்த்தி எனும் இன்றைய புண்ணிய நாளில் நாம் பிள்ளையாரை வணங்கி வழிபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா வீதியின் தலைவிதி மாறுமா?

உரும்பிராய் கிழக்குப் பிரதேசம் தனியான கிராம சேவையாளர் பிரிவைக் கொண்டு, மக்கள் நெருக்கமாக வாழும் ஒரு பிரதேசமாகும். இது வலி.கிழக்குப் பிரதேசசபை நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசம் என்பதால் இந்தப் பகுதிக்குக் கீழ்வரும் கிளை வீதிகள், ஒழுங்கைகள் என்பவற்றின் பராமரிப்பு, புனரமைப்பு என்பவற்றை மேற்கொள்ளும் பொறுப்பு வலி.கிழக்கு பிரதேச சபைக்கே உரியதொன்று.

உரும்பிராய் கிழக்குப் பகுதியில் ஞானவைரவர் வீதி மற்றும் சிவன் வீதி என்பவற்றை இணைக்கும் ஒரு வீதியாக உள்ள செல்லப்பா வீதி நீளத்தில் மிகக் குறுகியதொன்று. ஆயினும் செல்லப்பா சனசமூக நிலையம், செல்லப்பா முன்பள்ளி, செல்லப்பா விளையாட்டுக் கழகம் என்ற பொது நிறுவனங்கள் அமைந்துள்ள இந்த வீதியில் குறிப்பிடத்தக்க அளவான குடியிருப்பாளர் வீடுகளும் அமைந்துள்ளன. அதுமட்டுமன்றி கரந்தன், நீர்வேலி போன்ற பகுதிகளுக்குச் செல்ல விரும்புவோர் குறுக்குப் பாதையாக இந்த வீதியைப் பயன்படுத்துவதாலும், தினமும் பாடசாலை செல்லும் மாணவர்கள், திருநெல்வேலி சந்தைக்குத் தமது விளைபொருள்களை எடுத்துச் செல்லும் விவசாயிகள் போன்ற தரப்பினர் நேரத்தையும் தூரத்தையும் மட்டுப்படுத்தும் பொருட்டு குறுந்தூர வீதியான செல்லப்பா வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

வலி.கிழக்கு பிரதேச சபையால் மேற்குறித்த ஞானவைரவர் வீதி மற்றும் சிவன் வீதி என்பவற்றின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படும் வேளைகளில் குறித்த செல்லப்பா வீதி, கவனத்தில் கொள்ளப் படாது புறக்கணிக்கப் பட்டு வந்ததால் கடந்த பல ஆண்டுகள் காலமாக செல்லப்பா வீதியானது பெற்றோரோ பாதுகாவலரோ அற்ற அநாதைப்பிள்ளை போன்ற நிலையில்கண்டு கொள்ளப்படாது குண்டும் குழியுமாக, கால்நடை யாகவோ, வாகனத்திலோ பயணிக்க இயலாத பயங்கர வீதியாக மாறியுள்ளது.

இது தொடர்பாக இந்தப் பகுதியைச் சேர்ந்த தனிநபர்களும், பொது நிறுவனங்களும் பல தடவைகள் வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் எதுவுமே நடக்கவில்லை. இன்றும்கூட அதே நிலையில்தான் இந்த வீதி இருந்து வருகின்றது. இந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதேச சபை உறுப்பினர் என எவரையும் இனங்காண இயலாத அளவுக்கு, இந்தப் பகுதியில் வசிக்கும் பிரதேச சபை உறுப்பினர்கூட வலி.கிழக்கு பிரதேச சபையின் கீழ்வரும் முழுப்பிரதேசத்தின் உறுப்பினர் எனக் குறிப்பிடப்படவேண்டிய அளவுக்கு விகிதாசாரத் தேர்தல் நடைமுறை கிராமிய மட்டப் பொதுமக்களது வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல ஆண்டுகளுக்கு முன்னர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் சிரமதான மூலம் திருத்தப்பட்டதன் பின்னர் குறித்த இந்த வீதி ஒருபோதும் திருத்த வேலைகளைக் கண்டதில்லை. இத்தனைக்கும் இந்த வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தமக்குரிய சோலை வரியை பிரதேச சபைக்குச் செலுத்தியே வருகின்றனர். வலி.கிழக்கு பிரதேச சபையின் உபஅலுவலகமொன்று உரும்பிராயில் இயங்கி வருவதுடன் சோலைவரி அறவீட்டில் அந்த உப அலுவலகம் கண்ணும் கருத்துமாகவே இருந்து வருகிறது.

தனியொருவராலோ, ஒரு சிலராலோ செலவினத்தை கையேற்று இந்தப் புனரமைப்பு வேலையை நிறைவேற்றிவிட இயலாது. இந்தப் பகுதி இளைஞர்கள் முன்வந்து சிரமதான மூலம் இந்த வீதியைத் திருத்த யோசனை முன்வைக்கப்பட்ட வேளை, பொறுப்புள்ள தரப்புக்கள் அக்கறை காட்டாதபோது நாம் எதற்காக இதனைச் செய்ய வேண்டும் என்ற கேள்வியும் முன்னெழுந்ததுண்டு.

அண்மைய சில நாள்களாக இந்த விடயம் ஒரு பேசுபொருளாக ஆகியுள்ளது. இதற்குக் காரணம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதேச சபைகளுக்கான தேர்தல் மிகவிரைவில் பெரும்பாலும் எதிர்வரும் ஜனவரி மாதமளவில், அதுவும் விகிதாசாரத் தேர்தல் முறையிலன்றி, தொகுதி வாரியாக, வட்டார வாரியாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முன்னைய நடைமுறையின் கீழ் நடத்தப்பட இருப்பதேயாகும். அண்மையில் வலி.கிழக்கு பிரதேச சபைக்கான வட்டார எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்ட செய்தி வெளிவந்ததையடுத்து இப்போதே சில பிரமுகர்கள் உரும்பிராய் கிழக்கு வட்டார உறுப்பினர் பதவியை வசிக்கும் நோக்கில் தேர்தலில் போட்டியிட கொடுக்குக்கட்ட ஆரம்பித்துள்ளதாகவும் அரசல் புரசலாகச் செய்திகள் அடிபடுகின்றன.


இந்த நிலையில் அரசியல் காவடிகளைத் தோளில் சுமந்து ஆடும் பிரமுகர்களை நம்பி எந்தப் பயனுமில்லை என்ற கையறுநிலையில் செல்லப்பா வீதி அதே கரடுமுரடான நிலையில் மனவெப்பியாரத்துடன் உறங்கிக் கொண்டிருக்கிறது.

தற்போது அரசதுறை நிர்வாகத்தின்கீழ் இயங்கும் வலி.கிழக்கு பிரதேச சபையின் பொறுப்பு வாய்ந்த நிர்வாக அதிகாரியாவது இந்த விடயத்தில் கவனம் செலுத்தி எதிர்வரும் மழைகாலத்துக்கு முன்னர் இந்த வீதியின் புனரமைப்புக்கு ஆவன செய்வாரா என்று இந்தப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

– ப.பிரதீபன்.
உரும்பிராய்




## கேலிச் சித்திரம்




# ஐ. நாவின் விசாரணை ஒரு வரலாற்று ஆவணம்

மனிதகுல வரலாற்றில் மிகக்கொடூரமான பல துயரங்களை எதிர்நோக்கிய தமிழரின் நீதிக்கான தேடலில் நேற்றைய தினம் மிக முக்கியமானதொன்றாகும்.

நேற்றையதினமே இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நடத்தப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டது.

ஜெனிவாவில் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கை இலங்கையில் 2002 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை பாரதூரமான உரிமை மீறல்களை அடையாளம் காட்டுகிறது. இவை இலங்கையில் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்கள் இரு தரப்பினராலும் பெரும்பாலும் இழைக்கப்பட்டிருக்கலாம் என்று வெளிப்படுத்தியுள்ளது. நீதியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நீதிபதிகள் - வழக்குத் தொடுப்பவர்கள் - சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஆரம்பிப்பது மிக முக்கியமானது என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் பரிந் துரைத்துள்ளார். .

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் நேற்று இந்த அறிக்கையை வெளியிட்டார்.

ஐ.நா. விசாரணை, இலங்கையில் நடைபெற்ற குரூரமான மீறல்கள் மற்றும் பாகுபாடற்ற எறிகணைத் தாக்குதல் (ஷெல் தாக்குதல்), நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமற்போதல்கள், மனிதாபிமானமற்ற சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள், சிறுவர் ஆள்சேர்ப்பு மற்றும் வேறு பாரதூரமான குற்றங்களை வெளிக்கொண்டு வந்துள்ளது' என்று மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக, இந்த அறிக்கையினூடாக வெளிக் கொண்டு வரப்பட்டுள்ள மீறல்கள் முழு சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் பாரதூரமான குற்றங்களாகும். மேலும், இலங்கையில் நம்பிக்கை தரும் புதிய அரசியல் சூழலின் மத்தியில் இந்த அறிக்கை முன்வைக்கப்படுகின்றது. நம்பகத்தன்மையான அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புடைய வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்வது முக்கியம், எனவும் ஆணையாளர் கூறினார்.

மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் ஹுஸைனின் பார்வையிலேயே அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் பாரதூரமானவையாக உள்ளன என்கின்றபோது போரின் கோரமுகத்தை நேரிலேயே அனுபவித்துணர்ந்த மக்கள் மத்தியில் எத்தகைய உணர்ச்சிப்பிரவாகங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை விவரிக்க வார்த்தைகளே கிடையாது.

கடந்த காலங்களில் ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் ஆரம்ப வடிவங்களிலிருந்து இறுதி வடிவமாக வந்தபோது நீர்த்துப்போகச் செய்யப்பட்டு, வலுவிழந்த நிலையில் தீர்மானங்களாக மாறியமை போன்று ஐ.நா. விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்களும் நீர்த்துப்போகச்செய்யப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தமிழர்கள் மற்றும் நீதிக்காகக் குரல்கொடுக்கும் ஆர்வலர்கள் மத்தியில் காணப்பட்டது.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத்தொடரின் ஆரம்பநாளான்று ஆற்றிய உரையில் ஐ.நா. ஆணையர் இலங்கை குறித்த அறிக்கை தொடர்பாக வெளியிட்ட கருத்துகள் ஆறுதலாக அமைந்திருக்கின்றன.

தமக்கு இழைக்கப்பட்ட படுபாதகச் செயல்களைத் தமிழர்கள் நன்கு அறிந்துள்ளபோதிலும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவை, அவை விவரிக்கப்பட்டுள்ள தோரணை என்ன, யார் யார் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன, இழைக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் என்ன, பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனமளிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் என்ன ஆகியவற்றை அறிவதற்கு மக்கள் ஆவலாக இருந்தனர்.

தமிழர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தில் கடந்த ஆறு தசாப்தகாலத்திற்கும் மேலாக எதிர்கொண்ட மோசமான அடக்குமுறைகள், இன்னல்கள், கொடூரங்களுக்கு நீதிகேட்டு நடத்திய பல போராட்டங்கள் சுயநல அரசியல்வாதிகளின் செயற்பாடுகளாலும், பேரினவாதிகளின் தந்திரத்தாலும், காட்டிக்கொடுப்புகளாலும் சர்வதேச புவிசார் அரசியல் தேவைப்பாடுகளுக்காகவும் நசுக்கப்பட்ட, அன்றேல் மலினப்படுத்தப்பட்ட வரலாறுகளுக்கு முன்பாக நேற்றைய தினம் வெளியான ஐ.நா. விசாரணை அறிக்கை ஒரு மைல்கல்லாகவே பார்க்கப்பட வேண்டும்.

இதுவரைகால வரலாற்றில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துச் சொல்வதற்கு சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய சர்வதேச ஆவணமொன்று இருந் திருக்கவில்லை. ஆனால், நேற்றைய தினம் வெளியான ஐ.நா. விசாரணை அறிக்கை, அந்தக் குறைகளைக் களையும் முதலாவது ஆவணமாக அமைகின்றது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமை ஆணையாளர் உரித்துக் காட்டும் உண்மைகள்

இலங்கையில் நடைபெற்ற குரூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள், பாகுபாடற்ற எறிகணைத் தாக்குதல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமற் செய்யப்படுதல், மனிதாபிமானம் அற்ற சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள், சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் பல பாரதூரமான குற்றங்களை எமது விசாரணை வெளிக்கொணர்ந்து உள்ளது.

★ இந்த அறிக்கையின் ஊடாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள், அனைத்துலக சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் மிகப் பாரதூரமான குற்றங்கள் எனில் தப்பன்று.

★ எமது அறிக்கையில் 'வெளிச்சம்' பாய்ச்சப்பட்ட அநீதிகள் குறித்து விசாரணை செய்வதற்கு, நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு, அனைத்துலக நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு நீதிமன்றத்தை நிறுவ வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் ஹுசைன் நேற்று ஆற்றிய, வழங்கிய பேருரையில் மேற்கண்டவாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அவரது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முழு அறிக்கையும், பக்கம் சாராமல் நடுநிலை நின்று நீண்டு செல்கிறது. அதன் முழு வடிவத்தை இன்னொரு பக்கத்தில்படிக்கலாம்.

இலங்கையில் இப்போது உள்ள நம்பிக்கை தரும் சூழ்நிலையின் மத்தியில், தாம் இந்த அறிக்கையை வெளியிடுவதாக அவர் சிலாகித்துள்ளார்.

நம்பகத்தன்மையான, அடிப்படை மாற்றங்களை கொண்டு வரவல்ல, வரலாற்றுச் சிறப்புடைய வாய்ப்பை, தவறாது பயன்படுத்திக் கொள்வது அவசியம் என்பதையும் சயிட் ஹுசைன் ஊன்றி உரைத்துள்ளார்.

- சட்டத்துக்குப் புறம்பான கொலைகள்
- பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகள்
- பல தசாப்தங்களாக பல்லாயிரக் கணக்கான இலங்கையர்கள் காணாமற் செய்யப்பட்டமை என்பவை குறித்து அவர் விலாவாரியாக வெளிப்படுத்தி உள்ளார்.
- போரின் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்ட பொதுமக்களின் உடைமைகள் மீதான தாக்குதல்களும் அதில் "படம்" பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

-- இராணுவ உடைமைகளுக்கும் பொது உடைமைகளுக்கும் இடையிலான வேறுபாடு கணக்கில் கொள்ளப்படாமல், தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதும் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

★ மனிதாபிமானச் செயற்பாட்டாளர்கள், அவர்களின் செயற்பாடுகள் மற்றும் நடமாடும் சுதந்திரத்தின் மீது கணிசமான தடைகளை விதித்தமை, வடமாகாணத்தில் வன்னிப் பிரதேசத்துக்கு உணவு மற்றும் மருத்துவப் பொருள்கள் சென்றடைவதைத் தடுத்தமை.

★ பொதுமக்களைப் பட்டினி போடுவதை ஒரு போர் உத்தியாகக் கொண்டு, வடக்கின் வன்னிப் பிரதேசத்துக்கு உணவு மற்றும் மருத்துவப்பொருள்கள் சென்றடைவதைத் தடுத்தமை.

★ சுமார் மூன்று லட்சம் இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திரம் அனைத்துலகச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்கு மேலாகப் பறிக்கப்பட்டமை.

மேற்கண்டவைக்கும் மேலாக, போரின் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்கள், அனைத்துலக மனிதாபிமானச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப அமையவில்லை.

அத்தோடு போர் நடத்துவதற்கான விதிமுறைக்கு ஏற்ப அவை அமையவில்லை.

மேலும், அரசு உருவாக்கிய போர் சூனியப்பிரதேசங்களில் அமைந்திருந்த மருத்துவமனைகள், மனிதாபிமான உதவி வழங்கும் நிலையங்கள் மீது அரச படைகள் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியதையும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் செயலாளர் சுட்டிக்காட்டி உள்ளார்.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக, மனித உரிமைகள் விசாரணைக்குழு இலங்கை செல்வதற்கு முந்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்ற தமது ஆதங்கத்தையும் --

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மிகுந்த கவலையுடன் வெளியிட்டிருக்கிறார் என்பது தொட்டுக் காட்டிக் குறிப்பிடக் கூடியதாகும்.

இலங்கையின் புதிய அரசு இவற்றைக் கருத்தில் கொள்ளுமா, அன்றி காலத்தைக் கடத்திச் சப்புக்கட்டு போடுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்....!,,

# சவால்களால் திணறிவரும் இலங்கை அரசு

■ சேரலாதன்

நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டு மக்கள் நிம்மதியாக வாழ்வதைக் குழப்புவதற்கென்றே சிலர் புறப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட நாளிலிருந்து நாட்டில் ஏதாவதொரு குழப்பத்தை ஏற்படுத்தி விட வேண்டுமென்பதில் முன்னாள் ஜனாதிபதியும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மகிந்த ராஜபக்சவும், அவரைச் சேர்ந்தவர்களும் கடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 24மணி நேரமும் முள் பரப்பிய கதிரையில் அமர்ந்திருப்பதைப் போன்றதொரு வேதனையை அனுபவித்து வருகின்றார். மகிந்தவுக்கு வாய்த்ததைப் போன்றதொரு சொகுசான ஜனாதிபதிப் பதவி மைத்திரிக்கு வாய்க்கவில்லை. மகிந்தரோ சர்வ அதிகாரங்களையும் தம்மிடையே குவித்து வைத்துக்கொண்டு, ஒரு சர்வாதிகாரியைப் போன்று செயற்பட்டார். அவரை எதிர்ப்பவர்கள் எவராக இருந்தாலும் ஒன்றில் காணாமல் போக வேண்டும். அல்லது இந்த உலகை விட்டே நிரந்தரமாகச் செல்ல வேண்டும் என்பது தான் அன்றைய நியதியாக இருந்தது. அவரது உடன்பிறந்த சகோதரர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தமை மகிந்தருக்கு மேலும் வாய்ப்பாகப் போய்விட்டது. அந்த ஒன்பது வருட கால இருண்ட யுகத்தை மக்கள் எளிதில் மறந்து விடமுடியாது. குறிப்பாகத் தமிழ்மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

ஆனால் இன்று மேலோட்டமாகப் பார்க்கும் போது பல மாறுதல்கள் தெரிகின்றன. ஜனாதிபதியின் முக்கியமான அதிகாரங்கள் களையப்பட்டு விட்டன. நீதித் துறைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவராக ஜனாதிபதி உள்ளார். ஆனால் அன்று நீதித்துறை மகிந்தவின் காலடியில் தலைவணங்கி நின்றது. குற்றவாளிகளை எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாது விடுவிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்ததால் மகிந்தவுக்கு வேண்டியவர்கள் சிறைக் கம்பிகளுக்குள் அடைபடாமல் சுதந்திரமாக வெளியே வரமுடிந்தது. ஆனால் இன்று அந்த நிலை இருக்கின்றதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவியதுடன் அரசியலில் இருந்து விலகியிருக்க வேண்டிய மகிந்த, இன்று ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதுடன், நல்லாட்சி நிலைத்து நிற்பதை விரும்புவதாகவும் தெரியவில்லை. எப்படியோ சகலதையும் குழப்பி விடவேண்டும் என்ற வெறியுடன் அவர் செயற்படுவதையே காண முடிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தேசிய அரசொன்றை அமைத்துள்ளதாகக் கூறப்பட்டாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்தவுக்குச் சார்பாக இருப்பவர்கள் தற்போதைய அரசை வீழ்த்துவதிலேயே குறியாக இருக்கின்றனர். மைத்திரியைவிட மகிந்தவையே அவர்கள் பெரிதும் மதிக்கின்றனர். இது மகிந்தவுக்குப் பெரிய அளவில் கைகொடுத்து வருகின்றது. பெரிய மீன் வரும் [illegible] காகக் காத்திருக்கின்றார். அரசு எப்போது உடைந்து போகும் என்பதே அவரது எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது. மீண்டுமொரு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றால் மகிந்தவும் அதில் போட்டியிடுவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை. ஏனென்றால் தம்மிடமிருந்து கை நழுவிப்போன அந்த உயர்ந்த பதவியை எப்படியாவது மீண்டும் அடைந்தே தீருவது என்பது அவரது குறிக்கோளாக உள்ளது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் கட்சியா? ஆட்சியா? என்பதில் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் உள்ளார். கட்சியில் உள்ள அனைவரும் அவரது தலைமையை ஏற்றுக்கொள்ளும் நிலையும் காணப்படவில்லை. இப்போதும்கூட மகிந்தவின் பக்கமே ஆள்கள் சாய்ந்து நிற்கின்றனர். மகிந்தவை ஆட்சியின் உச்சத்தில் அமர்த்திவிட வேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்ததை இனவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த இனவாதிகள் மகிந்த முகாமைச் சேர்ந்தவர்கள் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. தமக்கே எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென இவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஒருபோதுமே எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்து விட முடியாது. நரிக்குணம் கொண்ட அரசியல்வாதியான ஜே.ஆரின் திட்டமும் இதுதான். ஆனால் நாட்டின் அரசியல் குழப்ப நிலை காரணமாக சம்பந்தனால் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய கதிரையில் அமர முடிந்துள்ளது. இந்தப் பதவியை சம்பந்தன் வகிப்பதன் மூலமாக தமிழர்களுக்கு எந்த விதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. மேலும் தற்போதைய அரசுக்கு கூட்டமைப்பினர் ஆதரவு வழங்கி வரும் நிலையில் உண்மையான எதிர்க்கட்சியாகவும் செயற்படமுடியுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

இதேவேளை ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகி இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் ஆரம்ப உரையை நிகழ்த்திய ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹுசேன் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் நடத்திய விசாரணை அறிக்கையின் உள்ளடக்கமானது பாரதூரமான தன்மையைக் கொண்டதாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் இலங்கை அரசுக்கு உவப்பானதாக இருக்கப்போவதில்லை. இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குற்றச் செயல்கள் தொடர்பாக நேர்மையான உள்ளக விசாரணையொன்றை நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டிய பொறுப்பும் அதற்கு உள்ளதால் அரசின் பணிகள் கடுமையானவைகளாக மாறி விடப் போகின்றன. மகிந்த காலத்தில் போர் இடம்பெற்றதால் குற்றச் செயல்களில் அவருக்கும் தொடர்பு இருந்ததாகவே கருதப்பட வேண்டும். மேலும் பாதுகாப்புச் செயலராக இருந்தவர் என்ற வகையில் கோத்தபாயவுக்கும் இராணுவத் தளபதியாக இருந்தவர் என்ற வகையில் சரத்பொன்சேகாவுக்கும் இருந்த தொடர்புகள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெற வேண்டும்.

ஆனால் தற்போது தேசிய அரசு ஒன்றை அமைத்துள்ளதாகக் கூறுகின்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதை ஆதரிக்கவில்லை. அத்துடன் போர்க்குற்றங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் படையினருக்குத் தண்டனை வழங்கப்படுவதையும் அவர்கள் விரும்பவில்லை. இவ்வாறு ஒரு விசாரணை இடம்பெற்று தண்டனைகள் வழங்கப்பட்டால் பெரும்பான்மையின மக்கள் தமக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து விடுவார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் அவர்களைச் சமாதானம் செய்யும் வகையில் எதிர்க்கட்சித் தலைமை பதவி வழங்கப்பட்டதாகக் கூறுவோரும் இல்லாமலில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர் சர்வதேச விசாரணையை ஆதரிக்காமை தமிழர் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை சர்வதேச விசாரணை கோரி தமிழர் பிரதேசங்களில் கையெழுத்து வேட்டையும் பரவலாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் ஜெனிவா சென்றுள்ள சம்பந்தன் தலைமையிலான குழுவினர் என்ன நிலைப்பாட்டை அங்கு எடுக்கப்போகின்றார்கள் என்பதும் ஆவலைத் தூண்டுமொரு விடயமாக மாறிவிட்டது.

இலங்கை அரசுக்கு மகிந்த தரப்பினர் கொடுத்து வரும் நெருக்கடிகள் ஒருபுறமிருக்க, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கை பெரும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. இந்த அறிக்கை தொடர்பாக நேர்மையான உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அரசு நிலைத்து நிற்குமா? என்ற சந்தேகமும் கூடவே எழுகின்றது.

இதேவேளை அடுத்த வருடம் இடம்பெறுமெனக் கூறப்படும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பரப்புரைக் கூட்டங்களில் ஜனாதிபதியும், மகிந்தவும் ஒன்றிணைந்து கலந்து கொள்ளப்போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறாயின் மகிந்தவை ஜனாதிபதி மன்னித்து ஏற்றுக்கொண்டு விட்டாரா? என்ற கேள்வியும் எழுகின்றது. அவ்வாறாயின் மகிந்த ஆதரவாளர்களின் கைகள் ஓங்குவதற்கே இது வழி வகுக்கப்போகின்றது.

எது எப்படியோ இலங்கை அரசு பல சவால்களை எதிர்கொள்ளப் போகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருந்தும் இவை வெளிக்கிளம்பப் போகின்றன. இவற்றைத் தாக்குப் பிடித்து நிற்குமா அரசு என்பதுதான் இன்றைய முக்கிய வினாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடாய்ப்படுத்தும் பார்த்தீனியம்...!



> **பார்த்தீனியச் செடிகளுக்கு உச்சி முதல் வேர்க்கால் விஷம். இந்த விஷத்தின் பிடியிலிருந்து தப்பிக்கமுடியாமல் பார்த்தீனியம் படையெடுத்த இடங்களில் எல்லாம் உள்ளூர்ச் செடிகள் அழிகின்றன. அழிந்த செடிகளின் சாம்பல் மீது நின்று ஆட்சி நடத்து கின்றன 'பார்த்தீனியங்கள்'**

■ தட்சா ஜோ

பார்த்தீனியம். கொஞ்சக் காலத்துக்கு முன்னர் அடிக்கடி உபயோகிக்கப்பட்டு வந்த சொல் இந்தப் பார்த்தீனியம். ஆனால் இப்போது அதைப்பற்றிக் கதை குறைந்துபோய்விட்டது. படையெடுத்துவந்த பார்த்தீனியம் அழிக்கப் பட்டது. வடமாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ் இதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும் ஒரு புறத்தால் அழிக்க அழிக்க மறுபுறத்தால் வளரும் இனம் இந்தப் 'பார்த்தீனியம்'

ஊடகங்கள் வாயிலாக பலர் 'பார்த்தீனியம்' பற்றிக் கேள்விப்பட்டிருந்தாலும், பலருக்கு இந்தச் செடியைத் தெரியாது. பெரியவர்கள் கூட பலர் கேட்பதுண்டு 'பார்த்தீனியம் என்றால் என்ன? கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் பார்க்கவில்லை' என்பார்கள்.

பார்த்தீனியச்செடிகள் இந்தியாவிலிருந்துதான் இலங்கைக்குள் வந்தன. இந்தியாவுக்கு பார்த்தீனியம் வந்தது அமெரிக்காவில் இருந்து. அமெரிக்காவில் 1954ஆம் ஆண்டளவில் கோதுமை அதிகளவில் விளைந்தது. அவற்றை வீணாக்காமல் இந்தியாவுக்கு அனுப்பியது அமெரிக்கா. அப்படி வந்த கோதுமைத் தானியங்களோடுதான் இந்தியாவுக்குள் வந்து புகுந்தது பார்த்தீனியம். இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது அவர்களது இராணுவ வாகனங்கள், உணவுக்காகக் கொண்டுவரப்பட்ட செம்மறி ஆடுகள், கடுகு விதைகள் போன்றவற்றோடு வந்த பார்த்தீனிய விதைகள் வட பகுதியில் பார்தீனியங்களின் முதல் விதைப்பாக குறிப்பிடப்படுகின்றது. இந்தப் பார்த்தீனியச் செடிகளுக்கு உச்சிமுதல் வேர்க்கால் வரை விஷம். இந்த விஷத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாமல் பார்த்தீனியம் படையெடுத்த இடங்களில் எல் லாம் உள்ளூர்ச் செடிகள் அழிகின்றன. அழிந்த செடிகளின் சாம்பல் மீது நின்று ஆட்சி நடத்துகின்றன 'பார்த்தீனியங்கள்'.

'பார்த்தீனியச் செடிகளை வளர விட்டு எவரும் பார்த்துக்கொண்டிருப்பதில்லை. இயலுமானவரை அழித்துக்கொண்டுதான் 'இருக்கிறோம். அதுவும் தன்னிலையில் இருந்து மாறாது மீண்டும் மீண்டும் வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இதற்கு முற்று முழுதாக விவசாய அமைச்சை பொறுப்புக் கூறுமாறு கேட்க முடியாது. இருப்பினும் உரிய தரப்பினர் பார்த்தீனியத்தை முற்றா அழிக்க ஆவன செய்ய வேண்டும்' என்பது நீர்வேலிப் பகுதி விவசாயிகளின் ஒட்டு மொத்தக் கோரிக்கை.

'பார்த்தீனியம் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும். இயன்ற வரை அந்த விழிப்புணர்வை வட மாகாண விவசாய அமைச்சால் வழங்கியுள்ளோம். குறிப்பாக 'வேலைக்கு உணவு' என்ற திட்டத்தினூடாக பார்த்தீனிய அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. களை கொல்லிகள் விசிறப் பட்டும் பார்த்தீனியச் செடிகள் அழிக்கப்பட்டன. பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் போன்றவர்களை இது தொடர்பில் விழிப்புணர்வடையச் செய்ய வேண்டும். இதற்கு ஊடகங்களின் பங்களிப்பும் அவசியம்' என்கிறார் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

தண்டனைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுமிடத்தில் குற்றங்கள் குறைக்கப்படுகின்றன என்பது இங்கும் பொருத்தமாகின்றது. அண்மையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. எவருடைய வீடுகளில் டெங்கு பெருகும் அபாயம் உள்ளதோ அவர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டது. இதன் மூலம் டெங்கு ஒழிப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 'இது போன்ற தண்டனை முறை பார்த்தீனிய அழிப்புக்கும் கொண்டுவரப்பட்டால் தான் வெற்றிகரமாக பார்த்தீனியங்களை அழிக முடியும்' என்கிறார் – விவசாய அமைச்சர்.

இலங்கையின் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 'பார்த்தீனியச் செடியை காணுமிடத்தில் அழிக்காது விடுதல் தண்டனைக்குரிய குற்றம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டனைகளாக ஒரு மாதத்துக்குட்பட்ட ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படாத தண்டப்பணம் செலுத்தல் அல்லது மேற்குறித்த இரு தண்டனைகளும் விதிக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

'சட்டரீதியான நடவடிக்கை அவசியம். அதனை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். இந்தச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசிலிருந்து உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும். இது தொடர்பில் விவசாயத் திணைக்கள தாவர பாதுகாப்புப் பிரிவினரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம். இந்த நிலையில் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வெவ்வேறு திணைக்களங்களூடாக 131 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி அவர்களுக்கு சட்டநடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு. அதற்கான அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளன' என்கிறார் விவசாய அமைச்சர்.

குறித்த 131 பேரும் கால்நடை, உள்ளூராட்சி, விவசாயம், நீர்ப்பாசனம், கூட்டுறவு, கமநல அபிவிருத்தி போன்ற திணைக்களங்கள் ஊடாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு பக்கத்தால் அழிக்க மறுபக்கத்தால் வளரும் பார்த்தீனியத்தை அழிப்பதற்கு செலவளிக்கப்படும் பணம் வீண் என்பது விவசாய அமைச்சினால் குறிப்பிடப்படும் ஒரு விடயம்.

டெங்கு ஒழிப்பின்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அடிக்கடி சூழலை அவதானித்து வந்தனர். அதனால் டெங்கு முற்றாக ஒழிக்கப்பட்டது எனக் கூறும் பொதுமக்கள், பார்த்தீனிய அழிப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் இவ்வாறு அடிக்கடி வந்து பார்த்து உரிய தண்டனை வழங்குவார்களா? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சட்டநடவடிக்கை கொண்டுவரப்பட்ட பின்னராவது குடாநாட்டில் 'பார்த்தீனியம்' ஒழிக்கப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

'பல்வேறு திட்டங்கள் மூலம் துரித கதியில் பார்த்தீனியச் செடிகள் அழிக்கப்பட்டு வந்தன. தற்போது அதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. பார்த்தீனியச் செடிகளால் பாதிக்கப்படுவது உள்ளூர் விவசாயம் தான். இதனைக் கருத்தில் கொண்டு பார்த்தீனியத்தை முற்றாக ஒழிக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும்' என்பது ஊரெழு விவசாயிகளின் பொதுவான கருத்து.

'விவசாய அமைச்சு மட்டும் பார்த்தீனிய அழிப்பில் ஈடுபடுவது என்பது சாத்தியமில்லை. விவசாயிகள், பொதுமக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். எமது நிலத்தில் பார்த்தீனியம் என்ற கொடிய செடியை அடியோடு அழிக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். இது தொடர்பில் பொதுமக்கள் சரியான முறையில் அறிவுறுத்தப்பட வேண்டும். அனைவரும் முயன்றால் நிச்சயமாக எமது நிலத்தில் இருந்து பார்த்தீனியத்தை அழிக்கலாம்' என்பது வடமாகாண விவசாய அமைச்சில் பணிபுரியும் அலுவலர்களின் கருத்து.

ஏதோ ஒரு வகையில் அழிவுகளையே சந்தித்துக்கொண்டிருக்கிறது எமது சமுதாயம். உள்நாட்டுப் போரில் இழந்தவை போக சொந்த நிலத்தில் – சொந்த உழைப்பில் வாழலாம் என்ற நம்பிக்கையுடன் வாழ முற்பட்ட விவசாயிகளை தடுக்கின்றன பார்த்தீனியச் செடிகள். வல்லரசுகள் எமக்குத் தந்த அழிவுகளில் ஒன்றாகவே இதனையும் பார்க்க வேண்டி உள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதுவளையின் மருத்துவக் குணங்கள்



தூதுவளை அனைத்து இடங்களிலும் பயிராகும் கற்ப மூலிகை. இதற்குத் தூதுவளை, சிங்கவல்லி அளர்க்கம் என்று பல பெயர்கள்உண்டு. சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை.

தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், உள்ளி சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலுகொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும். தூதுவளைக் கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் ஆண்மைச் சக்தியையும் அதிகரிக்கும். தூதுவளையில் கல்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும் பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளைக் கீரையைப் பருப்புடன் சேர்த்துச் சமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.

வாத, பித்தத்தால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்த மிளகு கற்பம் 48 நாட்கள் சாப்பிட்டபின், தூதுவளைக் கீரைச்சமையல் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வாத, பித்த நோய் தீரும். தூதுவளையை நிழலில் உலர்த்திப் பொடியாக்கி வைத்துக் கொண்டு காலை, மாலை என இருவேளையும் தேனில் கலந்து கற்ப முறையாக பத்தியம் கொண்டு ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால், இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும். தாதுவைப் பலப்படுத்தும். தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். இந்திரியம் அதிகமாகி ஆண்மையைக் கூட்டும். காது மந்தம், இருமல், நமைச்சல், பெருவயிறு மந்தம் போன்றவற்றுக்குதூதுவளைக்கீரை சிறந்த மருந்தாகும்.

மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர்ச் சுரப்பு, பல் ஈறுகளில் நீர்சுரத்தல், சூலை நீர், போன்றவற்றுக்கு தூதுவளைக் கீரை சிறந்த மருந்தாகும்.

(தொடரும்)

**புரட்டாதி-01**
**வெள்ளிக்கிழமை**
**18.09.2015**

*திதி: பஞ்சமி மு.இ.09.03 வரை*
*நட்சத்திரம்: விசாகம் பி.இ.01.44 வரை*
*சுபநேரம்:06.03–07.33 வரை*
*இராகுகாலம்: 10.33–12.03 வரை*

### எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய்

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்த வனாகவே ஆகிவிடுவாய். மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான். பிறரிடமிருந்து நல்லனவற்றைக் கற்றுக் கொள்ள மறுப்பவன், இறந்தவனுக்கு ஒப்பாவான். காயம்படாதவன் தான் தழும்மைக் கண்டு நகைப்பான். உடலிலும் மனதிலும் வலிமை இல்லாமல் போனால் ஆன்மாவை அடைய முடியாது. நீ உன்னைப் பலவீனன் என்று ஒரு போதும் சொல்லாதே. எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையாக இரு. பொறுப்பு முழு வதையும் உன் தோள் மீதே சுமந்து கொள். சுதந்திரமான வனாக இரு. எவரிடமிருந் தும் எதையும் எதிர்பார்க்காதே. நான் உறுதியாகச் சொல்வேன். உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிட மிருந்து உதவியைப்பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும்தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்தவையாகத்தான் இருக்கும்.

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 40 | 40 | 20 |
| கத்தரி | 90 | 100 | 100 | 80 | 50 | 80 | 80 | 40 |
| கரட் | 70 | 140 | 80–120 | 60 | 120 | 120 | 100–120 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50–60 | 40 |
| பயிற்றை | 60 | 50 | 80 | 50 | 80 | 80 | 80–100 | 30 |
| பாகல் | 90 | 100 | 100 | 80 | 100 | 120 | 100–110 | 60 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 120 | 80 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 110 | 120 | 100 | 90–100 | 120 | 100–120 | 90 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 80–90 | 120 | 100–120 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30 | 40 | 50 | 25 |
| தக்காளி | 60 | 50 | 50 | 60 | 40 | 80 | 80 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 25 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 10 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 140 | 140 | 120 | 120 | 200 | 200 | 100 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 50 | 60 | 80 | 30 |
| கோவா | 70 | 80 | 60 | 80 | 60 | 100 | 100 | 50 |
| வெண்டி | 40 | 40 | 40 | 60 | 60 | 80 | 50 | 25 |
| போஞ்சி | 170 | 140 | 180 | 160 | 160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 | 60 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50–60 | 50–60 | 40–50 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 90 | 75–80 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 | 100 | 80–100 | 240 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 100 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 100 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 120 | 60 | 120–140 | 80 | 120 | 70 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 600 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 300 | 600 | 600 | – |
| பாரை | 500 | 500 | 500 | 700 | 600 | 430 |
| சுறா | 600 | 500 | – | 600 | 500 | – |
| சீலா | 250 | 500 | 300 | 400 | 500 | 350 |
| விளை | 650 | 450 | – | 500 | 500 | 400 |
| முரல் | 350 | 400 | – | 400 | 400 | – |
| கும்பிளா | 450 | 400 | 300 | 400 | 400 | 350 |
| கிழாக்கன் | 450 | 800 | 300 | 450 | 300 | – |
| ஒரா | 400 | 400 | 300 | 350 | – | – |
| திரளி | 250 | 250 | 100 | 200 | 100 | 300 |
| நகரை | 200 | 250 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 150 | 80 | 200 | 100 | 80 |
| ஓட்டி | 250 | 200 | 100 | 200 | 200 | 250 |
| திருக்கை | 150 | 250 | 250 | 300 | 250 | 150 |
| பாலை | 450 | 300 | – | 400 | – | – |
| வாழை | 100 | 150 | – | 250 | – | 200 |
| கொய் | 100 | 150 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | – | 250 | 300 | 250 |

## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 5 | 4 | 8 | 3 | 9 | 2 | 1 |
| 4 | 8 | 2 | 7 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 1 | 9 | 3 | 2 | 6 | 5 | 7 | 8 | 4 |
| 3 | 1 | 6 | 8 | 2 | 7 | 4 | 9 | 5 |
| 5 | 2 | 8 | 9 | 1 | 4 | 6 | 7 | 3 |
| 9 | 4 | 7 | 3 | 5 | 6 | 2 | 1 | 8 |
| 7 | 5 | 9 | 1 | 4 | 8 | 3 | 6 | 2 |
| 2 | 6 | 1 | 5 | 3 | 9 | 8 | 4 | 7 |
| 8 | 3 | 4 | 6 | 7 | 2 | 1 | 5 | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 3 | 2 | 5 | | | | 6 |
| | 6 | | 9 | | 3 | 7 | | 8 |
| | | 8 | | 7 | | | 2 | |
| 2 | 1 | 5 | | | 7 | | | |
| | 3 | | 8 | | 5 | | 1 | |
| | | | 3 | | | 6 | 7 | 5 |
| | 8 | | | 1 | | 5 | | |
| 5 | | 1 | 6 | | 9 | | 3 | |
| 7 | | | | 3 | 4 | 8 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 | செப்ரெம்பர் 17 | வியாழக்கிழமை | உதயன்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பிறருக்கு இயன்ற அளவில் உதவிபுரிந்து அன்பை வெளிப்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுதலைப் பெறுவர்.

**இடபம்:** மற்றவர்களிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் சிறு பின்னடைவைச் சரி செய்ய முயற்சி எடுக்க வேண்டி வரும். கொடுக்கல், வாங்கலில் கவனம் வேண்டும். சீரான ஓய்வு உடல் நலம் தரும்.

**மிதுனம்:** சிலர் சொல்லும் ஆலோசனைகள் மனதில் சங்கடத்தை உருவாக்கும். செயல்களில் நிதானம் பின்பற்றுவது அவசியம். கூடுதல் உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**கடகம்:** பகைவரால் உருவான சூழ்நிலையைச் சமயோசிதமாக முறியடிப்பீர்கள். தொழில் வியாபாரம் அபிவிருத்தியாகி பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவீர்கள்.

**சிங்கம்:** பணிகளில் கூடுதல் கவனம் கொள்வதால் பிரச்சினையைத் தவிர்க்கலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கை அடையச் சிரமப்படலாம். அளவான பணவரவு கிடைக்கும். பயணத்திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**கன்னி:** முழு மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்ததை விட பெரும் நன்மை உண்டு. தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சியும், நற்பெயரும் ஏற்படும். சேமிப்பை அதிகரிப்பீர்கள். குடும்பத்தினர் விரும்பிக் கேட்ட சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** சிலர் உங்களை அதிகம் புகழ்ந்து பேசுவர்; முன்யோசனையுடன் அவர்களிடம் நடந்து கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். புத்திரர்கள் படிப்பில் சிறந்து விளங்க வழிகாட்டுவீர்கள். சுகமான நித்திரை வரும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். ஆதாய பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு இடம்பெறும்.

**தனுசு:** நண்பர்கள் சொல்லும் கருத்தின் நியாயத்தை உணருவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்ததைவிட இலாபம் அதிகரிக்கும். ஆடம்பரத்துக்காகத் தாராள அளவில் செலவு செய்வீர்கள்.

**மகரம்:** உங்களது முன்னேற்றம் கண்டு பொறாமைப்படுபவரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறு வரலாம். உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** பிறர் கருத்துக்களை ஏற்க தயங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். விலை மதிப்புள்ள பொருள்களைக் கவனத்தோடு பாதுகாக்கவும். குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு வரலாம்.

**மீனம்:** தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெறும் சூழ்நிலை ஏற்படும். கொடுக்கல் வாங்கல் திருப்திகரமாகும். புத்திரர்கள் விரும்பிய பொருள்களை தாராள செலவில் வாங்கித் தருவீர்கள். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பால் மகிழ்வீர்கள்.




# சீனாமீது படையெடுக்கும் பாகுபலி

எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில், பிரபாஸ், சத்யராஜ், அனுஷ்கா, தமன்னா உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான திரைப்படம் 'பாகுபலி', இந்தப் படம் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல மொழிகளில் வெளியாகி சக்கைபோடு போட்டது. இந்தத் திரைப்படம் தற்போது சீனாவின் 5000 அரங்குகளில் திரையிடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தை வெளியிடும் ஸ்டார்ஸ் நிறுவனம் ஆமீர் கான் நடித்த 'பிகே' திரைப்படத்தை சீனாவில் வெளியிட்ட அனுபவம் கொண்டது. நவம்பர் மாதத்தில் இந்தப் படத்தை ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளனர். தென் இந்தியத் திரைப்படம் ஒன்று சீனாவில் இப்போதுதான் முதல்முறையாக ரிலீஸ் ஆக உள்ளது. சங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவான 'ஐ' திரைப்படத்தை சீனாவில் வெளியிட உள்ளதாக தயாரிப்புத் தரப்புத் தெரிவித்திருந்தது. ஆனால் இதுவரை ரிலீஸ் ஆகவில்லை. சீனாவில் ரிலீஸ் செய்வதற்காக பாகுபலி திரைப்படத்தில் 20 நிமிடக் காட்சிகள் குறைக்கப்பட்டுள்ளதாம்.



'ஏசி' என்பது நாம் இருக்கும் சின்ன அறையைக் குளிராகவும் இந்தப் பெரிய பூமியைச் சூடாகவும் மாற்றுகிறது.



இணையத்தால் ஒன்றுபட்டாலும் நாம் எல்லோரும் பிரிந்துதான் இருக்கின்றோம்...!

# பேஸ் புக்கில் பிடித்தவை...



பணம் சம்பாதிப்பது, குண்டூசியால் பள்ளம் தோண்டுவது போல... செலவழிப்பது குண்டூசியால் பலூன் உடைப்பது போல....






இதுதான் "நடமாடும் கிராமம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திறமைக்குச் சவால்

மஹாபாரதப் போர் நடந்து கொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க்களத்துக்குள் வந்து கொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர்ப் பார்வையும், நிமிர்த்திய நெஞ்சும், வீர நடையும் கிருஷ்ணரை ஈர்த்தது. தனது உருவை மாற்றிக் கொண்டு அவனை 'அணுகி வீரனே எங்கு வந்தாய்?' என்று கேட்டார். 'நான் போரில் பங்கேற்க வந்தேன்!' என்றான் அவன். உனக்கு என்னப்பா தகுதியிருக்கிறது என்றார் கிருஷ்ணர். அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, 'இதில் ஒன்றால் பாண்டவர்களையும், மற்றொன்றால் கௌரவர்களையும், மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன் நான்' என்றான்.




'எப்படி உன்னை நம்புவது?' என்றார் கிருஷ்ணர். அவன் அவரை மேலும் கீழும் பார்த்து விட்டு தூரத்தில் உள்ள மரத்தைக் காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பினால் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான். விளையாடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்த கிருஷ்ணர், 'சரி செய் பார்க்கலாம்' என்றார். அவர் கடவுளல்லவா? அவனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலை களை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக் கொண்டார்.

வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னது போலவே மரத்திலிருந்த அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்து விட்டன. அதோடில்லாமல் அம்பு திரும்பவும் வந்து ஐந்து முறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது. வீரன் கிருஷ்ணரைத் தெரிந்து கொண்டு வணங்கினான். கிருஷ்ணரும் அவனது திறமையைப் பாராட்டினார், 'சரி, யாருக்காகப் போராடப் போவதாக உத்தேசம்?' என்று கிருஷ்ணர் கேட்டார். அவனோ 'என் திறமைக்குச் சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்' என்றான். இவன் போரிட்டால் இவன் பக்கம் உள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும், உடனே இவன் எதிர்க் கட்சிக்குப் போய் விடுவான். பிறகு அது ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய் விடுமே என்று கிருஷ்ணர் யோசித்தார்.

'வீரனே, எனக்கு ஓர் உதவி உன்னிடமிருந்து ஆக வேண்டியிருக்கிறது' என்று அவனிடம் சொன்னார். அவனும் செய்யக் காத்திருப்பதாகத் தலை வணங்கினான். 'இந்தப் போரின் முடிவைப் பாதிக்கும் சக்தியுள்ள ஒருவன் இருக்கிறான். அவன் தலை எனக்கு வேண்டும்' என்றார் கிருஷ்ணர். 'யார் அவன்? சொல்லுங்கள், இப்போதே கொய்து வருகிறேன்' என்றான் வீரன்.

கிருஷ்ணர் வீரனே, போரின் முடிவுக்காக உழைக்க எண்ணாமல் உன் திறமைக்குச் சவாலாகப் போரில் பங்கேற்க விழையும் நீதான் அந்த ஆள் என்று அவனது தலையைக் கேட்டு விட்டார். அவனும் உடனே கொடுக்க ஒப்புக் கொண்டான். கிருஷ்ணர் அவன் பக்தியை மெச்சி, அவனுக்கு வரம் ஒன்று கொடுத்தார். அவன்தான், இறந்தாலும் மஹாபாரதப் போரைத் தன் கண்ணால் பார்க்க வேண்டும் என்று வரம் கேட்டான். வரத்தை அருளி விட்டு தலையை வாங்கிக் கொண்டார் கிருஷ்ணர்.



## விடுகதைகள்



1) ஆடையில்லாத கறுப்பழகி, ஆடிச் சுழன்று பாடுகிறாள். அவள் யார்?
இசைத்தட்டு
2) வெட்டிக் கூறுபடுத்தி வைக்கிறார்களே தவிர, எவரும் தின்பதில்லை. அது என்ன?
சீட்டுக்கட்டு
3) மூன்று நிறக் கிளிகளாம், கூண்டில் போனால் ஒரே நிறம். அது என்ன?
தாம்பூலம்
4) அடித்தால் விலகாது அணைத்தால் நிற்காது. அது என்ன?
தண்ணீர்
5) குளம்படிச் சத்தக்காரன், போருக்குக் கெட்டிக்காரன். அவன் யார்?
குதிரை

## பல்வேறு தொழிலாளர்கள்

நாம் வாழும் சமுதாயத்தில் நாம் மட்டும் தனியாக வாழ்வதில்லை. எமக்குப் பல்வேறு தொழிலாளர்கள் உதவி செய்கிறார்கள். அவர்கள் நமது நண்பர்கள் ஆவார்கள்.

வீடுகட்டுபவர்
ஆசாரியார்
தேங்காய் பறிப்பவர்.
காய்கறி விற்பவர்
முடி திருத்துபவர்
இரும்புக் கொல்லர்
தையல்காரர்
குழாய் இணைப்பாளர்
மருத்துவர்
துணிகளைத் துவைத்துத் தருபவர்.
துப்புரவுத் தொழிலாளி
போக்குவரத்துக் காவலர்
பாற்காரர்
வர்ணம் பூசுபவர்
ஆசிரியர்
உழவர்
பேருந்து ஓட்டுநர்
காவல்துறை அதிகாரி
தீயணைப்பு ஊழியர்



# வாழ்வோமே புரிந்துணர்வுடன்



புரிந்துணர்வு என்பது எல்லாத் தரப்பு உறவு முறைகளுக்கும் பொதுவான ஒன்று. புரிந்துணர்வு இல்லையென்றால் வேலை, சொந்தங்கள், நட்பு என்று எல்லாவற்றையும் இழக்க வேண்டிய சூழல் உருவாகி விடும்.

**பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் இடையேயான புரிந்துணர்வு:** பிள்ளைகள் தங்களது நண்பர்களைப் பற்றிக் கூறுவது சரியாகத் தான் இருக்கும். காரணமில்லாமல் தங்கள் பிள்ளைகள் நண்பர்களாக ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்ற புரிந்துணர்வு தான் பிள்ளைகளைப் பெற்றோருடன் நெருங்கச் செய்து அவர்கள் தவறான பாதைக்குச் செல் வதற்கான தயக்கத்தை ஏற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தும். படிப்பில் நாட்டமில்லை என்றால் அந்தக் குழந்தைக்கு மனதில் ஏதும் குழப்பங்கள் இருக்கலாம் அதைப் பெற்றோர் தான் புரிந்து கொண்டு நல்லதொரு மாற் றத்தை ஏற்படுத்த வேண் டும்.

**தம்பதிகளுக்கு இடையேயான புரிந்து ணர்வு:** கணவன், மனைவி ஒருவர் குறித்து மற்றவர் நன்கு அறிந்து வைத்திருக்கவேண்டும். சாதாரணமாக மறு பாலாருடன் பேசினாலே சந்தேகத்தோடு பார்ப் பவர்கள் மத்தியில் சரியான புரிந்துணர்வு இல்லையென்று தான் கூற வேண்டும். தன்னுடைய கணவனோ அல்லது மனைவியோ தப்பான பாதைக்குப் போக மாட்டார்கள் என்ற அடிப்படைத் தெளிவு இருந்தால், வீணான சண்டைகளுக்கும் அதன் மூலம் வரக் கூடிய விவாகரத்துக்கும் அவ சியமே இருக்காது. நண்பர்களின் மத்தியிலே தோன்றும் சண்டைகளுக்கும் அதுவே தான் காரணம், போதிய புரிந் துணர்வு இல்லாமை தான். தற்போது இணையத்தள நண்பர்களின் எண்ணிக்கைகள்தான் அதிகம். தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலைகள் இருக்கலாம், உடல் நலமில்லாமல் இருக்கலாம், இன்னும் எவ்வளவோ...அதற்காக கோபப்பட்டு இனிய நண்பர்களையும் இழந்து விடும் வாய்ப்புகள் தான் அநேகம்.

வேலை செய்யுமிடத்தில் கூட அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் சம்பளம் வாங்கு கிறவர்களுக்குமிடையே போதிய புரிந் துணர்வு இருந்தால் தான் அந்த நிறுவனம் பல வெற்றிகளைப் பெற முடியும். அவ்வாறில்லாது, ஒவ் வொருவரும் ஒவ்வொரு திசைகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் அனைவருக்கும் தானே நஷ்டம். ஆகவே புரிந்துணர்வு தான் வெற்றிகளுக்கும் சொந்தங்களை வலுப்படுத்துவதற்குமான பாலம் என்று கூறலாம். வாழும் காலம் மிகக் குறைவு. அதிலும் மகிழ்ச்சியுடன் வாழ்வதென்பது மிகவும் கடினம். ஆகவே எம்மால் முடிந்த அளவுக்குமகிழ்ச்சியை நாமே உருவாக்குவது தான்சிறப்பு. அதற்குப் புரிந்துணர்வு தான் மிக முக்கியமானதும், சிறந்தது மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கியும், ஜெயலலிதாவும் ஒரே மாதிரியான தீர்மானம்

### சீமான் வரவேற்பு

சென்னை, செப். 17

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் ஒரே மாதிரியான தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளனர். தமிழ் தலைவர்கள் எல்லோரும் ஓரணியில் இருக்கின்றனர் என்பதை ஏற்றுக் கொண்டு, சர்வதேச விசாரணை கொண்டு வரப்பட வேண்டும். இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் இலங்கைக்கு எதிராக, முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலத்தின் தேவை குறித்து இந்தத் தீர்மானம் இன்று (நேற்று) தமிழக சட்ட மன்றத்தில் நிறைவேறியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை நடைபெற்று வரும் இந்த நேரத்தில் கொண்டுவரப்பட்ட இந்த தீர்மானம் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட இதே தீர்மானத்தை அண்மையில் கொண்டு வந்திருந்தார். இதே தீர்மானத்தை சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்துள்ளார். ஆக, தமிழ் தலைவர்கள் அனைவர் மத்தியிலும் ஒரே கருத்தே நிலவி வருகிறது.

இலங்கைக்கு எதிராக தமிழக முதல்வர் கொண்டு வந்த தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம். இதை வெறுமனவே விட்டுவிடாமல் இந்திய மத்திய அரசும் இதே போல் ஒரு தீர்மானத்தை கொண்டு வர வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

மாநில அரசு கொண்டு வரும் தீர்மானத்தை நாங்கள் மதிப்பளிக்கத் தேவையில்லை என்று கூறிக் கொண்டு இருக்காமல், மத்திய அரசு சர்வதேச விசாரணை தேவை என்ற கோரிக்கையை கொண்டு வர வேண்டும். 8 கோடி மக்களின் பிரதிநிதியாக இருக்கும் தமிழக சட்ட மன்றத்தில் கொண்டு வரப்படும் தீர்மானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய கட்டாயத்தில் இந்திய மத்திய அரசு இருக்கிறது. எனவே இந்த தீர்மானம் நிச்சயமாக மத்திய அர சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இதற்கான ஒரு தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறேன் – என்றார்.(த–5)

# வீதி நெரிசலுக்கு உடனடித் தீர்வு தராவிட்டால் பணிப் பகிஷ்கரிப்பு

### தனியார் பஸ் சங்கத் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, செப். 17

வீதி நெரிசலைக் கட்டுப்படுத்தி தனியார் பஸ் சேவைக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் தாங்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மருதானை சீ.எஸ்.ஆர். மண்டபத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை விடுத்த கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடுமையான வீதி நெரிசலால் தனியார் பஸ் சேவைக்கு பலத்த இடையூறு ஏற்பட்டுள்ளது. அமைச்சர்களினதும் அவர்களது பரிவாரங்களினதும் வாகன நடமாட்டத்தால் வீதிகள் அடிக்கடி மூடப்பட்டு கடும் வாகன நெரிசல் ஏற்படுகின்றது. அண்மையில் யாகொடமுல்ல பிரதேசத்தில் நடந்த டிபெண்டர் வாகன விபத்தில் பொலிஸார் சரிவர நடந்துகொள்ளாததால் அப்பாவி பஸ் சாரதிகள் இருவர் நட்டஈடு செலுத்த வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மினுவாங்கொடை பொலிஸார் இவ்விபத்து விடயத்தில் பாரபட்சமாக நடந்துகொண்டதால் அவ்விரு சாரதிகளினதும் அடிப்படை மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. இது தொடர்பில் நாங்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடரவுள்ளோம்.

அமைச்சர்களும் அவர்களது பரிவாரங்களும் கண்மூடித்தனமாக வாகனங்களைச் செலுத்தி போக்குவரத்து விதிகளைச் சீர்குலைக்கும் போது பொலிஸார் அதைக் கண்டும் காணாமலும் போய் விடுகிறார்கள். ஆனால், தவறிழைக்காத பஸ் சாரதிகளைக் காய்ச்சி எடுத்துவிடுகிறார்கள். இந்த அவல நிலைக்கு விரைவில் தீர்வு கிடைக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் நாங்கள் பணிநிறுத்தம் செய்து போராடுவோம். இவ்வாறு கூறினார் கெமுனு விஜேரத்ன. (த–)

# அடுத்த இரண்டு ஆண்டுகளில் வெப்பம் மேலும் அதிகரிக்கும்

லண்டன், செப். 17

உலகளவில் இதுவரை இருந்துள்ளதைவிட அடுத்த இரு ஆண்டுகளில் வெப்பம் மேலும் அதிகரிக்கும் என பிரிட்டிஷ் வானிலை அலுவலக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

உலகளவில் இதுவரை இருந்துள்ளதைக் காட்டிலும் அடுத்த இரண்டு ஆண்டுகளே மிகவும் வெப்பம்மிக்க ஆண்டுகளாக இருக்கக்கூடும் என பிரிட்டனின் வானிலை அலுவலகம் கூறியுள்ளது.

புவியை வெப்பமாக்கும் வாயுக்களின் வெளியேற்றம் சூழலின் மீது தாக்கத்தை ஏற்டுத்தி பெரிய மாற்றங்களைக் கொண்டுவரக் கூடும் என பிரிட்டிஷ் வானிலை அலுவலகம் எச்சரித்துள்ளது.

பசுபிக் பகுதியில் பெரிய அளவில் ஏற்பட்டுள்ள எல் நிஞ்யோ விளைவு உலகம் முழுவதும் வெப்பத்தை அதிகரிக்கும் என ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளதாக அந்த அலுவலகம் கூறுகிறது.

உலகின் மற்ற பகுதிகளில் வெப்பம் அதிகரிக்கும் அதேவேளையில், ஐரோப்பாவில் கோடை காலம் வழக்கத்தைவிட குளிர்ச்சியாக இருக்கும் எனவும் அந்த ஆய்வு கூறுகிறது.

கடந்த 1961 மற்றும் 1990ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் புவியின் மேற்பரப்பில் இருந்த சராசரி வெப்ப அளவைவிட இந்த ஆண்டு அது 0.68 சென்ரிகிரேட் அதிகரித்து புதிய உச்சத்தை எட்டியுள்ளது என்பதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இயற்கையின் போக்கு காரணமாக உலகளவில் வெப்ப மாறுதல்கள் ஏற்படுவது வழக்கமான ஒன்றுதான் என்றாலும், மனிதர்களால் வெளியேற்றப்பட்ட புவியை வெப்பமடையச் செய்யும் வாயுக்களின் காரணமாகவே இந்த ஆண்டு கூடுதலாக வெப்பம் அதிகரித்துள்ளது என பிரிட்டிஷ் வானிலை மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ஸ்டீபன் பெர்ச்சர் கூறுகிறார்.

இந்தப் போக்கு அதிகரிக்குமாயின் அடுத்த ஆண்டு வெப்பம் மேலும் கூடும் என்றும், அது தொடரவே செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகரித்துவரும் கரியமில வாயுவின் வெளியேற்றத்துடன், பெருங்கடல்களில் ஏற்படும் மாறுதல்களின் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்கள் பெரிய அளவில் இருக்கும் என சந்தேகிக்க வேண்டியுள்ளது என பிரிட்டிஷ் காலநிலை அவதான அலுவலகத்தின் மற்றொரு அதிகாரியான பேராசிரியர் ஆடம் ஸ்கைபி கூறுகிறார்.

புவியின் காலநிலை மாற்றத்தில் தற்போது இடம்பெற்றுவரும் மாறுதல்கள் ஒரு திருப்புமுனையாக அமையும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

பசுபிக் பெருங்கடல் பகுதியில் இரண்டு விதமான காலநிலை மாற்றங்கள் உருவாகி வருகின்றன என்றும் அவை குறுகிய, நீண்டகால அடிப்படையில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் பசுபிக் பகுதியில் ஏற்பட்டுள்ள எல் நிஞ்யோ விளைவு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை சராசரியாக மாற்றம்காணும் என்றும் பேராசிரியர் ஆடம் ஸ்கைஃபி கூறுகிறார்.

இதன் காரணமாக கடும் வறட்சி நிலவும் பகுதிகளில்பெருமழையும், சராசரி மழை பெய்யும் பகுதிகளில் வறட்சியும் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார். (த–வ)

# வட்டு. வடக்கு கற்பக விநாயகர் தேர்த்திருவிழா இன்று

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் கற்பக விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வருவார்

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய தீர்த்தவாரியான கணேச குண்டத்தில் பெருமாள் தீர்த்தமாடுதலும் இடம்பெறும். (த)


வீடு விற்பனைக்குண்டு

இல, 140/10, 4 ஆம் குறுக்குத் தெரு,யாழ்ப்பாணத்தில் வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 076 877 7718
077 935 7122

சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்

Kids Park Pre-School & Day Care Campus

528, பலாலி வீதி, திருநெல்வேலி.

சிறுவர் நேய மாதிரி முன்பள்ளி செயற்திட்டம்

கல்விக் கண்காட்சியும் சிறுவர் நேய கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளும்

காலம் : 19,20.09.2015 (வரும் சனி,ஞாயிறு)
காலை 8.30 - மாலை 5.00 மணிவரை

இடம் : திருநெல்வேலி சிறுவர் பூங்கா வளாகம்

தலைவர் : திருமதி கர்னி தனபாலன் (பணிப்பாளர்)
Dip in Pre School Education (Distinction)
PRC-Guidance & Counseling (1st Class)
Cert in Child Development



பிரதம விருந்தினர்

திருமதி கதிர்காமநாதன் சௌந்தரநாயகி
Queen Mari's College University of Madras

ஆர்வலர்கள், முன்பள்ளி சிறார்கள், பெற்றோர், குடும்பத்தினர், ஆசிரியர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

சிறுவர் பூங்கா முன்பள்ளி வளாக சமூகத்தவர்கள்.

காண்பிக்கப்படவுள்ளவை:-

- சர்வதேச, தேசிய மாதிரி ஒன்றிணைந்த முன்பள்ளிப்பாடத்திட்ட பிரயோகங்கள்.
- சிறார்களின் கற்றலுக்குகந்த ஆக்கப்படைப்புக்கள், விளையாட்டுக்கள்.
- தகவல் தொழில்நுட்ப, கணினி விளையாட்டு மாதிரிகள்...
- ஆங்கில மொழி விருத்தி களப்பயிற்சிகள் (ELOCUTION CLASS)
- மணல், நீர், உபகரணங்கள் மூலமான களப்பயில்வுகள், விளையாட்டுக் கற்றல்.
- ஒலி, ஒளியுடனான இரவு-பகல் விளையாட்டுக்கள் மூலமான கற்றல்.
- சித்திரம், சங்கீத, நடன, நாடக, பொம்மலாட்ட ஆற்றுகைக் கலைக் கற்கைகள், சுயகற்றலுக்கான செயன்முறைகள்.
- முன்பள்ளிச் சிறார்களுக்கான விசேட உள-உடல் நல வழிகாட்டல்,
- ஆலோசனை வளங்கல், வீட்டை மையமாகக் கொண்ட கற்றல்.
- முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், முன்பள்ளி முகாமைத்துவக் குழுக்களுக்கான முன்பள்ளி நிபுணரினால் வழங்கப்படும் விசேட ஆலோசனைகள், முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட வரைபுகள்...
- புக் லாப் நிறுவனத்தின் அதிரடியான மலிவு விலையில் சிறார்களுக்கான நூல்கள், கற்றல் உபகரணங்கள்....

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பங்குபற்றி புதிய தோத்தை உருவாக்கும் எம்முடன் இணைந்து பயணியுங்கள்.

முக்கிய குறிப்பு: முன்பள்ளிச் சிறார்களை அழைத்து வர விரும்பும் ஆசிரியர்கள் தவறாமல் முற்கூட்டியே பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொலைபேசி இல. 077 645 6974


# எள்ளுக்காட்டுச் சிறுமியின் எச்சங்கள் குறித்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்குக

### சட்ட வைத்திய அதிகாரிக்கு கிளிநொச்சி நீதிவான் பணிப்பு

கொழும்பு, செப். 17

கிளிநொச்சியில் எள்ளுக்காடு பகுதியில் மீட்கப்பட்ட 3 வயது சிறுமியின் எச்சங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி மற்றும் ஜீன்டெக் நிறுவனத்திற்கு அறிவித்தல் பிறப்பிக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த எச்சங்கள் தொடர்பிலான பகுப்பாய்வு அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படாததால் வழக்கு விசாரணையைத் தொடர முடியாதுள்ளதாக நீதிமன்றத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உருத்திரபுரம் எள்ளுக்காடு பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் ஜெருசா என்ற 3 வயது சிறுமி கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி காணாமற்போயிருந்தார்.

ஜூலை மாதம் 21 ஆம் திகதி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய வயல்வெளியிலிருந்து சிறுமியின் எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்தச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 15 வயதான சந்தேகநபரை இம்மாதம் 30 ஆம் திகதி வரை தொடர்ந்தும் சிறுவர் இல்லத்தில் தங்க வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மூன்று வயது சிறுமியைத் தாம் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகச் சந்தேக நபர் ஒப்புதலளித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு மீண்டும் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிசி ஆலை வாடகைக்குத் தேவை**

அரிசி ஆலை இயந்திரத்துடன்
வாடகைக்குத் தேவை.

(64730)(12.15.17) தொடர்பு :075 8080 778

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் உள்ள வீட்டுக்கு பணிப்பெண்
தேவை
வயது 25-40 சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

(64738)(12.15.17) தொடர்பு : 077 030 3982


# காலி-மாத்தறை நெடுஞ்சாலையில் இ.போ.ச. அதிசொகுசு பஸ்சேவை

*காலிக்கு 400 ரூபா; மாத்தறைக்கு 500 ரூபா*

கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து காலி – மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை நேற்று முன்தினம் முதல் அதிசொகுசு பஸ்சேவையை ஆரம்பித்துள்ளது.

புறக்கோட்டை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் பயணத்தைத் தொடங்கும் இந்த அதிசொகுசு பஸ்கள் கோட்டை, கொம்பனி வீதி, யூனியன் பிளேஸ், தர்மபால மாவத்தை, கண் வைத்தியசாலை, வோட் பிளேஸ், பொரளை, கொட்டா வீதி, பத்தரமுல்ல, பெலவத்தை, பன்னிப்பிட்டிய, கொட்டாவ வழியாக அதிவேக நெடுஞ்சாலையை அடையும் என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.குணதிலக்க தெரிவித்துள்ளார்.

காலிக்குச் செல்லும் பஸ்கள் காலை 6.30, 9.00, 11.00 பிற்பகல் 1.00, 3.00, 5.00, 7.00 இரவு 9.00 ஆகிய நேரங்களிலும், மாத்தறைக்குச் செல்லும் பஸ்கள் காலை 7.30, 9.30, 11.35, பிற்பகல் 3.00, 5.00, 6.00, 7.00 இரவு 9.00 ஆகிய நேரங்களிலும் புறக் கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் எனவும் புறக்கோட்டையிலிருந்து காலிக்கு 400 ரூபாவும், மாத்தறைக்கு 500 ரூபாவும் ஒரு வழிக் கட்டணமாக அறவிடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன் புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து கதிர் காமம், தங்காலை, சூரியவெவ, முலட்டியன, தெனியாய மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளுக்கான இ.போ.ச வின் அதிசொகுசு பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருவது குறிப்பிடத்தக்கது. (த–சி)


## பகிரங்க ஏல விற்பனை

தேசியசேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு 31.05.2014 வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 19.09.2015 சனிக்கிழமை அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம்.

01. யாழ்ப்பாணம்
02. சங்கானை
03. மானிப்பாய்
04. திருநெல்வேலி
05. வவுனியா

ஏலத்தை இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி (64736)(14.15.17)

**வேலையாள்கள் தேவை**

கடை ஒன்றுக்கு கணினி இயக்குநர்
தேவை.
லொத்தர் காட்டில் ரிக்கட்
விற்பனையாளர் தேவை.

(64730)(12.15.17) தொடர்பு : 075 521 5200


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக ஆசிரியை திருமதி டெனிசியா
சுலோஜனா சண்முகதாசன் அவர்களின் பாசமிகு தந்தையார்
**சின்னத்தம்பி மகேஸ்வரன்**(ஓய்வு பெற்ற
ஆயுள்வேத வைத்தியர்)
அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம் (64591)(12.15.17)


**வாடகைக்கு**

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் மருத்துவ பீடத்திற்கு 300m தூரத்தில் அமைந்துள்ள 4 அறை குசினி,வரவேற்பறையும் ஹோலும் மாபிள் பதிக்கப்பட்டது. attached Bathroom கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(64730)(12.15.17) தொடர்பு : 077 922 9486


## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
## எழுதுமட்டுவாழ் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மூன்று கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2015

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கடைகளினை 15.10.2015 ஆம் திகதியிலிருந்து நீண்டகால குத்தகைக்கு வழங்கு வதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

குறித்த கடைகளினை குளிரகம், காகிதாதிகள், புத்தகசாலை, புதினப்பத்திரிகை விற்பனை நிலையம், போன் திருத்தகம், கைத்தொலைபேசி விற்பனை நிலையம், போட்டோபிரதி செய்யும் கடை, பிஸ்கட் கடை, பலவகை பழ வியாபாரம், மிக்சர் கடை, அழகுசாதனப்பொருள் விற்பனை போன்ற விற்பனை நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்த முடியும்.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி** :- 17.09.2015 தொடக்கம் 30.09.2015 வரை.
**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி** :- 01.10.2015 மதியம் 12 மணி வரை.
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி** :- 01.10.2015 பி.ப 2.00 மணி.
**கேள்வி திறக்கப்படும் இடம்** :- பிரதேசசபை தலைமை அலுவலகம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | இடம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (Vat,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (Vat,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் - 1 | எழுதுமட்டுவாழ் சந்தை வளாகம் | 240000.00 | 2400.00 | 750.00 |
| 02 | கடை இலக்கம் - 2 | எழுதுமட்டுவாழ் சந்தை வளாகம் | 240000.00 | 2400.00 | 750.00 |
| 03 | கடை இலக்கம் - 3 | எழுதுமட்டுவாழ் சந்தை வளாகம் | 240000.00 | 2400.00 | 750.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 17.09.2015 தொடக்கம் 30.09.2015 வரையான காலப்பதிக்குள் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமை பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்க வேண்டும்.
2. விண்ணப்பிக்க விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும், ஆள் அடையாளத்தினை உறுதிப் படுத்தும் தேசிய அடையாள அட்டை பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
3. பூரணப்படுத்திய கேள்விப் படிவத்தினை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப் படும் தொகையினை செலுத்த வேண்டும் முதல் மாத வாடகைப்பணத்தினை அடுத்து வரும் (ஒவ்வொரு மாதமும்) 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தண்டப்பணமாக 10% அறவிடப் படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச் சித்திகாரராகத் தெரிவு செய்யப்படுபவர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப்பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ள வேண்டும்.
6. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்றுமாத கடைவாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
7. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் சாவகச்சேரி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
9. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வ.தர்சினி,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
17.09.2015

## மரண அறிவித்தல்

### சண்முகம் செல்வராசா



வரணி, இடைக்குறிஞ்சியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்வராசா 12.09.2015 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சிவமணி தம்பதியரின் பாச மிகு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பரிபூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், ராஜலக்சுமி அம்மா அவர்களின் பாசமிகு கணவரும், துஜிதா, நிருசன், நிருசா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் தேவராஜா, சிவாசினி(லண்டன்), ஜெயராசா (பிரான்ஸ்), ராஜினி(பிரான்ஸ்) காலஞ்சென்ற தவராசா மற்றும் சிவசுப்பிரமணியம்(லண்டன்), சியாமளா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சந்திரசேகரம் - பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.09.2015 பிரான்சில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி,
வரணி. (18868)(14.17.15)

தகவல் :
ச.பாலசுந்தரம்(சகோதரன்)
077 990 5310

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ
### சச்சிதானந்தகுருக்கள் வாலாம்பிகை அம்மா



சீரிமலையைப்பிறப்பிடமாகவும் வேலம்பிராய் கண்ணகை அம்மன் கோயிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக்குருக்கள் வாலாம்பிகை அம்மா 16.09. 2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தக் குருக்களின் (வேலம்பிராய் கண்ணகை அம்மன் கோயில் தர்மகர்த்தா) மனைவியும் சிவசாமிக் குருக்கள் (விசவர்த்தனை முருகன் கோயில் - சுழிபுரம்), சோமாஸ்கந்தக்குருக்கள் (பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்), சர்வேஸ்வரக் குருக்கள் (சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோயில்), நாகபூஷணி (மீசாலை), மகாலட்சுமி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2015) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் மீசாலையில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை. (64729)(14.15.17)

தகவல் :-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை அறிக்கை மீதான தீர்மானம் இந்தமாத இறுதியில் நிறைவேற்றலாம்

### மனித உரிமைகள் சபை பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கை குறித்த ஐ.நா மனித உரிமைகள் சபையின் அறிக்கையின் மீதான தீர்மானம் இந்த அமர்வின் இறுதியில் விவாதிக்கப்பட்டு நிறை வேற்றப்படலாம் என சபையின் பேச்சாளர் ரூபர்ட் கோல்வில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து லண்டன் பி.பி.சிக்கு கோல்வில் தெரிவித்துள்ளதாவது, இது ஒரு பெரிய அறிக்கை. 9 ஆண்டு காலகட்டத்தில் நடந்த விடயங்களை அது பரிசீலிக்கிறது. அது இலங்கைக்குள்ளும் வெளிநாடுகளிலும் எப்படி பார்க்கப்படுகிறது என்பதை பார்க்கவேண்டும். பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஒரு தீர்மான வரைவு முன் வைக்கப்படும். அதையொட்டி ஒரு தீர்மானத்தை அவர்கள் கொண்டு வர விரும்பினால் அவர்களுக்குள் பேச்சு வார்த்தை நடத்தி, அதை அடுத்த சில நாட்களில் கொண்டு வருவார்கள்.

இந்தத் தீர்மானம் சபை அமர்வின் இறுதி நாட்களில் விவாதிக்கப்படும். தீர்மான வரைவில் பிரச்சினை இருந்தால் கடுமையான விவாதங்கள் இருக்கும். அதில் விட்டுக்கொடுப்புகள் தேவைப்படலாம். எனவே பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆனால் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் நாடுகளைக் கட்டுப் படுத்துபவை அல்ல. அவை சட்டங்கள் அல்ல. ஆனால் அவை, உலகின் மிக உயர்ந்த மனித உரிமை அமைப்பின் கருத்து. எனவே இந்த அமைப்பில் உள்ள இலங்கையின் சக நாடுகள் அடுத்து என்ன நடக்கும் என்பதை முடிவு செய்வார்கள். அதே போல், மனித உரிமைகள் சபையில் இயற்றப்படும் தீர்மானங்கள் எல்லாம் ஐ.நா. பொதுச்சபைக்கும் கொண்டு செல்லப்படும். எனவே இது சர்வதேச நாடுகளின் கவனத்தில் இருக்கும். எனவே இந்த அறிக்கைக்கு எந்த அளவு ஆதரவு இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் எல்லாம் நடக்கும்–என்றார்.

இலங்கை இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தால் என்ன நடக்கும் என்று கேட்டதற்கு பதிலளித்த கோல்வில், அதைப் பற்றி மனித உரிமை சபை தான் முடிவு செய்ய வேண்டும்.ஆனால் அந்த விடயத்தில் மற்ற பலரும் தலையிடுவார் கள். சர்வதேச ஊடகங்கள், தன் னார்வ நிறுவனங்கள் எல்லாம் இதை கையிலெடுக்கும். இந்த விடயம் இந்த அளவுக்கு வந்ததற்கே தன்னார்வக்குழுக்கள் ஒரு காரணம். இது முடிவல்ல. இது ஒரு ஆரம்பமாகத் தான் இருக்கும். இலங்கையில் நடந்ததைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, அது குறித்து அனைத்து சமுதாயங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து, மேலே செல்ல இது ஒரு உண்மையான சந்தர்ப்பத்தை தருகிறது. அந்தப் பாதையை இலங்கை தேர்ந்தெடுத்தால் அதற்கு சர்வதேச அளவில் மிகப்பெரிய நல்லெண்ணம் கிடைக்கும்.அதை இலங்கை விரைவில் செய்யும் என்பதுதான் எங்கள் நம்பிக்கை– என்றார். (வ)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**பெரிய கடை/நவீனசந்தை மேல்மாடி/பஸ்நிலையம்/ நல்லூர் சந்தைக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2015**

**மாநகர சபைக்குச் சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக்கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாநகர சபையால் கோரப்படுகின்றன.**

* கேள்விப்படிவக்கட்டணம் - ரூ. 500.00 + VAT + NBT
* கேள்விப்பிணைப்பணம் - ரூ. 10.000.00
* கேள்விப்படிவம் விநியோகித்தல் - 17.09.2015
* கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 30.09.2015 மு.ப. 10.00 மணிவரை
* கேள்வி திறத்தல் - 30.09.2015 மு.ப. 10.30 மணிக்கு

கேள்விப்படிவம் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்து. மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறையிலிட்டு ஒட்டி அரக்கு முத்திரையிட்டு உறையின் மேற்பகுதியில் தாங்கள் தெரிவுசெய்யும் கடையின் இலக்கத்தைக் குறித்து "ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபால் மூலமான விண்ணப்பங்கள் 30.09.2015 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகர சபைக்கே உரியது. மேலதிக விவரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்

| கடைகள் விவரம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை (தலா ஒரு கடைக்கு) |
|---|---|
| நல்லூர் சந்தைக்கடை | |
| இல.15/3, | 180,000.00 |
| இல.15/9 | 180,000.00 |
| பஸ்நிலையம் | |
| இல.11 | 1,800,000.00 |
| மேல்மாடி | |
| இல.04 | 2,040,000,00 |
| இல.05 | 2,040,000.00 |
| பெரியகடை | |
| இல.33 | 1,200,000,00 |

**குறிப்பு:**

* தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 11%வற் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் சேர்த்து செலுத்தல் வேண்டும்.
* கடைகள் யாவும் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு விடப்படுகின்றது.
* கடை ஒப்படைக்கப்பட்டு 03 மாத காலத்திற்குள் திறந்து வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

தவறுமிடத்து குறிப்பிட்ட கடைகளுக்கு மீள கேள்வி கோரப்படும்.

**பொ.வாகீசன்,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

**திருமதி தங்கச்சியம்மா சிவஞானசுந்தரம்**

தோற்றம் : 13.04.1934 மறைவு: 16.09.2015



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சியம்மா சிவஞானசுந்தரம் நேற்று (16.09. 2015) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- தங்கம் தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரேசம்பிள்ளை, ரோகினிஅம்மா, தியாகராசா, உருத்திரன் மற்றும் நடராசா (Australiya), குலசேகரம்பிள்ளை (Australiya) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சசிதேவி, விஜயராணி, கமலராணி, ஜெயராணி, சிறிகாந்தன், றஞ்ஜனி, அபிராமி ஆகியோரின் அன்புத் தாயும், விக்கினேஸ்வரன், சருகுணநாயகி, யோகேந்திரலிங்கம், பரஞானம், இக்னேசியஸ் சுரேஸ், உதயகுமார், காலஞ்சென்ற உமையாள் ஆகியோரின் மாமியும், சிவகுருநாதன், விஜயலக்ஷ்மி, சின்னம்மா, தி. பரமேஸ்வரி, சிவயோகம், உ.பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஜனார்த்தனன், சுதர்சனன், மனோஜ், சில்வியா, மாதங்கி, பரந்தாமன், சேவிதா, தீபிகா, ஸ்ரீசாஜகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், இன்று (17.09.2015) வியா ழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணிக்கு பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

162, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(64739) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**வேலுப்பிள்ளை கந்தையா**

ஒட்டுசுட்டானை பிறப்பிடமாகவும் 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா 15.09.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-அன்னம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சேதுப்பிள்ளைப்பிள்ளை யின் அன்புக்கணவரும் சிவகுருவின் அன்புச் சகோதரனும் தவலட்சுமி, டயபதிலட்சுமி, வேபி மலர், குணமலர் (ஓய்வுபெற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் சங்கீத ஆசிரியர்), காலஞ்சென்ற பார்த்தீபன் மற்றும் இராஜினி (ஆசிரியர் இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமலிங்கம் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் புதுக்குடியிருப்பு) செல்வராஜா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் புதுக்குடியிருப்பு) குமாரசாமி(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை சிட்டை ஆய்வாளர்), இரட்ணராஜா (லண்டன்), ஜோதிலிங்கம் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயந்தன், நிறஞ்சன், நிசாந்தப்பிரியா, பிரணவன், விபீசன், பிருந்தா, எழில்குமரன், தமிழினி, ரட்ணாங்கி, வினுசன், ஆரபி, ஜெயப்பிரியா, அனுசியா, உருத்திரன், றஜிந்தா, கமலநாதன் ஆகியோரின் அன்பு பேரனும் சோபியா, சங்கீத், ஆரணி, கேனுயன், அபினா, பவிஸ், பைரவி, சைந்தவி, இஷான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஜோதிலிங்கம் (ஆசிரியர்) 0778378608
நிரஞ்சன் 0777424458
விபீசன்(லண்டன்) 00447805091605
இரட்ணராஜா(லண்டன்) 00447508421318
ஜெயந்தன்(லண்டன்) 00447760884046
எழில்(லண்டன்) 00447479277776

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை

பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கையின் விசாரணை அறிக்கை வெளியிடப்பட்ட வேளையில் – இலங்கைப் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு சந்திப்புக்களில் ஈடுபட்டு வரும் நிலையில், தமிழகச் சட்டமன்றத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடர் நேற்றுக் காலை ஆரம்பமானது. இதன்போது, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராம், தனிநபர் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். அதில் அவர் தெரிவித்ததாவது:–

**தீர்மானம்**

ஒரு இலட்சியத்தைப் பெறுவதும், அதனை ஈடேற்ற எத்தகைய தியாகம் செய்யவும் தயாராகிவிடுவது என்ற உள்ளம் உரம் பெறுவது என்பதும் சாமான்யமான காரியமல்ல! அந்த சாதனையில் நாம் வெற்றி வாகை சூடுவோம் என்ற திட நம்பிக்கை இருத்தல்வேண்டும்' என்றார் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் அமுத மொழிக்கு ஏற்ப, ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் இலட்சியத்துக்கும், இலங்கை வடக்கு மாகாண சபையின் தீர்மானங்களுக்கும் வலுச்சேர்க்கும், இலங்கை வாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யும் வகையிலும்; இலங்கையில் உள்நாட்டு போர் நடைபெற்ற போது சர்வதேச சட்டம் மற்றும் ஜெனிவாவிலுள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை நிகழ்த்தியவர்கள் அனைவர் மீதும் சர்வதேச விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தை இந்தியாவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டுவர வேண்டும் என்றும், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலை எடுத்தால், அதனை மாற்ற இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கேட்டுக் கொள்கின்றது – என்று முன்மொழிந்தார்.

இதனைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேசையில் கைதட்டி வரவேற்றனர். அதன் பின்னர், இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, அனைத்துக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசினர். இறுதியில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த–வ–5)

## இலங்கையின்

அந்த விசாரணை அறிக்கையில் சட்டவிரோதப் படுகொலைகள் என்ற தலைப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:–

இலங்கை குறித்து விசாரணை மேற்கொண்ட அலுவலகத்துக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இலங்கை பாதுகாப்பு படையினரும், அவர்களுடன் தொடர்புபட்ட துணைப் படையினரும் பொதுமக்கள் மற்றும் ஏனையவர்களுக்கு எதிராகப் பரந்துபட்ட படுகொலைகளில் ஈடுபட்டனர் என நம்புவதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன.

குறிப்பிட்ட சில காலப் பகுதியில் தமிழ் அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும், வர்த்தகர்களும் இலக்கு வைக்கப்பட்டனர். ஆனால் படுகொலை செய்யப்பட்டவர்களில் அப்பாவிப் பொதுமக்களும் காணப்பட்டனர்.

இந்தப் படுகொலைகள் ஒரு குறிப்பிட்ட வகையில் இடம்பெற்றுள்ளன என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. உதாரணத்துக்குப் பாதுகாப்புப் படையினரின் காவலரண்கள், சோதனைச் சாவடிகள், இராணுவ முகாம்களுக்கு அருகிலும், மேலும் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப் பட்டிருந்தவேளை தனிநபர்களும் படுகொலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இவைகள் நீதிமன்றின் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட்டால் இடம் பெற்ற சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்துப் போர்க்குற்றங்களாகவோ அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கருதப் படலாம்.

விடுதலைப்புலிகள் தங்களுக்கு ஆதரவில்லாதவர்கள் எனக் கரு திய தமிழ், முஸ்லீம், சிங்களவர்களைப் படுகொலை செய்தமைக்கான வலுவான ஆதாரங்கள் உள்ளமையும் இலங்கை குறித்து விசாரணை மேற்கொண்ட அலுவலகத்துக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தெரியவருகின்றது.

விடுதலைப்புலிகள் தங்களுக்கு எதிரான அரசியல் சக்திகள், தகவல்களை வழங்குபவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள், மாற்றுக்கருத்துடைய தமிழ் அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள் மற்றும் எதிர்க்குழுக்களைச் சேர்ந்தவர்களை இலக்கு வைத்தனர். விடுதலைப் புலிகளின் கண்மூடித்தனமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மற்றும் கிளைமோர் தாக்குதலில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர்.

இவைகள் நீதிமன்றின் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட்டால் இடம் பெற்ற சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்துப் போர் குற்றங்களாகவோ அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கருதப் படலாம்.

மே 18 ஆம் திகதி விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மற்றும் தனிநபர்கள் சட்டவிரோத படுகொலைக்குள்ளானமை குறித்த குற்றச்சாட்டுகள் பற்றியும் விசாரணைகள் இடம்பெற்றன. இவர்களில் சிலர் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்கள். பல விடயங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளபோதிலும், கண்ணால் கண்டவர்களின் சாட்சிகள், புகைப்பட ஆதாரங்கள்,வீடியோ ஆதாரங்கள் போன்றவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது பலர் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்கான போதிய தகவல்கள் உள்ளன.

இவைகள் நீதிமன்றின் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட்டால் இடம் பெற்ற சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்து போர்க்குற்றங்களாகவோ அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கருதப் படமுடியும்–என்றுள்ளது. (த–வ–5)

## சர்வதேச நீதிபதிகள்

கக் காணாமற்போகச் செய்தல், மனிதாபிமான உதவிகளை மறுத்தல் உள்ளிட்ட குற்றங்கள் நிகழ்த்தப் பட்டுள்ளன.

இந்த நிலையில், நீதியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நீதிபதிகள் – வழக்குத் தொடுப்பவர்கள் – சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றம் (hybrid special court) அமைக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. அறிகையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் கொடூரமான வன்செயல்கள் திரும்பத்திரும்ப இடம்பெற்றிருப்பதாக அடையாளம் காணப்பட்டிருப்பது, இந்த குற்றங்களை உறுதிப்படுத்துவதாக உள்ள அதேவேளை, ஆண்டுக் கணக்கில் இதற்கான நீதி மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த வன்முறைகளுக்குக் காரணமான பல கட்டமைப்புக்கள் இன்னமும் தொடருகின்ற நிலையில், அங்கு இவற்றை விசாரிப்பதற்கான உள்நாட்டு பொறிமுறைகள் தொடர்ச்சியாக தோல்வியடைந்து வந்துள்ளதால், பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில், சந்தேகமும், கோபமும், நம்பிக்கையீனமும் அதிகரித்திருக்கிறது.

உள்நாட்டுப் பொறிமுறை மூலம் இவற்றை விசாரிப்பதற்கான புதிய அரசின் கரிசனை குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதிலும், இலங்கையின் நீதித்துறை இன்னமும் இதற்கு தயாரானதாக இல்லை.

பாதிக்கப்பட்டவர்கள்–சாட்சிகளுக்குப் போதிய பாதுகாப்பின்மை, இந்தப் பெரியளவிலான சர்வதேசக் குற்றங்களை விசாரிக்கும் அளவுக்கு உள்நாட்டு நீதிக் கட்டமைப்பு போதாமை, பத்தாண்டுகால அவசரகாலச் சட்டம், மோதல் மற்றும் குற்றத்துக்குத் தண்டிக்கப்படாத நிலை, வாக்குறுதி மீறல்கள் ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்புத்துறை மற்றும் நீதித்துறை என்பன சீர்கெட்டு, ஊழல் மயப்பட்டு இருப்பதும் இவற்றை உள்நாட்டில் உரிய வகையில் விசாரிக்க முடியாமல் போனமைக்கான காரணங்களாகும்.

அடக்குமுறை சார்ந்த கட்டமைப்புகளையும், நிறுவனக் கலாசாரத்தையும் களையும் நடவடிக்கைகளை இலங்கையின் புதிய அரசு மேற்கொள்ளவேண்டும்–என்றார். (த–வ–5)

## தமிழருக்கு

வலகத்தின் விசாரணை அறிக்கை என்பவற்றை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப் பட்ட இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அத்துடன் தமிழக சட்டமன்றத்தில், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவினால், சர்வதேச விசாரணை கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக் கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து யோசித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தோமோ அதற்குப் பலன் கிடைத்துள்ளது. முதலில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். வடக்கு மாகாண சபையின் பிரேரணையை மனதில் எடுத்து, அதில் உள்ள விடயங்களை முன்னிறுத்தி அவற்றின் அடிப்படையில் எங்களுக்குச் சாதகமாக ஒரு பிரேரணையை கொண்டு வந்து, ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளார்.

இதிலிருந்து இலங்கைத் தமிழ் மக்களும், தமிழகத் தமிழர்களும் ஒருமித்த குரலுடன் சர்வதேச விசாரணை நடைபெற்றால்தான் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பதைச் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

இலங்கை அரசு எத்தனையோ நடவடிக்கைகள் எடுத்தபோதும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் இதைத்தான் செய்யவேண்டும் என்று ஆணித்தரமாகச் சொல்லியுள்ளமை எங்களுக்கு நன்மையைத் தரும் என்று நம்புகின்றோம். அடுத்து பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவேண்டும். அந்தப் பிரேரணையை நாங்கள் நல்ல விதத்திலே தயாரிக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எங்கள் சட்டத்தரணிகள் அங்கு சென்று மேற்கொள்ளவேண்டும்.

இதுதான் எங்களின் அடுத்த கட்ட வேலை. அந்தப் பிரேரணையை எத்தனை நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன என்ற அடிப்படையில்தான் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப் படும்.

அறிக்கையில் சில விடயங்களை ஆணித்தரமாகக் குறிப்பிட்டாலும், ஐ.நா. மனித உரிமைச் சபையின் நாடுகள் சேர்ந்து இவ்வாறு தான் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டால், (அறிக்கையை பலவீனப் படுத்தும் வகையில்) ஆணையாளர் அலுவலகம் அதற்கு இடமளிக்க வேண்டும் [illegible] எனவேதான் பிரேரணை, அறிக்கையில் ஆணித்தரமாக குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதான வகையில் அமைந்து அது நிறைவேற்றப்படவேண்டும் – என்றார். (த–5–101)

## சர்வதேச விசார

திக்கட்டத்தில் போரில் ஈடு பட்ட இரு தரப்பினராலும் போர்க் குற்றங்களும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களும் செய்யப்பட்டிருப்பதாகக் கூறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று வெளியான நிலையில் லண்டன் பிபிசியிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நிபுணர்களை அழைத்து வருவது தொடர்பாக தங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறியிருக்கும் ராஜித சேனாரத்ன, இலங்கையில் தற்போது நீதித்துறை சுயேச்சையாக இயங்குவதாகவும் தெரிவித்தார். அரசுக்கு எதிராகப் பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருப்பதைப் பார்த்தாலே இது புரியும் என்றும் அவர் கூறினார்.

போர்க் குற்றங்களை யார் செய்திருந்தாலும், ஜனாதிபதி, பிற தளபதிகள், பாதுகாப்புச் செயலர் என யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் நடவடிக்கை எடுக்கத் தங்கள் அரசு தயாராக இருக்கிறது என்றும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

போரின்போது என்ன நடந்தது என்பது குறித்து முழுமையான தகவல்களைப் பெற, தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்டதைப் போல எல்லாத் தரப்பினரையும் உள்ளடக்கிய உண்மை அறியும் ஆணையம் ஒன்றை அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் ராஜித் சேனாரத்ன தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டபோது, சர்வதேச சமூகமும் தமிழ் சமூகமும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லையென்றும், ஆனால், அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது அதனைச் செயற்படுத்த வேண்டுமென இரு தரப்புமே கோரினார்கள் என்றும் சுட்டிக்காட்டிய ராஜித சேனாரத்ன, விசாரணை சரியான முறையில் நடைபெற்றால் தமிழ் சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெற முடியுமென்றும் கூறினார்.

எந்தத் தாமதமுமின்றி விரைவிலேயே தேவையான ஆணையங்கள் அமைக்கப்பட்டு, நடவடிக் கைகள் எடுக்கப்படுமென்றும் ராஜித தெரிவித்தார். (த–வ)

## நம்பகரமான

என்பதை உறுதிப்படுத் துவதற்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில், உரையாற் றும்போதே, அமெரிக்கப் பிர திநிதி மிச்செல் ரோல்பேர்ட் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நா. சிறப்பு அறிக்கை யாளர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, கண் காணித்த விடயங்களை நாம் மதிக்கிறோம்.

அவர் தனது அறிக்கை யில் கூறியுள்ள படி, சர்வ தேச சமூகத்தின் நம்பிக்கை மற்றும், இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்க ளின் நம்பகத் தன் மையை ஏற்படுத்துவதில் தான், நீதிச் செயல்முறை களில் இலங்கை காட்டும் ஆர்வம் தங்கியிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். (த–5)

## ஐ.நாவின்

பங்காளர்களுடனும் இணைந்து பணியாற்றுவதற்கு பிரிட்டன் எதிர்பார்க்கிறது.

கடந்தகால விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் வகையிலும், இலங்கையில் நிலையான அமைதி மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதற்கும் உதவும் வகையில் இணக்கப்பாட்டுத் தீர்மானம் ஒன்றை கொண்டு வர முடியும் என்று நம்புகிறோம்.

இந்த முக்கியமான அறிக்கை வெளியிடப்பட்டதை வரவேற்பதுடன், இதற்காகப் பணியாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் பணியாளர்களையும் மதிக்கிறோம். ஐ.நாவின் விசாரணைக்காகப் பிரிட்டன் கடுமையாக வாதிட்டது என்று கூறினார். (த–வ)

## தமிழ் மக்களுக்கு

இலங்கையில் 2001ஆம் ஆண்டுக்கும், 2009ஆம் ஆண்டுக்கும் இடையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச நீதிபதிகள், சட்டவாளர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய விசேட கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்று நேற்று ஜெனிவாவில் வெளியிடப் பட்ட ஐ.நா. அறிக்கையில் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று ஜெனிவாவில் இருந்து உதயனு'க்கு கருத்துத் தெரிவிக்கும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத் தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அறிக்கையில் படையினரின் பெரியளவிலான குற்றங்கள் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. நாம் கோரியவாறு சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

ஐ.நா. விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு நிராகரிக்கவில்லை. அவற்றுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. எனவே, ஐ.நா. விசாரணை அறிக்கையின் பரிந்துரைகள் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். இதனை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தக் கூட்டத் தொடரில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஒன்றிணைந்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

பரிந்துரைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டால்தான் தமிழ் மக்களுக்கு உண்மையான நீதி – தீர்வு கிடைக்கும் – என்றார். (த–சி)

## இனப்படுகொலை

சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கண்மூடித்தனமான ஷெல் வீச்சு, சட்டவிரோதப் படுகொலைகள், பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுதல், மிக மோசமான சித்திரவதைகள், பாலியல் வல் லுறவு, சிறுவர்களை படைய ணிகளில் சேர்த்தல் உட்பட பெரியளவிலான குற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

மனித குலம் முழுவதற்கும் கடும் கரிசனையை ஏற்படுத்தக்கூடிய விவரங்கள் விசாரணை அறிக்கை மூலம் வெளியாகியுள்ளன.

புலம்பெயர் தமிழர்கள் உட்பட சகலசமூகத்தினரும் இந்த அறிக்கையை மறுத்தல் என்ற நிலையிலிருந்து மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அங்கீகரித்தல் மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபாடுகளுக்கான சந்தர்ப்பமாக கருதவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த–வ)

## நீதி நிலைநாட்டப்படு

என்று உறுதியளித்துள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ள போதிலும் விசேட கலப்பு நீதி மன்றம் குறித்து எதனையும் தெரிவிக்க மறுத்துள்ளது.

இலங்கை அரசு நல்லிணக்கம் மற்றும் அமைதியை ஏற்படுத்துவதற்கான உரிய பொறிமுறைகளை ஏற்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேச்சுகளை மேற்கொள்ளும் என்றும், ஐ.நாவின் பரிந்துரைகளுக்கு உரிய முக்கி யத்துவம் அளிக்கும் என்றும் வெளி விவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணித் தொழிலின் கௌரவத்தைக் கெடுக்காதீர்

## சட்டத் தரணிக்கு அத்தனகல்ல நீதிவான் கடும் எச்சரிக்கை

கொழும்பு, செப். 17

சட்டத்தரணிப் பதவி கௌரவமானது. அதைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு அப்பாவி மக்களைத் திக்குமுக்காடவைக்க முயலாதீர் என அத்தனகல்ல மேலதிக நீதிவான் செல்வி காவிந்தா நாணயக்கார அவரது நீதிமன்றத்தில் எதிராளியாக முன்னிலையாகியிருந்த சட்டத் தரணியொருவருக்கு கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

திவுலப்பிட்டிய, நைவல வீதியில் நைவல தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னால் 17.03.2013இல் நடந்த வாகன விபத்தொன்றில் படுகாயமடைந்த ஜனக சம்பத் எனும் 20 வயது இளைஞன் சம்பந்தப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிர்த்தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிக்கே நீதிவான் இந்தக் கடுமையான எச்சரிக்கையை விடுத்தார்.

சம்பவதினம்சைக்கிளில்குறித்த இளைஞன் வந்தபோது அவருக்குப் பின்னால் வந்த பென்ஸ் காரொன்று சைக்கிளை மோதி விழுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து வெயங்கொடை பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பின்னர் அந்தக் கார் குறிப்பிட்ட சட்டத்தரணிக்குச் சொந்தமானது எனத் தெரிய வந்ததும் அவர் கைது செய்யப்பட்டு அத்தனகல்ல நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முறைப்பாட்டாளரான இளைஞனைத் தனது காரால் பின்பக்கமாக மோதித் தள்ளிவிட்டுச் சற்றும் பொறுப்பில்லாமல் தப்பிச் சென்றமை கௌரவமான சட்டத்தரணியொருவர் செய்யக்கூடியகாரியமல்ல என நீதிவான் சுட்டிக்காட்டினார்.

இவ்வழக்கின் அடுத்த விசாரணை ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த–)

## 3,848 இலங்கையருக்கு கொரியாவில் தொழில்

இவ்வருடம் ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையிலான எட்டு மாதக் காலப் பகுதியில் 3 ஆயிரத்து 848 இலங்கையர்கள் கொரிய நாட்டில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுச்சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்திருக்கின்றது.

இவர்களுள் 193 பேர் ஏற்கனவே அங்கு தொழில்புரிந்தவர்கள் என [illegible] 3,655 பேர் புதிதாகத் தொழில் வாய்ப்புப் பெற்றுச்சென்றுள்ளதாகவும் பணியகம் மேலும் தெரிவித்திருக்கின்றது.

2012 தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட கொரியமொழிப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு அங்கு தொழில்வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கடற்றொழில், விவசாயம், உற்பத்தித்துறை போன்றவற்றிலேயே இவர்களுக்குத் தொழில்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பணியகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (த)

## கபினற் அமைச்சர்கள் எண்ணிக்கை 30ஆக மட்டுப்படுத்துமாறு மனு

### உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

கொழும்பு, செப் 17

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை முப்பதாக மட்டுப்படுத்தி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமெனக் கோரும் மனுவொன்றைச் சட்டத்தரணியொருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களின் உச்சபட்ச எண்ணிக்கை முப்பதாக இருக்க வேண்டுமெனவும் அந்த எல்லை தற்போது மீறப்பட்டதால் தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதெனவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணியான உனுவட்டன கொஸ்வத்தகே அருண லக்சிரி தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

19ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின் 46.4 மற்றும் 46.5 சரத்துகளின்படி அமைச்சரவைக்கு உச்சபட்சமாக முப்பது அமைச்சர்களே நியமிக்கப்படவேண்டும். எனினும், தற்போது அந்த எல்லை மீறப்பட்டுள்ளது. இதன்மூலம் தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதால் அமைச் சர்களின் எண்ணிக்கையை முப்பதாகக் குறைக்குமாறு உயர்நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டுமென அவர் தனது மனுவில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.(த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூட்டன் வி.கழக முடிவுகள்





கரணவாய், செப். 17
வடமராட்சி உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம், கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம், அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகம் மற்றும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இந்த ஆட்டத்தில் நெடியகாடுஇளைஞர்அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 4:0 என்ற அடிப்படையில் நவசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை அன்பாலயம் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் 6:0 என பெருவெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 5:2 என்ற அடிப்படையில் நக்கீரன் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம–108)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், செப். 17
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக மும் அராலி ஏ.எல். இளைஞர் கழக மும் இணைந்து யாழ், வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல் களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம–23)

## பல்கலையின் தடகளத்தொடர்

யாழ்ப்பாணம், செப். 17
யாழ். பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான வருடாந்தத் தடகளத் தொடர் எதிர்வரும் சனிக்கிழமை (19.09.2015) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (20.09.2016) யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் போட்டிகள் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் என். ஞானகுமரன் கலந்து கொள்ளவுள்ள அதேநேரம்சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தடகள அணியின் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் கதி ரியக்கவியல்துறை நிபுணருமான வைத்தியகலாநிதி ஏ.அன்ரன் ஜெனிலும் கலந்துகொள்ளவுள்ளார். (ம)


## யாழ். பிரதேச இளைஞர் மன்ற அணி யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு



யாழ்ப்பாணம், செப். 17
யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சங்கங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணியும் நல்லூர் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணியும்மோதிக்கொண்டன.

நான்கு சுற்றுக்களைக்கொண்ட இறுதியாட்டத்தின் முதற் சுற்றில் யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி 12:8புள்ளிகள் எனவும் இரண்டாம் சுற்றில் 9:5 புள்ளிகள் எனவும் மூன்றாம் சுற்றில் 14:10 புள்ளிகள் எனவும் நான்காம் சுற்றில் 11:9 புள்ளிகள் எனவும் நல்லூர் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றஅணியை வீழ்த்தியது. (ம–86)



## இன்றைய மோதல்கள்

**ஏ.எல். வி.கழகத்தொடர்**

யாழ்ப்பாணம், செப். 17
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துணைவி சென்.நீயூஸ்ரார் அணியை எதிர்த்து அராலி அணி மோதவுள்ளது. (ம–23)

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக் கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி மாவத்தை அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை அணி மோதவுள்ளது. (ம–23)

## செந்தாரகை விளையாட்டுக் கழகத்தின் முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 17
பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு. கிராஞ்சி செந்தாரகை பி அணிக்கும் முழங்காவில் விநாயகர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முழங்காவில் விநாயகர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வலைப்பாடு ஜெகமீட்பர் அணிக்கும் வட்டக்கச்சி இளந்தளிர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கிராஞ்சி செந்தாரகை ஏ அணிக்கும் தேவன்பிட்டி சென்.சேவியர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை ஏ அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நாச்சிக்குடா சென். ஜேம்ஸ் அணிக்கும் வேரவில் கலைமகள் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.ஜேம்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



இரணை மாதா நகர் சென்.மேரிஸ் அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் பி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணை மாதா நகர் சென். மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

## மருதங்கேணி பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட செயலக அணி இறுதி மோதலுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 17
யாழ். மாவட்ட செயலக நலன்புரி கழகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் அரசஅதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் விளையாட மருதங்கேணி பிரதேச செயலக அணியும் யாழ்.மாவட்ட செயலக அணியும் தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் மருதங்கேணி பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட செயலக அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். மாவட்ட செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம–23–422)


## வானவில்லை வீழ்த்தியது வளர்மதி

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மூளாய் வளர்மதி அணியை எதிர்த்து அராலி வானவில் அணி மோதிக்கொண்டது. இதில் மூளாய் வளர்மதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்தில் எட்டு வருடத்தை நிறைவு செய்துள்ளார் டோனி



இந்திய அணியின் ஒருநாள் மற்றும் ரி–20 ஆட்டங்களுக்கு தலைவராக இருக்கும் டோனி நேற்றுடன் தலைமைத்துவத்தில் எட்டு வருடங்களை நிறைவுசெய்தார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதலாவது ரி–20 உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணிக்குக் கடந்த 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி தலைமைதாங்க ஆரம்பித்த டோனி முதலாவது தொடரிலேயே உலகக்கிண்ணம் வென்றார். அதன்பின் இந்திய அணியின் ராசியான தலைவர் என்ற பெயரைப் பெற்ற அவர் 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தையும் வென்றார். இதன்மூலம் இரண்டு உலகக் கிண்ணங்களை வென்ற முதல் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.

2011–12இல் இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர்களை 4:0 என்று இந்தியா தோற்றது. இந்தச் சம்பவத்தால் டோனிக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது. ஆனால், அடுத்த வருடமே ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை 4:0 என்று ,வென்று தலைவர் பதவியை தக்க வைத்துக் கொண்டார். கடந்த வருடத்தின் இறுதியில் டெஸ்ட் தலைமைத்துவத்தில் இருந்து விலகிய டோனி தொடர்ந்தும் ரி–20, ஒருநாள் ஆட்டங்களுக்கான அணிகளுக்கு தலைவராக உள்ளார். (ம)

# ஆஸியை பங்களாதேஷ் வீழ்த்தும்
## பங்களாதேஷ் தலைவர் ரகிம் தெரிவிப்பு

பங்களாதேஷ் – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் பாகிஸ்தான், இந்தியா போன்ற அணிகளை வீழ்த்தியதைப் போன்று ஆஸியையும் வீழ்த்துவோம் என்று பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகிம் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா அணி கிளார்க், ஹடின், ரியான் கரிஸ், கிறிஸ் ரோஜர்ஸ் மற்றும் வற்சன் போன்ற மூத்த வீரர்கள் இல்லாமல் இரண்டு புதுமுக வீரர்களுடன் வருகிற 28ஆம் திகதி பங்களாதேஷ் வருகிறது.இரண்டு ஆட்டங்கள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் ஒக்ரோபர் 9ஆம் திகதி தொடங்குகிறது.

குறித்த தொடர் தொடர்பாக பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகிம் தெரிவித்ததாவது:– வலிமைமிக்க மூத்த வீரர்கள் அல்லாத ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நாங்கள் கடுமையாகப் போட்டியிடுவோம். அவர்களுடைய வாய்ப்புக்களை தட்டிப்பறித்து வெற்றிபெற்றால் அது சிறப்பானதாக அமையும். ஆஸ்திரேலியாவை வீழ்த்த இப்படி ஒரு சிறந்த வாய்ப்பு கிடைக்கும் என நினைக்கவில்லை. இந்த வருடத்தில் நாங்கள் சிறப்பாகவும், தொடர்ந்தும் விளையாடி வருகிறோம். அதனால்தான் வெற்றிகள் வந்திருக்கின்றன. ஆகவே, அதேபாதையில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய முக்கிய இலக்கு. நிச்சயம் ஆஸியை வீழ்த்துவோம் – என்றார். (ம)





தமது பிள்ளைகளின் படங்களை வலைத்தளங்களில் பகிர்வதில் விளையாட்டு வீரர்கள் என்றுமே பின்தங்குவதில்லை. அந்த வகையில் தனது மகனுடன் உறங்குவதைப் போன்ற படத்தை சமூகவலைத்தளங்களில் ஒன்றான முகப்புத்தகத்தில் பதியவிட்டுள்ள நெய்மர் தங்களுக்கு நிகராக எவரும் இல்லை என்று படத்தின் கீழே பதியவிட்டுள்ளார். இந்தப் பதிவு பதியவிடப்பட்ட சில மணிநேரத்துக்குள்ளேயே 10 லட்சம் லைக்ஸை அள்ளியது. (ம)

# ஓய்வை அறிவித்தார் பென்னட்டா

நடப்பு வருடத்துடன், தான் ரென்னிஸ் தொடர்களுக்கு விடை கொடுப்பதாக அமெரிக்காவின் ரென்னிஸ் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிய பென்னட்டா தெரிவித்தார்.

தனது ஓய்வு தொடர்பாக பென்னட்டா தெரிவித்ததாவது:– இந்த ஆண்டுடன் சர்வதேச ரென்னிஸில் இருந்து நான் விடைபெறுகிறேன். இது நான் ஒரு மாதத்துக்கு முன்பே எடுத்த முடிவு. இதைவிட சிறந்த முறையில் எனது ரென்னிஸ் வாழ்க்கையை நிறைவு செய்துவிட முடியாது. இந்த ஆண்டில் யுகான் மற்றும் பீஜிங் போட்டிகளில் மட்டும் விளையாட திட்டமிட்டிருக்கிறேன். இந்த முடிவில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது. ஒருவேளை சிங்கப்பூரில் நடக்கும் முன்னணி வீராங்கனைகளின் தொடருக்கு விளையாட தகுதி பெற்றால் அதில் ஆடுவேன்.

ரென்னிஸ் களத்தை பொறுத்த வரை ஆண்டுக்கு 24 வாரங்கள் விளையாட வேண்டி இருக்கும். அதில் வாரம் முழுவதும் போராட வேண்டும். போராட வில்லை என்றால் மோசமான முடிவுதான் கிடைக்கும். எல்லா நேரமும் இப்படியொரு ஆற்றல் எனக்கு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதனால் ஓய்வு பெறுவதற்கு இதுவே உகந்த நேரம் என்று – இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். உண்மையிலேயே என்னை நினைத்து நான் மிகுந்த பெருமிதம் அடைகிறேன்– என்றார். (ம)

# சிறந்த சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் மட்டுமே!



தற்போதிருக்கும் சுழற்பந்து வீச்சாளர்களில் சிறந்தவர் அஸ்வின் என்று இந்திய அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

அஸ்வின் தொடர்பாக சாஸ்திரி தெரிவித்ததாவது:– இலங்கையில் அஸ்வின் அசத்தினார், காரணம் அவர் மிகவும் பொறுமையாகவும் பந்துக்குப் பந்து சிந்தித்தும் செயற்பட்டதே. அவரிடமிருந்து அணி என்ன எதிர்பார்க்கிறது என்பதை புரிந்து கொண்டார். இதனை அவர் உணர்ந்து விட்டார். அமைதியுடன், சாதுரியமும், புத்திசாலித்தனமும் அவரிடம் சேர்ந்துள்ளது. உலகின் சுழற்பந்து வீச்சாளர் தற்போது அஸ்வினே. ஆஸியின் நேதன் லையன் இலங்கையின் கேரத் இவர்களும் சிறந்த வீரர்களே. ஆனால் அஸ்வினிடம் உள்ள புதிதுபுதிதான பந்து வீச்சு அவர்களிடம் இல்லை. குமார் சங்கக்காரவுக்கு அவர் வீசிய விதம் இதனை நமக்கு உணர்த்துகிறது. சங்கா போன்ற ஒரு அற்புதமான அதி திறமையான வீரரை 4 முறை ஆட்டமிழக்கச் செய்வது அரிதான ஒரு காரியம் – என்றார். (ம)

# இங்கிலாந்து அணி அறிவிப்பு
## பாகிஸ்தானுக்கு எதிரான தொடருக்காக

இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று விதமான தொடர்களும் எதிர்வரும் ஒக்ரோபர் 13ஆம் திகதி முதல் நவம்பர் 30ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இவற்றில் டெஸ்ட் தொடர் ஒக்ரோபர் 13ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரையும், ஒருநாள் தொடர் நவம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையும், ரி–20 தொடர் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையும் நடைபெற இருக்கிறது. இந்தத் தொடர்களை இங்கிலாந்து அணி அறிவித்துள்ளது.


டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் விவரம்:–

குக் (தலைவர்), மொயீன் அலி, ஜேம்ஸ் அன்டர்சன், சபர் அன்சாரி, ஜோனி பேர்ஸ்ரோவ், இயான் பெல், பிரோட், ஜோஸ் பட்லர், ஸ்ரீவன் பின், அலெக்ஸ் கேல்ஸ், லியாம் பிளங்கெட், அதில் ரசித், ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் ரெய்லர், மார்க் வுட்.

ஒருநாள் தொடரில் இடம்பெற்றுள்ள வீரர்களின்விவரம் வருமாறு: மோர்கன் (தலைவர்), மொயீன் அலி, ஜோனி பேர்ஸ்டோவ், சாம் பில்லிங்ஸ், ஜோஸ் பட்லர், பின், அலெக்ஸ் கேல்ஸ், அதில் ரசித், ஜோ ரூட், ஜேசன் ராய், ரெய்லர், டொப்லெய், டேவிட் வில்லே, கிறிஸ் வோக்ஸ், மார்க் வுட் –

ரி–20 தொடருக்கான அணி வீரர்களின் விவரம் வருமாறு:–

மோர்கன் (தலைவர்), மொயீன் அலி, சாம் வில்லிங்ஸ், ஜோஸ் பட்லர், அலெக்ஸ் கேல்ஸ், கிறிஸ் யோர்தான், பார்ரி, அதில் ரசித், ஜோ ரூட், ஜேசன் ராய், டொப்லேய், ஜேம்ஸ் வின்ஸ், டேவிட் வில்லே, கிறிஸ் வோக்ஸ், மார்க் வுட். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்
DAY CLASS
2015 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது
PHYSICS
BY
MR.N. கபிலன்
MON → FRI 2.00 - 3.30
ஆரம்பம் :- 18.09.2015
FRIDAY 2.00pm




களத்தில் ஓட்டங்களைச் சேர்ப்பதில் மட்டுமல்ல, புதிய சிகை அலங்காரத்தில் கலக்குவதிலும் விராட் கோக்லிக்கு நிகர் கோக்லிதான். சமீபத்தில் டெல்லிக்கு சென்ற கோக்லி, தனது புதிய தலைமுடி மற்றும் தாடியுடன் ரசிகர்களை கவர்ந் தார். தலைமுடியை ஒட்ட வெட்டுவதில் ஆர்வம் கொண்ட விராட், இந்த முறை யும் அது போன்ற தோற்றத்தையே தேர்வு செய்துள்ளார். மேலும் தனது புதிய தோற்றத்துடன், ரசிகர்களுடன் சேர்ந்து செல்பியும் எடுத்தாராம். (ம)

# இந்திய அணியிடம் கவனமாக இருக்க வேண்டும் தென்னாபிரிக்க முன்னாள் வீரர் குளூஸ்னர் எச்சரிக்கை

தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ரி-20, 5 ஒரு நாள் ஆட்டம் மற்றும் 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட நீண்ட தொடர்களில் விளையாட உள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி தொடர் தொடங்குகிறது. இந்த நிலையில் இந்திய அணியிடம் மிக எச்சரிக்கையாக வும் கவனமாகவும் இருக்க வேண்டும் என்று தென்னாபி ரிக்க வீரர்களுக்கு அந்த அணியின் முன்னாள் வீரர் குளூஸ் னர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த தொடர் தொடர்பாக குளூஸ்னர் தெரிவித்ததாவது- ஐ.பி.எல். தொடரில் விளையாடிய அனுபவம் தென்னாபி ரிக்க வீரர்களுக்கு உதவியாக இருக்கும். ஸ்டெய்ன், மோர் கல், பிலாண்டர் ஆகியோர் இந்திய ஆடுகளங்களில் சிறப் பாக வீசக் கூடியவர்கள். ஆனால் வீராட்கோக்லி தலைமை யிலான இந்திய டெஸ்ட் அணி சமீபத்தில் இலங்கைக்கு எதிராக சிறப்பாக விளையாடியது. இதை கவனத்தில் கொண்டு தென்னாபிரிக்க அணி இந்தியாவிடம் எச்சரிக் கையாக இருக்க வேண்டும். இளம் இந்திய அணிசகல துறைக ளிலும் மிரட்டலான ஆட் டத்தை வெளிப்ப டுத்தி வருகிறது. சிறிய வாய்ப்புக் கிடைத்தா[illegible] இந்திய அணி அதனை முழு மையாகப் பயன் படுத்திவிடும்.இலங் கைக்கு எதிராக இதுவே நடந்தது என்றார். (ம)



பகுதி நேரமாக பணிக்கு
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு திட்ட வரைவு எழுதித் தரக் கூடியவர்கள் தேவை.
அனுபவம்,திறமைக்கு ஏற்ப கவர்ச்சி கரமான சம்பளம் வழங்கப்படும்.
விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:-
Jaffnavacancy@gmail.com

ஆங்கிலம்
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் : 19.09.2015
SAAMSON Experts in English Training
077 621 4567
021 320 3313

இலவச ஆங்கில வகுப்பு
இடம்: ELAS institute
Time:- 9am to 1pm 19/09/2015 சனிக்கிழமை
நான்கு மணித்தியாலத்தில் ஆங்கிலம்.
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
Contact No: 076 697 3040, 021 221 2410

BIT Semester 1,3,5 & Project classes
Sem 3 at 6.30 am & Sem 5 at 9 am Saturday
By:T.Tharmmendra(BIT,MCSE,MBCS)-0779785796
இதுவரை 40 இற்கும் மேற்பட்டோரிற்கு BIT degree
2015 இல் second upper உட்பட 14 பேர் PASS
28/23, Manaltharai lane(by lane of Palaly Rd), Kandarmadam.
BIT Passed out students please contact me to work with a famous Software development company with 3 to 4 lakhs monthly Salary. 10 Degree students need for every year

வேலை தேடிக் களைத்து விட்டீர்களா?
கவலையை விடுங்கள்!
வேலை தேடுபவர்களுக்கு ஓர் கலங்கரை விளக்கு
WINSTAR JOB BANK
(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)
* Accounting * Receptionist * Office Admin
* Management * Security * Part time Jobs
WINSTAR JOB BANK
106, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி.
10.00 am 4.00 pm
021 320 2789

CCTV
துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
CCTV, Network Cabling
Copper Cabling & Wireless
100% தொழில் சார் செயன்முறை பயிற்சி நெறி
Next Batch : 2nd-Oct-2015
iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்
021- 4926222, 076-7013060

# குத்துச்சண்டைப் போட்டியில் டவே மயக்கமடைந்து சாவு

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரபல குத்துச்சண்டை வீரர் டவே சாவடைந்த சம்பவம் அந்நாட்டு ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளதுடன், குத்துச் சண்டைக்கு எதிரான கருத்துக்களையும் தோற்றுவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் டேவேக்கும், பிலிப்பைன்சின் கார்லோ மகாலிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை குத்துச்சண்டைப் போட்டி நடைபெற்றது. இதில் டேவேயின் முகத்தில் கார்லோ குத்தியதில் டவே உடனே ம[illegible] மடைந்தார். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தீவிர சிகிச்சை அளிக் கப்பட்டது. இருந்தும் சிகிச்சை பயனின்றி நேற்று சாவடைந்தார். இதனைத் தொடர்ந்து குத்துச்சண்டைக்கு தடை விதிக்க வேண்டும் என ஆஸ்திரேலிய மருத்துவக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. டேவுக்கு இரண்டு குழந் தைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# தாயகத்துக்கே பாடமெடுக்கும் மகேல

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் துடுப் பாட்ட ஆலோசகராக இலங்கை அணி யின் முன்னாள் நட்சத்திர வீரர் மகேல ஜெயவர்த்தன செயற்படவுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடை பெறவுள்ளது. இந்தத் தொடருக்காக இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக மகேல செயல்பட விருப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது. டெஸ்ட் ஆட்டங்களில் ஆலோசகராக மகேல செயற்படவுள்ள அதேநேரம் ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்க ளின் ஆலோசகராக கொலிங்வூட் செயற்படுவார் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 19.09.2015(சனி) 8.00 am
வங்கியியல் கற்கைநெறிகள்
Banking courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: GCE O/L 6 passes with 5 credits
கணக்காய்வாளர் கற்கைநெறிகள்
Chartered Accounting courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification: GCE A/L 3 passes
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
Tp. 0212223382
0212229149

A/L தொழிநுட்பப்பிரிவு
இன்று ஆரம்பம்
* விஞ்ஞானத்துக்கான தொழிநுட்பம் இரசாயன இயக்கவியல்
(வியாழன், வெள்ளி - 4.00 pm - 5.30 pm)
by R. Ramanan (B.Sc in Agric/MBA (pera)
* பொறியியல் தொழிநுட்பம் கட்டட நிர்மாணிப்பு
(செவ்வாய், புதன் - 4.00 pm - 5.30 pm)
by Eng. S.Sutharshan (B.Sc in Eng./PGDM/PGD in Structural Analysis)
* உயிர்முறைகள் தொழிநுட்பம் நில அளவையியலும் பட்டங்களும்
(சனி, ஞாயிறு - 4.00 pm - 5.30 pm)
by Pon. Sivakumar (B.Sc in Agric)
யூனிவேர்சல்
Hotline:- 0775 344 669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09.2015 இல்